

# வட இந்திய பயண அனுபவங்கள்

தி. ஞானசேகரன்

# வட இந்திய
# பயண அனுபவங்கள்

**தி. ஞானசேகரன்**

ஞானம்
பதிப்பகம்

27ஆவது வெளியீடு

**நூல் :**
வட இந்திய பயண அனுபவங்கள்
(பயண இலக்கியம்)

**ஆசிரியர் :**
தி.ஞானசேகரன்

**பதிப்பு :**
முதலாம் பதிப்பு, டிசம்பர், 2013.

**பதிப்பகம் :**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06,
இலங்கை.
தொலைபேசி: 0094 11 2586013
தொலைநகல்: 0094 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**கணினி வடிவமைப்பு :**
ஞா. பாலச்சந்திரன்

**Book:**
'Vada Inthiya Payana Anupavangal'
(Travelogue)

**Author :**
T. Gnanasekaran

**Edition** :
First Edition, December, 2013.

**Published by:**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6.
Sri Lanka.
Tel: 0094 11 2586013
Fax: 0094 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Type setting and Designed by:**
G. Balachandran

**Price:**
SL Rs. 300/=
US $ 5

**ISBN: 978-955-8354-33-9**

CC BY NC This licensed work is free to use, share, remix, and redistribute with attribution, but does not permit for any commercial work.

# சமர்ப்பணம்

என்
உயிருக்கினிய தங்கை
அமரர்
**லலிதா**விற்கு

# நன்றிகள்

*இந்தப் பயணத்தை ஏற்படுத்தித் தந்த மகன்* **ராஜன்**
*தினக்குரல் பத்திரிகையில் இந்தத் தொடரை வெளியிட்ட* **இ. பாரதி.**
*அணிந்துரை வழங்கிய பேராசிரியர்* **வ. மகேஸ்வரன்**
*இந்நூலை வடிவமைத்த மகன்* **ஞா. பாலச்சந்திரன்**
*அட்டைப்பட வடிவமைப்புச் செய்த* **கோ. சுதர்சினி**
*என்னை ஊக்குவித்துவரும்* **வாசகர்கள்**

**அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்!**

# பதிப்புரை

ஞானம் பதிப்பக வெளியீடுகளில் பயண இலக்கிய நூல்கள் வரிசையில் இது மூன்றாவது நூல்.

ஏற்கனவே தி. ஞானசேகரனின் அவுஸ்திரேலியப் பயணக் கதை, ஞா. பாலச்சந்திரனின் 'அங்கோர் உலகப் பெருங்கோயில்' ஆகிய நூல்கள் ஞானம் பதிப்பக பயண இலக்கிய நூல்களாக வெளிவந்துள்ளன.

பயண இலக்கியத்துறை தமிழில் அதிகம் வளர்ச்சி காணவில்லை. அதுவும் ஈழத்தைப் பொறுத்தவரை இவ்வகை இலக்கியம் படைப்போர் மிகவும் குறைவாகவே உள்ளனர். அதற்கான காரணம், வெளிநாட்டுப் பயணங்கள் செல் பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும் அவ்வாறு செல்பவர்கள் தமது பயண அனுபவங்களை இலக்கியமாக்கும் வல்லமை அற்றவர்களாக இருப்பதுமே எனலாம்.

பயண இலக்கியமென்பதற்குச் சில இலக்கண வரையறை கள் இருக்கின்றன. வெளிநாடு சென்று திரும்பும் ஒருவர் அந்த நாட்டைப்பற்றியும் அந்த நாட்டில் தான் பெற்ற அனுபவங்கள் பற்றியும் எழுதிவிட்டால் மட்டும் போதாது, அந்த நாட்டின் புவியியல் வரலாறு, மற்றும் சமூக பொருளாதார அரசியல் தொடர்பான விடயங்கள், கலை பண்பாட்டு விடயங்கள், சமய ரீதியான விடயங்கள், அந்த நாட்டின் சுவாத்தியம், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், எமது நாட்டு வாழ்க்கை முறைக்கும் அந்நாட்டு வாழ்க்கைமுறைக்கும் உள்ள ஒப்புமை வேற்றுமைகள் போன்ற விடயங்களை எழுதியிருந்தால் மட்டுமே அதனைப் பயண இலக்கியம் எனக் கொள்ளலாம்.

வட இந்திய பயண அனுபவங்கள் என்ற இந்தக் கட்டுரைத் தொடர் ஏற்கனவே தினக்குரல் வார வெளியீட்டில் தொடராக (2008இல்) வெளிவந்து பலரது பாராட்டைப் பெற்றது. பல வாசகர்களது வேண்டுகோளுக்கு இணங்க தற்போது நூலாக வெளிவருகிறது. **இந்தப் பயண இலக்கியத்தில் யாத்திரை – சுற்றுலா ஆகிய இருவேறு துறைகளின் சங்கமம் ஒன்றுக்கொன்று முரணில்லாத வகையில் இணைவதைக் காணலாம்.** அந்த வகையிலும் இந்தப் பயண இலக்கியம் ஒரு புதிய அனுபவத்தை வாசகர்களுக்கு ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

**– பதிப்பகத்தார்**

# அணிந்துரை

**பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை**

தலயாத்திரை, ஷேத்திராடனம், என்ற பதங்கள் இந்துப் பண்பாட்டுப் பெருவெளியில் விஸ்தாரமான அர்த்தம் கொண்டவை. வெறுமனே பக்திவயப்பட்டு ஒரு அல்லது பல ஆலயங்களை நோக்கிய பிரயாணம் அல்ல அது; அதற்கான தனித்துவமான பின்புலங்களினூடாக உருவாகிய ஒரு பண்பாட்டின் வெளிப்பாடு அது. அதற்குள் பக்தி உண்டு, சமயம் உண்டு, சமூகவியல் பரிமாணம் உண்டு, நிலவரைவியல் உண்டு மேலாக அரசியல் பரிமாணமும் அதற்கு உண்டு.

தலயாத்திரை என்பது பக்தியின் அடியாக எழுவது என்பதுதான் அதனுடைய முதனிலை. ஒரு தலத்தின் மீதான அல்லது ஒரு கடவுளின் மீதான அதீத பக்தி அந்தத் தலத்தைத் தரிசித்து மன அமைதிகாணத் தூண்டும், அது நிறைவேறுகிற போது அந்தப் பக்தி உணர்வு திருப்தியடைந்துவிடும். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே.." என்ற தேவாரத்தினூடாக அந்த ஆத்ம திருப்தியை உணரலாம். இந்த யாத்திரை சமயம், சமய நம்பிக்கைகள் என்ற தளத்திலும் வைத்து நோக்கப்படக் கூடியவை. ஒரு தலத்தின் பிரசித்தி, அது தொடர்பான தொன்மங்கள், அற்புதங்கள், அதன்பிரபலம், என்பவை அத்தலத்தின் மீதான யாத்திரை, மனத்தைத் தூண்டும். கதிர்காமம், மடுமாதா மீதான சர்வ மதத்தினரது யாத்திரை, தமிழ்நாட்டில் நாகப் பட்டினம் நாகூர்தர்கா, கன்னியா குமரி, வேளாங்கண்ணி மாதா யாத்திரை, பிரான்ஸ் நாட்டின் லூர்து மாதா திருத்தல யாத்திரை என்பவை இதன்பாற்பட்டவையே.

தலயாத்திரைகளுக்கு அரசியல் பின்புலங்களுமுண்டு.

பல்லவபாண்டிய காலத்து பக்தி இயக்கச் செயல்முறைகளில் தலயாத்திரை என்பதும் மிகவும் முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்கியது. திருஞான சம்பந்தரும் அப்பரும் கூட்டாக இணைந்து காவிரி நதியின் இருகரைகளிலும் உள்ள பல கோயில்களுக்குத் தலயாத்திரை சென்றார்கள் என்று பெரிய புராண வாயிலாகப் புறச்சான்றாகவும் அவர்களது தேவாரங்கள் வழி அகச்சான்றாகவும் அறிய முடிகின்றது. மேலும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் செய்த ஷேத்திராடனங்களை "பாடல்பெற்ற தலங்கள்", "மங்களாசாசனம் பெற்ற தலங்கள்" என்ற சொல்லாடல்களால் அறியமுடியும். இந்தத் தல யாத்திரைகள் வெறுமனே பக்தி நோக்கம் கொண்டவை, என்றும் மட்டும் கூறிவிடமுடியாது. அவற்றுக்கும் மேலாக அவற்றுள் புதைந்திருந்த சமயப் பரப்புகை என்ற பின்னணியை யாரும் மறுக்க முடியாது. அது அக்காலத்தில் பிரதான தேவையுமாகவிருந்தது.

யாத்திரை என்ற பதத்தை பண்பாட்டு மானிட வியலாளர்கள் "மீவியல் மானுட வாழ்வு" (Liminal Life) என்று வரையறை செய்கின்றனர். யாத்திரைக்கான முன் ஆயத்தங்கள், விரதங்கள், புனிதம் பேணல், உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றம், உடைகளின் தனித்துவம் - முதலான விடயங்களில் அவர்கள் செலுத்தும் புறநடையான விடயங்களை ஆராய்ந்த பண்பாட்டு மானிடவியலாளர்கள் 'யாத்திரை' என்ற பதத்தினூடாக சாதாரண வாழ்வுடன் தொடர்புடைய மனிதன் அவற்றிலிருந்து விலகி புது வகையான கோலங்கொள்வதை "மீவியல் மானுட வாழ்வு" என்று குறிப்பிடுகின்றனர். குறித்த தலத்துக்கான யாத்திரை முடிவடைந்ததும் அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவர்.

இந்த யாத்திரைகளுக்கு ஒருவிதமான குழும மனோ பாவமும் உண்டு. சமகாலத்தில் இந்து சேத்திரங்கள் மீது நடைபெறும் பாதயாத்திரை என்பதை அவ்வாறு குழுமக் கண்கொண்டு நோக்க முடிகின்றது. தமிழ்நாட்டில்

சிதரம்பத்திற்கு அருகில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலுக்கு நாட்டுக் கோட்டைச் செட்டிமாரது பாதயாத்திரை, பழனிக்கு செட்டிமாரதும், கோயம்புத்தூர் கவுண்டர்களினதுமான யாத்திரை, வேளாங்கண்ணி மாதாவிற்கு வட ஆர்க்காட்டு கிறிஸ்தவர்களின் யாத்திரை, கதிர்காமத்திற்கான வடபுல, கீழ்ப்புலத் தமிழ்மக்களது பாதயாத்திரை ஆகியவற்றை அவ்வாறு கட்டமைக்க முடியும், இதுதவிர முருகனது அறுபடை வீடுகளுக்கும் உழுகுடிமக்களான அடிநிலை மக்களுடைய பாத யாத்திரைகளையும் இவ்வாறு இணைத்துப் பார்க்கலாம்.

இவ்வாறு யாத்திரை என்ற சொல்லாடல் இன்று பல்வேறு பரிமாணங்களில் பொருள் கொள்ளப்படுவதனைக் காணலாம். இனி யாத்திரையில் கண்டவற்றை விபரித்தில் இரு நிலைகளில் நிகழலாம். ஒன்று - “கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்” என்ற மனோபாவத்துடன் பக்திரசம் சொட்டச் சொட்ட விண்டுரைத்தல். மற்றையது - யாத்திரையை தகவல் களஞ்சியமாக்குவது. பிளினி, தொலமி யின் மத்தியதரைக் கடல் செலவு” என்ற குறிப்பு நமக்குக் கிடைக்காது போயின் பண்டைய தமிழக்கத்தின் பாண்டிநாடு பற்றிய பல தகவல்களை நாம் இழந்திருப்போம். வாசாப் - என்ற யாத்திரீகனது குறிப்புகள் இல்லாது போயின் விசயநகர நாயக்கர் காலத்துச் சமூகபண்பாட்டு வரலாற்றை அறியாது போயிருக்கக் கூடும். எனவே யாத்திரை என்பது, அனுபவங் களின் வெளிப்பாடாக அமையும்போது, அது பல்வேறு தகவல்களின் களஞ்சியமாகவும் அமைந்து விடுகின்றது. பிரதே சம், வழிகள், இயற்கை, காலநிலை, மக்கள், மொழி, பண்பாடு என அவை விரிந்து செல்வதை அவதானிக்கலாம். பரணி தரனின் “புண்ணிய பாரதம்” தொ.மு.பாஸ்கரத் தொண் டைமானின் ‘இமயம் முதல் குமரிவரை’ என்ற பயணநூல்கள் முன்குறித்த இருவேறு வகையான பயணம் அல்லது யாத்திரை நூல் களுக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

திருவாளர் தி.ஞானசேகரன் அவர்களை நாம் படைப்பாளியாகவே முதலில் இனங்கண்டோம். பின் அவர் இதழியலாளனாகவும், பத்தி எழுத்தாளனாகவும், விமர்சகராகவும் பல்வேறு பரிமாணங்களை எடுத்துள்ளார். அந்த வகையில் அவர் தம் மனைவியுடன், பிதிர்கருமம் செய்ய வட இந்தியத் திருத்தல யாத்திரை சென்றதையும் வட இந்தியாவில் சரித்திர முக்கியதுவம் வாய்ந்த இடங்களைத் தாம் கண்டு களித்ததையும் ஒரு படைப்பாளிக்குரிய நேர்த்திக்கமைய அல்லது எழுதத் தூண்டும் மனவிருப்பின் வெளிப்பாடாகப் படைத்துள்ளார்.

திரு. தி.ஞானசேரகன் அவர்கள் இந்நூலில் இரு விதமான நோக்கில் நம்மையெல்லாம் தம்முடன் அழைத்துச் செல்கிறார். ஒன்று அவருடன் உள்நின்று இயக்கும் ஆத்மஞானம். அந்தவழி அவர் பக்திப் பரவசத்துடன் தாம் தரிசித்த தலங்கள் எல்லாவற்றிற்கும் நம்மையும் அழைத்துச் செல்கின்றார். கங்கா ஸ்நானம், திரிவேணி சங்கம ஸ்நானம், கேதார்நாத், பத்ரிநாத், காசி விசுவநாதர் தரிசனம், ஆகியவை பற்றி அவர் விபரிக்கின்றபோது நாமும் ஸ்நானம் செய்து, தரிசனம் காணும் பேறு பெறும் வகையில் அவர் விபரித்துச் செல்கின்றார். மற்றையது ஒரு யாத்திரிகன் என்ற தளத்தைத் தாண்டி ஒரு படைப்பாளியின் மனோபாவத்துடன் அவர் படைத்துள்ளார். அதனால்தான் அது சுவாரசியமாக இருக்கின்றது. அத்துடன் புராண இதிகாச சம்பவங்களையும் பொருத்தமுற விபரித்துச் செல்லும் அவர், செல்லும் மார்க்கம், தூரம், பிரயாண ஊடகம், தங்குமிட வசதி, வழியருமை முதலான விடயங்களையும் பயனுள்ள வகையில் ஆங்காங்கே விபரித்துச் செல்கிறார்.

நூலாசிரியரது பயண அனுபவம் இன்னோர் வகையில் டில்லியையும் அதனைச் சூழவுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் சுற்றிச் சுழல்கின்றது. காதல் சின்னம் - தாஜ்மகால், வாஸ்து சம்பிரதாய - ஜெய்பூர், அக்பரின் முன்னோர்களின் - ஆக்ரா கோட்டை, கிருஷ்ணரின் ஜனன

பூமி - மதுரா, ஆகிய இடங்களுக்கும் சென்று, கண்டு கேட்டு, உய்த்து, உணர்ந்த விடயங்கள் யாவற்றையும் மிக நேர்த்தியுடன் விபரித்துள்ளார்.

அநேகமான பிரயாண நூல்கள் ஒன்றில் யாத்திரை அல்லது சுற்றுலா என்ற வகையில் தனித்தனியே அமைவதுண்டு. திரு.ஞானசேகரனின் நூலின் இந்த இரண்டு துறைகளின் சங்கமத்தையும் காணமுடிகின்றது. ஒன்று பக்திரசம் ததும்பும் சேத்திராடனம், மற்றையது தகவல் களஞ்சியத்துடன் சுற்றுலா - இவை இரண்டையும் ஒன்றுக்கு ஒன்று முரணில்லாத வகையில் அவர் இணைத்துச் செல்வதைக் காணலாம். இதனால் இந்நூல் வாசிப்போருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. வாசித்தவுடன் ஒதுக்கிவிடும் நூலாக அல்லாமல், வாசிக்கவும், மனநிறைவு கொள்ளவும், பகிரவும், தகவல் திரட்டாகக் கொள்ளவும், ஏற்புடைமையுடைய நூலாக இது இருப்பதால், நூலாசிரியர் பாராட்டுக்குரியவராகின்றார். அவருக்கான யாத்திரைகளும் சுற்றுலாக்களும் இன்னும் வாய்க்கின்றபோது - ஆத்மீகம், வரலாறு, அனுபவம் என்ற தளங்களையும் தாண்டி மண்ணையும் மக்களையும் ஒரு சேர அவர் வெளிக் கொணர்வார் என்று எதிர்பார்க்கலாம்.

# 01

# பகவான் சுவாமிநாராயண் அக்ஷர்தாம்

*27.07.2008 காலை ஒன்பது மணி.*

நாங்கள் பயணித்துக் கொண்டிருந்த 'ஜெற்லைற்' விமானம் டெல்கி விமான நிலையத்தில் தரை இறங்கியது. நானும் மனைவியும் பயணப் பொதிகளை எடுத்துத் தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தோம். விமான நிலையத்தின் வெளியே செல்லும் வாயிலில் பலர் சிறிய பதாகைகளைக் கைகளில் ஏந்திக் கொண்டு யார் யாரதோ வருகைக்காகக் காத்துநின்றனர். 'வெல்கம் ரு டெல்கி - ஞானசேகரன்' என்ற பதாகையுடன் நின்றவரைப் பார்த்து நான் புன்னகைத்துத் தலையாட்டினேன். அவர் உடனே எங்களிடம் வந்து பயணப் பொதிகளடங்கிய தள்ளுவண்டியைப் பற்றியபடி "வாங்கசார், வாங்கம்மா, பயணம்எப்படி இருந்தது? ரொம்பவும் களைப்படைந்தது போலத் தெரிகிறதே...." என முகமன் கூறியபடி தள்ளுவண்டியைத் தனது கார் இருந்த இடத்துக்குத் தள்ளிச் சென்றார். "இரவு முழுவதுமே பயணம் செய்ததால் சிறிது களைப்பாகத்தான் இருக்கிறது. ஹோட்டலுக்குப் போய் குளித்தால் எல்லாம் சரியாகவிடும்" எனக் கூறிக்கொண்டே நாங்கள் அவரைப் பின் தொடர்ந்தோம்.

டெல்கியில் ஹிந்திதான் பேச்சுமொழி. ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூட ஹந்தியில் தான் பேசுகிறார்கள். எனவே தமிழ் தெரிந்த ஒரு கார்ச்சாரதியை எங்களது பயணம் முடியும் வரை எம்முடன் இருக்கும்படி ஒழுங்கு செய்திருந்தோம்.

ஏறத்தாழ இரண்டாயிரம் கிலோமீற்றர் தூரம்வரை செல்வதாக எமது பயணத்திட்டம் அமைந்திருந்தது. எனவே குளிர்சாதன வசதியுடன் ஒரு காரினை ஒழுங்கு செய்திருந்தோம்.

எங்களது இந்த வட இந்தியப் பயணம் அவுஸ்திரேலியாவில் இருக்கும் எனது மூத்த மகன் ராஜனால் ஒழுங்கு செய்யப்பட்டது. டெல்கி, ஹிரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, ஜெயப் பூர், அலகபாத் ஆகிய இடங்களுக்குச் செல்வதாகத் திட்ட மிடப்பட்டிருந்த இந்தப் பயணத்தில் எங்களையும் இணைந்து கொள்ளும்படி மகன் வேண்டியிருந்தார். இந்தப் பயண ஒழுங்கில் 'காசி'யையும் சேர்த்துக் கொள்ளும்படி நானும் மனைவியும் மகனிடம் வேண்டினோம். காசிக்குப் போனால் கர்மம் தொலையும் என்பது இந்து மதத்தின் அடிப்படை நம்பிக்கை. இந்துவாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் காசி யாத்திரை செய்ய வேண்டும் என்பது சமயவிதி. காசிக்குச் சென்று பிதிர்சிரார்த்தம் செய்தால் நமது தந்தைவழி, தாய்வழி முன்னோர்கள் மோட்சம் அடைவார்கள் எனவும் நமது பாவம் தொலையும் எனவும் இந்து மதம் கூறுகிறது. முஸ்லிம்களுக்கு மெக்கா யாத்திரை எவ்வித முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போன்று காசியாத்திரை இந்துமக்களுக்கு முக்கியமானது.

இந்தப் பயணத்தில் நாங்கள் தங்கவேண்டிய ஹோட்டல்கள், காரில் செல்ல வேண்டிய இடங்கள், ரயி லில் பயணிக்க வேண்டிய இடங்கள், அவற்றிற்கான பயணத் திகதிகள், பயணத்துக்கான பயணச்சீட்டுகள், ஹோட் டல்களுக்கான முற்பணக் கொடுப்பனவுகள் என யாவுமே மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டு, இணையத்தளம் மூலம் அவற்றிற்கான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டன. அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டே மூன்று மாதங்களுக்கு முன்னர் இவற்றையெல்லாம் மகன் செய்திருந்தார். 'பணிக்கார் டிறவல்ஸ்' என்ற சுற்றுலா முகவர் மூலம் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேவைப்படும் இடங்களில் எமக்கு விளக்கம் தருவதற்கு ஆங்கிலம் தெரிந்த கைடு (Guide) களையும் ஒழுங்கு செய்து தருவதாக இந்தச் சுற்றுலா முகவர் நிறுவனத்தினர்

கூறியிருந்தனர். மகன் ராஜன், அவரது மனைவி, இவர்களது பிள்ளைகள் சூர்யா (6வயது), சுவாதி (4வயது) ஆகியோரோடு நானும் மனைவியும் இணைந்து கொண்டோம். முன்கூட்டியே செய்யப்பட்ட இத்தனை திட்டமிடல்களையும் மீறிக்கொண்டு எமது பயணத்தில் பல மாறுதல் ஏற்பட்டன. அந்த மாறுதல்கள் வாழ்க்கையில் நாம் முன்னர் அனுபவித்திராத பல சுவையான அனுபவங்களையும் ஆச்சரியங்களையும் எமக்கு ஏற்படுத்தின. எமது முன்னைய பயணங்களில் கிடைக்காத ஒரு மனநிறைவை இந்தப் பயணத்தின் மூலம் பெறக்கூடியதாக இருந்தது.

விமான நிலையத்தில் எம்மை அழைத்துப் போக வந்தவர் தோமஸ் என்ற பெயருடைய ஒரு தமிழர். 'பணிக்கார் டிரவல்ஸில்' வாகனச் சாரதியாக வேலை செய்பவர். நாற்பது வருடங்களாக டில்கியில் வசிப்பதாகக் கூறினார்.

விமான நிலையத்தில் கார் நிறுத்துமிடத்தில் கார்கள் நிறைந்திருந்தன. எவ்வித ஒழுங்குகளுமின்றி குறுக்கும் நெடுக்குமாக கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நாங்கள் காரில் ஏறிக்கொண்டதும் புறப்படுவதற்குத் தடையாக எமது காரின் முன்னால் குறுக்காக ஒரு கார் நிறுத்தப்பட்டிருந்தது. தோமஸ் பலமாகக் 'ஹோரணை' பலதடவை அழுத்தினார். எவ்வித பயனுமில்லை. கோபத்துடன் காரில் இருந்து இறங்கி முன்னால் குறுக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரைப் பின்னோக்கித் தள்ளி எமது கார் புறப்படுவதற்கு வழி சமைத் தார். அவர் தள்ளிய வேகத்தில் பின்புறம் சரிவான பாதையில் கார் வேகமாக நகரத் தொடங்கியது. உடனே அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அந்தக் காரின் முன்பக்கத்தில் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றார். அவரால் முடியவில்லை. கார் அவரையும் இழுத்துக் கொண்டு வேகமாகப் பின்நகர்ந்து பின்புறத்தில் வந்துகொண்டிருந்த வேறொரு காருடன் 'படார்' என்ற சத்தத்துடன் மோதியது. அந்தக் காரின் சாரதி கோபத்துடன் இறங்கி முன்பக்கத்தில் நெளிந்திருந்த தனது காரைப் பார்த்துவிட்டு தோமஸிடம் ஹிந்தியில் ஏதோ பலமாகக் கத்தினார். அந்த நேரத்தில் குறுக்காக நிறுத்தி

வைக்கப்பட்டு தோமஸினால் பின்நோக்கித் தள்ளிய காரின் சொந்தக்காரரும் பதறியபடி அங்கே ஓடிவந்தார். தோமஸைக் கடுமையாக ஹிந்தியில் ஏசினார். சிறிது நேரம் ஒரே களேபரம். எமக்கு ஒன்றுமே விளங்கிவில்லை. இனி பொலிஸ் வந்தால் தான் பிரச்சினை முடிவுக்கு வரும் என நாம் எண்ணிக்கொண்டு இருந்தோம்.

அவர்கள் ஹிந்தியில் தர்க்கித்தாலும் அதன் சாராம்சம் எனக்குப் புரிந்தது.

“நீயேன் குறுக்காக காரை நிறுத்தினாய்? அதனால்தானே இந்தப் பிரச்சினையெல்லாம்” இது தோமஸ்.

“கார் பார்க் பண்ண இடம் இல்லாததால் அப்படி நிறுத்த வேண்டி வந்தது. ஆனாலும் காரில் சாவியை விட்டு வைத்திருந்தேன். நீ காரை ஸ்ராட் செய்து வேறு இடத்தில் நிறுத்தியிருக்கலாமல்லவா!”

“அதெல்லாம் எனக்குத் தேவையில்லாத வேலை” இது தோமஸ்.

“நீங்கள் இருவரும் உங்களுக்குள் பிரச்சினைப்படுகிறீர்கள். ஆனால் எனது புத்தம் புதிய காருக்கு காயம் ஏற்படும்படி உங்களது காரைத் தள்ளி மோதவிட்டுவிட்டீர்கள்!”

ஹிந்தியில் கசாமுசா வென ஒரே வாக்குவாதம். வேடிக்கை பார்ப்பவர்களும் கூடிவிட்டார்கள். இந்தப் பிரச்சினையால் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்களை வெளியே எடுக்க முடியாத நிலை. அவர்கள் தத்தமது கார்களில் இருந்தபடி பலமாகக் ‘ஹோண்’ அடித்துச் சத்தம் எழுப்பினார்கள்.

தோமஸ் ஏதோ பலமாகக் கத்தியபடி வந்து காரில் ஏறி காரை ஸ்ராட் செய்தார். சிறிது தூரம் சென்றதும் நான் அவரி டம் கேட்டேன். “நீங்கள் தான் இந்த டெல்கிப் பயணத்தில் எங்களுக்குச் சாரதியாக இருக்கப் போகிறீர்களா?”

தோமஸ் அட்டமாகச் சிரித்தார். “டெல்கிப் பயணம் மட்டுமல்ல, தொடர்ந்தும் பத்து நாட்களுக்கு நீங்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் நான்தான் உங்களுக்கு டிரைவர்.

ஏனென்றால் எங்களது கம்பனியில் தமிழ் தெரிந்தவர் நான் மட்டுந்தான்.”

எனது முகத்தில் தெரிந்த கலவரத்தைப் பார்த்துவிட்டு, ‘இதெல்லாம் இங்கு சகஜம். பார்க்கிங் செய்ய இடம் கிடைக்காவிட்டால், காரை ‘நியூற்றலில் நிறுத்திவிட்டுச் செல்வார்கள். நாங்கள் முன்னே பின்னே தள்ளி அட்ஜஸ்ற் பண்ணிக்கலாம்” என்றார்.

“வேடிக்கையாக இருக்கிறது உங்கள் பார்க்கிங் முறைகள்” என்றேன் நான் புன்னகை செய்தபடி.

பொதுவாக உலகநாடுகள் எல்லாவற்றிலுமே நகர்ப் புறங்களில் வாகன நெரிசல்களும் கார் பார்க்கிங் செய்வதும் பெரும்பிரச்சனையாகத்தான் இருக்கிறது. அதற்கு அந்நாடு களில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பெரிதும் பயனளிப்ப தாக இல்லை.

இந்தியாவின் தலைநகரான டெல்கியில் வீதி ஒழுங்கு முறைகள் சீராக அமையாததை நாங்கள் பல இடங்களில் கவனிக்கக்கூடியதாக இருந்தது. பொலிஸார் வீதி ஒழுங்கு முறைகளைக் கவனிப்பதில் சிரத்தையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

தோமஸின் கைத்தொலைபேசியில் ஓர் அழைப்பு வந்தது. அவர் என்னிடம் தொலைபேசியைக் கொடுத்து, “உங்கள் மகன் பேசுகிறார் சார்” என்றார்.

மகன் ராஜன் குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டு இலங்கை வந்து இரண்டு நாட்கள் தங்கிவிட்டு டெல்கியில் வந்திருந்தனர். முதல்நாளே டெல்கியில் வந்து ‘பணிக்கார்ஸ்’ ஹோட்டலில் தங்கியிருந்தனர். எமது வரவு சுணங்குவதை அறிந்துதான் மகன் போன் செய்தார்.

“அப்பா நாங்கள் தயாராக இருக்கிறோம். டெல்கியில் உள்ள இடங்கள் சிலவற்றை இன்று பார்க்கலாம். உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்” என்றார்.

ஹோட்டலுக்குச் சென்று குளித்து காலை உணவை

அருந்தியதும் எமது பயண அலுப்பு தீர்ந்து உற்சாகம் பிறந்தது. மகன் குடும்பத்தினருடன் டெல்கியைப் பார்க்கப் புறப்பட்டோம்.

மகாபாரதக் கதையில் வருகின்ற பாண்டவர்களின் தலை நகராக விளங்கிய இந்திரப்பிரஸ்த்தம்தான் இப்போதுள்ள டெல்கி. வடமொழியில் எழுதப்பட்ட இந்துமத நூல்கள் இதனை 'ஹஸ்தனா புரம்" என்று குறிப்பிடுகின்றன. ஹஸ்தனா புரம் என்றால் யானைகளின் நகரம் என்பது பொருள். 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை இந்திரப் பிரஸ்த்தம் என்ற பெயருடன் இங்கு ஒரு கிராமம் இருந்தது. அதனை பிரிட்டிஷ்காரர்கள் அழித்து இப்போதுள்ள டெல்கியைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள்.

டெல்கிக்கு நீண்ட ஒரு சரித்திரம் உண்டு. பல புகழ்பெற்ற சக்கரவர்த்திகள் டெல்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அசோகச் சக்கரவர்த்தி, முகலாய மன்னர்களான அக்பர், ஷாஜகான், குப்த வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்திகள் எனப் பலர் ஆட்சி புரிந்துள்ளார்கள். 1857 இல் டெல்கி பிரிட்டிஷ் காரர்களினால் கைப்பற்றப்பட்டது. 1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. தற்போதுள்ள அரச கட்டிடங்கள் யாவும் பிரிட்ஷ்காரர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை.

**பகவான் சுவாமி நாராயன் அக்ஷர்தாம்.**

அன்று நண்பகல் வேளையில் நாங்கள் சுவாமி நாராயன் அக்ஷர்தாம் என்ற ஆச்சிரமத்தை அடைந்தோம். வெயில் கடுமையாக இருந்தது. அந்த உக்கிர வெயிலில் நாங்கள் கியூவரிசையில் நின்றே உள்ளே செல்ல வேண்டியிருந்தது. நீண்ட கியூவரிசை, பல வெளிநாட்டவர்களும் உள்நாட் டவர்களும் தகிக்கும் வெயிலில் மெதுவாக ஊர்ந்து செல்லும் கியூவில் நிற்க வேண்டியிருந்தது. இந்த ஆச்சிரமத்தைப் பார்க்க வருபவர்கள் கடுமையான சோதனையின் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். போன், கைப்பை, குறிப்புப் புத்தகம், பேனா எவற்றையுமே உள்ளே

கொண்டு செல்ல முடியாது. ஸ்கான் செய்யும் வாசலினூடாக ஒவ்வொருவராக செல்ல உடல் முழுவதும் தடவிப்பார்த்து சந்தேகப்படும்படியாக எதுவுமே இல்லை என்ற பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். தீவிரவாதிகள் இந்தக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்துவிடுவார்கள் என்ற பயத்தினாலேயே இத்தனை கெடுபிடிகளும் சோதனைகளும்.

சுவாமி நாராயன் என்ற யோகி 1871 முதல் 1980 வரை வாழ்ந்தார். அவரது பெயரால் கட்டப்பட்டதே இந்த ஆச்சிரமம். சுவாமி நாராயனின் வழித்தோன்றலான ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்த பிரமுஹ் சுவாமி மகராஜ் என்பவரது முயற்சியில் இந்த ஆச்சிரமம் கட்டப்பட்டது. உலகம் முழுவதும் சுவாமி நாராயனின் வழித்தோன்றலில் வந்த சிஷ்யர்கள் பெருந்தொகையானோர் இருக்கிறார்கள். சுவாமி நாராயன் பெயரில் பல நாடுகளில் ஆச்சிரமங்களும் இருக்கின்றன. அவை சுவாமி நாரயனின் போதனைகளைப் பரப்புகின்றன.


இந்தியக் கலை கலாசாரத்தையும் மெய் அறிவையும் இணைத்த இந்திய கட்டிடக்கலையின் உன்னதங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்டிருந்த இந்தப் பிரமாண்ட மான ஆச்சிரமம் தூரத்திலிருந்து பார்க்கும் போதே பிரமிப்பை ஏற்படுத்தியது.

யமுனா நதித்தீரத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இந்தப் பிரமாண்டமான ஆச்சிரமம் செங்கட்டிகளாலும் வெள்ளை மாபிள்களாலும் கட்டப் பட்டது. இதன் உயரம் 141 அடி, அகலம் 316 அடி, நீளம் 356 அடி, அங்கு இந்தியக் கலைவடிவத்தைப் பிரதிபலிக்கும் 234 தூண்களும் 9 பெரிய குவிமாடங்களும் 20 கோபுர முகடுகளும், 20,000 திறம்படச் செதுக்கப்பட்ட சிலைகளும் பார்ப்போரைப் பிரமிக்க வைக்கின்றன. ஆச்சிரமத்தின் மத் தியில் 11 அடி உயரமான தங்கத்தினாலான சுவாமிநாராயனின் சிலை வைக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உள்ளே பொருட் காட்சிச்சாலை, படமாளிகை, இசைக்கூடம், பூந்தோட்டம்

போன்றவை அமைந்துள்ளன. ஆச்சிரமத்தைச் சுற்றி புனித நீர் ஓடிக் கொண்டிருக்கிறது. நுழைவாயிலில் 10 வாயிற்கதவுகள் அமைந்துள்ளன. இந்த ஆச்சிரமத்தை யானைகள் தாங்கிநிற்பது போன்ற அமைப்பில் 1070 அடி நீளத்திற்கு கல்லில் செதுக்கப்பட்ட யானைகளின் சிலைகள் காணப்படுகின்றன. இந்தப் பாரிய கட்டிடத்தை ஐந்தே வருடத்தில் கட்டிமுடித்துச் சாதனை புரிந்திருக்கிறார்கள் இந்தியக் கட்டிட விற்பன்னர்கள். 2005 நவம்பரில் இந்த ஆச்சிரமம் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டிடத்தின் பகுதிகளை ஆறுதலாகப் பார்த்து இரசிப்பதற்கு பல நாட்கள் வேண்டும். அத்தனை சிறப்புகள் வாய்ந்த கட்டிடக் கலையின் உன்னதங்களை ஆறே மணித்தியாலத்தில்தான் எங்களால் பார்க்க முடிந்தது. மாலை யானதும் அந்த ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்டோம்.

அடுத்து, பிர்லா இல்லம் என்கின்ற மாளிகைக்குச் சென்றோம். காந்தி அடிகள் புதுடில்லி வரும்போது இந்த பிர்லா இல்லத்தில் தான் தங்குவாரம். 30.01.1948 இந்திய வரலாற்றில் கறைபடிந்த நாள். மதவெறிகொண்ட கோட்சே என்பவனால் அண்ணல் கட்டுக் கொல்லப்பட்ட நாள். இந்த பிரில்லா இல்லத்தில் காந்தி அடிகள் உபயோகித்த பொருட்களும் அவரது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் வரலாற்று ஆவணங்களும் வைக்கப்பட்டுள்ளன.



# 02

# பிர்லா இல்லம் – காந்தி மியூசியம்

மகாத்மா காந்தியவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர் புதுடில்லியில் உள்ள பிர்லா இல்லத்திலேதான் தங்கியிருந்தார். அவர் இறப்பதற்கு முந்திய 144 நாட்களும் அந்த இல்லத்திலே தங்கியிருந்தார். 30.01.1948 அன்று மாலை நான்கு மணி தொடக்கம் ஐந்து மணிவரை சர்தார் பட்டேல் என்பவருடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அங்குள்ள தோட்டத்தில் நாள்தோறும் மாலை 5.15 மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். காந்தி அடிகள் பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக வெளியே வந்திருக்கிறார். பேத்திகள் ஆபாவும் மனுவும் முன்வர அவர் கள் தோள்மேல் கையூன்றி பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வரும் வழியில் கோட்சேயினால் சுடப்பட்டார். “ஹேராம்” மாகாத்மா காந்தியின் உதடுகளிலிருந்து வெளிவந்த கடைசி வார்த்தைகள். சரியாக 5.17 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது. காந்தி இறந்தபின்னர் பிர்லாவுக்குச் சொந்தமாக இருந்த இல்லம் காந்தி நினைவு இல்லமாக மாற்றப்பட்டுப் பொதுச் சொத்தாக ஆகியிருக்கிறது.

காந்தியடிகள் குண்டுபட்டு வீழ்ந்த இடத்தில் சிறிய மேடை அமைக்கப்பட்டு நடுவில் கல்வெட்டுப் பதிக்கப்பட் டுள்ளது. அதிலே மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த இல்லத்தில் காந்தி அடிகள் வரலாறு, சுதந்திரப்

போராட்டக் காட்சிகள் ஆகியவை கண்ணாடிப் பெட்டிகளில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. இக்காட்சியில் பொம்மைக் கொலுமாதிரி பொம்மைகளை வைத்திருப்பது உண்மையான நிகழ்ச்சிகளை நேரில் பார்ப்பது போல் உள்ளது. அத்தோடு சுதந்திரத்திற்காக உயிர் துறந்த தியாகிகளின் புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

காந்தியடிகள் வழக்கமாக அமரும் இடம், அவர் உபயோகித்த கரண்டி, மூக்குக்கண்ணாடி, மணிக்கூடு, ராட்டினம், கத்தி, கைத்தடி போன்ற பொருட்கள் முதலியவை காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன.

பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்தியடிகள் வரும் வழி யில் சுமார் 25 மீற்றர் தூரத்திற்கு இரண்டரை அடி அகலப் பாதை யில் சீமெந்தில் அவரது திருவடிகள் பதிக்கப்பட்டுள்ளன.

இந்த இல்லத்தின் மாடியில் காந்தியடிகளின் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிகளின் வாழ்க்கை வரலாறு நிகழ்ச்சிகள் இங்கு ஓவியங்களாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அவரது இளமைப்பருவம், இலண்டனில் கல்வி, திருமணம், வழக்கறிஞர் தொழில், தென்னாபிரிக்க வாழ்க்கை, விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகள், நவகாளி யாத்திரை ஆகியவற்றை ஓவியங்களில் காணக்கூடியதாக இருக் கிறது.

கோட்சேயால் சுடப்பட்ட முதல் குண்டு அருகே இருந்த ஈச்சமரம் ஒன்றில் பாய்ந்தது. அந்த ஈச்சமரம் குண்டு பாய்ந்து அடையாளத்துடன் காணப்படுகிறது.

காந்தி இல்லத்தைப் பார்வையிடுபவர்களுக்கு காந்தியின் வாழ்க்கையைத் துல்லியமாக விளங்கவைக்கும் கைடு (Guide) கள் இங்கே பலர் இருக்கிறார்கள். குறிப்பாக இந்தியாவின் இளந்தலைமுறையினருக்கு தேசப்பற்று ஏற்படும் வகையில் காட்சிகள் அமைந்துள்ளன.

அன்று இரவு ஏழு மணியளவில் நாம் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குத் திரும்பினோம். டில்கியில் பார்வையிடு

வதற்கு மேலும் பல இடங்கள் இருக்கின்றன. குதுப்மினார் என்ற 300 அடி உயரமான ஸ்தூபி, நேரு நினைவு இல்லம், லட்சுமிநாராயணன் கோயில், ஜந்தர் மந்தர், 'ராஜ்காட்' எனப்படும் மகாத்மா காந்தி அடக்கம் செய்யப்பட்ட இடம், ராஷ்டிரபதி பவன், பார்லிமென்ட் கட்டிடம், இந்தியா கேட் என இப்பட்டியல் நீளும், இவற்றைப் பின்னர் பார்க்கலாம் எனத் திட்டமிட்டுக் கொண்டு மறுநாள் காலை ஹரித்துவார் நோக்கிப் பயணம் செய்யத் தீர்மானித்தோம்.

28.09.2008 காலை ஏழு மணிக்கே நாம் பயணத்துக்குத் தயாராக இருந்தோம். எமது வாகனச் சாரதி தோமஸ் ஹோட்டல் வாசலில் எமக்காகக் காத்து நின்றார். அடுத்துவரும் பத்து நாட்களுக்கு அவரது வாகனத்தில் பயணம் செய்து இடங்களைப் பார்ப்பதற்கு திட்டமிட்டிருந்தோம். நீண்ட பயணம். எமக்குத் தேவையான உடைகள், தண்ணீர் போத்தல்கள், பிஸ்கட் வகைகள், மருந்துகள் போன்றவற்றை வாகனத்தில் ஏற்றினோம். தோமஸும் தனக்கு வேண்டிய உடுப்புகளுடன் தயாராக வந்திருந்தார்.

கார் புறப்பட்டுச் சிறிது நேரத்தில், 'எப்படி சார் இலங்கை நிலவரம்? நேற்றுக்கூட இருநூறு அகதிகள் இராமேஸ் வரத்துக்கு வந்ததாகப் பேப்பரிலை போட்டிருக்கு; பாவம் சார்" என்றார் தோமஸ்.

நாங்கள் இந்தியாவில் இருந்த காலத்தில் பலர் இப்படி இலங்கைப் பிரச்சினை குறித்து வினவியிருக்கிறார்கள். சிலர் இதனை ஓர் உரிமைப் போராட்டமாக ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு சிலர் இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகக் கருது கிறார்கள். ராஜீவ் காந்தி கொலையுண்டதைப் பலரால் ஜீரணிக்க முடியவில்லை. எவர் என்ன மாதிரியான கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டுதான் பதிலளிக்க வேண்டியிருந்தது.

"போர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேதான் நடக் கிறது. நாங்கள் தலைநகர் கொழும்பில் இருக்கிறோம். அத னால் போரின் நேரடியான தாக்கம் எமக்கில்லை" என்றேன்.

“இந்திரா காந்தி இருந்திருந்தால் இலங்கைப் பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும். இப்ப உள்ளவங்க சரியில்லை சார்” என்று கூறிய தோமஸ், “கொழும்பிலேதான் அடிக்கடி குண்டுகள் வெடிக்கிறதே பயமில்லையா சார்?” என்றார்.

“இங்கு டெல்லியில் கூட இரண்டு கிழமைகளுக்கு முன் பாரிய குண்டுகள் வெடித்தனவே. எழுபத்தைந்து பேருக்குமேல் உயிரிழந்தார்கள். இப்போதெல்லாம் உலகின் பல இடங்களில் ஆங்காங்கே குண்டுகள் வெடிக்கின்றன. இதற்குள்தான் மக்கள் வாழவேண்டியிருக்கிறது” என்றேன்.

“ஆமாங்க அதுவும் உண்மைதான்”

நாம் பயணித்துக் கொண்டிருந்த வாகனம் ஒரு சந்தியில் திரும்பியது. ‘அகலம் குறைந்த தெரு. தெருவின் இரண்டு பக்கங்களிலும் கார்களை நிறுத்தி வைக்கிறார்கள். எதிரும் புதிருமாக வாகனங்கள் வரும்போது வாகனத்தைச் செலுத்துவதில் கஷ்டப்பட்டார் தோமஸ். வாகன நெரிசல் அதிகமாகக் காணப்பட்டது. சில இடங்களில் ஐந்திலிருந்து பத்து நிமிடங்கள் வரை வாகனத்தை நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. வட இந்தியாவில் தெருக்களில் ஏற்படும் நெரிசல்களுக்கு அதிக சைக்கிள் ரிக்ஷாக்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதும் சிறிய இடைவெளி தென்பட்டாலும் அதற்குள்ளால் அவை நுழைந்து முந்திக் கொள்வதும் காரண மாக இருப்பதைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது.

வட இந்தியாவில் நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் சைக்கிள் ரிக்ஷாக்களின் ஆக்கிரமிப்பு அதிகமாக இருந்தது. என்ன, இந்த நவீன யுகத்திலும் சைக்கள் ரிக்ஷா பாவனையா? அதுவும் உலகின் முக்கிய நகரங்களின் ஒன்றான டெல்கியிலா? ஆச்சரியமாக இருந்தது.

எமது வாகனம் முன்னால் வந்து கொண்டிருந்த வாகனத்துக்கு இடம் கொடுப்பதற்காக நிறுத்தப்பட்ட போது திடீரென ஒரு சைக்கிள் ரிக்ஷா குறுக்காக நுழைந்தது. தோமஸுக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வாகனத் திலிருந்து இறங்கி சைக்கிள் ரிக்ஷாக்காரனை அடிப்பதற்குக்

கையோங்கிக் கொண்டு போனார். சைக்கிள்ரிக்ஷாக்காரன் வெலவெலத்துப் போய் நின்றான். தோமஸ் நல்ல வேளையாக அவனை அடிக்கவில்லை. தோமஸ் திரும்பிவந்து காரில் ஏறிக் கொண்டார்.

எனக்கு அப்போது எம்.ஜி.ஆர் நடித்த ரிக்ஷாக்காரன் படம் ஞாபகம் வந்தது. புதுமைப்பித்தன்கூட ரிக்ஷாக் காரனை வைத்து ஒரு சிறுகதை எழுதியுள்ளார். அந்தக்கால ரிக்ஷாக்காரர்கள் கால்நடையாக ரிக்ஷாவை இழுத்துச் செல்வார்கள். இப்போது சைக்கிளில் பூட்டி சைக்கிள் ரிக்ஷா வாக மாறியிருக்கிறார்கள்.

“தமிழ் நாட்டில் இப்படி சைக்கிள் ரிக்ஷாக்களை இப் போது அதிகமாகக் காணமுடிவதில்லை. டெல்கியில் மட்டும் அதிகமாகக் காணப்படுகிறதே....” எனத் தோமஸைப் பார்த்துக் கூறினேன்.

“பத்து ரூபாவுக்கு நீங்கள் சைக்கிள் ரிக்ஷாவில் போகலாம். சைக்கிள் ரிக்ஷாவுக்கு பெற்றோல் செலவு இல்லை. வேறு வாகனங்களுக்கு பெற்றோல் செலவு இருக்கிறதல்லவா... அதனால் ‘ரேட்’ அதிகமாக இருக்கும்” என்று விளக்கம் கொடுத்தார் தோமஸ்.

“வட இந்தியர்கள் சிக்கனத்தை கைக்கொள்பவர்களாக இருக்கிறார்கள்” என்றான் மகன் ராஜன்.

**<u>ஹரித்துவார்.</u>**

‘ஹரி’ என்றால் நாராயணன் என்று பொருள். ‘த்துவார்’ என்றால் வாயில் என்று பொருள். இமயமலைச் சாரலில் நாரா யணன் வீற்றிருக்கும் திருத்தலமாகிய பத்ரிநாத் செல்வதற்கு வாயிலாக இந்த இடம் அமைந்தமையால் ஹரித்துவார் என்று பெயர் பெற்றது என விஷ்ணு பக்தர்கள் கூறுவர்.

சிவபக்தர்கள் இந்த இடத்தை ஹரத்துவார் என வழங்குவர். ‘ஹர’ என்றால் சிவன். இமயமலைச் சாரலில் ஜோதிர்லிங்கமாக கேதாரநாத் என்ற திருத்தலத்தில் சிவ பிரான் எழுந்தருளியிருக்கிறார். கேதாரநாத்துக்கு இங்கிருந்து

தான் செல்ல வேண்டும். எனவே இதனை ஹரத்துவார் என அழைப்பர்.

17 ஆம் நூற்றாண்டில் இந்த இடம் 'கங்காத்வார்' என்று அழைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. மேலே உற்பத்தியாகும் கங்கை மலைகளைக் கடந்து இந்த இடத்திலேதான் கீழே இறங்குகிறது. ஆகவே இது கங்காத்வார் என்று அழைக்கப்பட்டது. இந்த இடத்திலிருந்து தான் புனித கங்கையானது பல பாகங்களாகப் பிரிந்து தரை மார்க்கமாக ஓடத் தொடங்குகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கபில் என்ற பெயர் கொண்ட ரிஷி இங்கு தவமிருந்து இறைவனடி சேர்ந்ததாகவும் அதனால் இந்த இடம் 'கபிலஸ்தான்' என்று வழங்கியதாகவும் அறியமுடிகிறது.

டில்லியிலிருந்து ஹரித்துவார் 201 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இந்தத் தூரத்தைப் பயணித்தபோது எமது இடது புறத்தில் கங்கை நீண்ட தூரம் பயணிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. கங்கையானவள் பல ஏழை மக்களின் ஜீவதாரமாக விளங்குகிறாள் என்பதையும் காணக்கூடியதாக இருந்தது. கங்கையில் மணல் அள்ளுதல் அங்குள்ள பலருக்குத் தொழிலாக அமைந்திருக்கிறது. எருமை மாடுகளின் முதுகில் இருபக்கங்களிலும் தொங்கும்படியாக சாக்குமூடைகளைக் கட்டி அவற்றுள் மணலை நிரப்புகிறார்கள். நூற்றுக் கணக்கானோர் இவ்வாறு மணல் அள்ளுவதைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது.

கங்கைக் கரையோரக் கிராமங்களில் கரும்பு வளர்த்தலும் ஒரு தொழிலாக இருக்கிறது. கரும்புத் தோட்டங்களுக்குக் கங்கையிலிருந்தே நீர் பாய்ச்சுகிறார்கள். கரும்பிலிருந்து சர்க்கரை, சீனி போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளும் ஆங்காங்கே காணப்பட்டன.

குதிரை வண்டில்கள் பாவனையில் உள்ளதையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. ஏறத்தாழ 60 வருடங்களுக்கு முன்னர் எனது தாய்வழித் தாத்தா குதிரை வண்டியில்

வண்ணார்பண்ணையிலிருந்து புன்னாலைக்கட்டுவனில் இருக்கும் எங்கள் வீட்டுக்கு வருவார். நீண்ட காலத்திற்குப் பின்னர் ஹரித்துவார் செல்லும் பாதையில் அத்தகைய குதிரை வண்டில்களைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்தியாவில் ஒரு மாநிலத்திலிருந்து வேறு ஒரு மாநிலத்திற்கு வாகனம் போவதானால் வரி செலுத்த வேண்டும். ஒரு நாளுக்கு ரூபா 500/- வரியாக அறிவிடுகிறார்கள். எமது வாகனம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நுழைந்தபோது எல்லையில் உள்ள அலுவலகத்தில் பணத்தைக் கட்டி ரசீதைப் பெற்றுக் கொண்டார் தோமஸ். அந்த ரசீதை சோதனையின் போது காண்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திக்கும் அந்தந்த மாநிலத்தின் முதலெழுத்துக்கள் அடங்கிய நம்பர் தகடுகள் வழங்கப்படுகின்றன. எனவே பிற மாநில வாகனத்தை இலகுவாகக் கண்டறிந்து வரிப்பணம் வசூலிக்கிறார்கள் என விளக்கம் தந்தார் தோமஸ். இந்தியாவின் சகல மாநிலங் களுக்குள்ளும் வாகனத்தைக் கொண்டு செல்வதற்கான (INTER STATE TAX) வரி செலுத்தும் முறையும் வழக்கத்தில் உள்ளது.



# 03

# கங்கா ஆர்த்தி தரிசனம்

'பகீரதப் பிரயத்தனம்' என்ற சொற்றொடரைப் பலர் அறிந்திருப்பார்கள். மிகக் கடுமையான முயற்சியை இச்சொற் றொடர் குறிக்கும். பகீரதன் தனது மூதாதையர்களை உயிர் பிழைக்க வைப்பதற்காகக் கடுந்தவம் இயற்றி கங்கையைப் பூமிக்குக் கொண்டவர முயற்சித்தான். கங்காதேவி பூமிக்கு வருவதற்கு முன், 'மேலேயிருந்து நான் நேராக விழுவேனா னால் பூமி தாங்காது. எனது அதிர்ச்சியைத் தாங்க முடியா மல் பூமி துண்டு துண்டாகச் சிதறிப் போய்விடும். எனவே, மேலேயிருந்து நான் விழும்போது நடுவே யாராவது எனது வேகத்தைத் தடுத்து நிறுத்தி மெதுவாக நான் பூமியில் விழுமாறு செய்ய வேண்டும்' எனச் சிவபிரானிடம் கேட்டாள்.

சிவபிரானும் தானே கங்கையின் வேகத்தைத் தாங்கி பூமிக்கு அனுப்புவதாகக் கூறினார்.

அப்போது கங்காதேவி சிவபிரானிடம் 'ஐயனே எல் லோரும் என்னில் மூழ்கித் தங்கள் பாவங்களைக் கரைத்துக் கொண்டால் என்னில் சேரும் பாவங்களை நான் எப்படிப் போக்கிக் கொள்வேன்?' எனக் கேட்டாள்.

அதற்குச் சிவபெருமான், 'கவலைப்படாதே, சாதுக்களும் சன்யாசிகளும் யோகிகளும் தபஸ்விகளும் உன்னில் மூழ்கி ஸ்நானம் செய்யும்போது உன்னிடம் சேர்ந்திருக்கும் பாவ மூட்டைகள் அனைத்தும் கரைந்து போய்விடும்' என்று கூறி னார். இது கங்கை தொடர்பான புராணக்கதை.

கங்கை பூமியை நோக்கி வேகமாக வந்தபோது சிவ பிரான் அதனைத் தனது திருமுடியில் தாங்கி கீழேவிடத் தொடங்கினார். கங்கை முதன் முதலாக ஹரித்வார் தரை யைத் தொட்ட நாளை வருடா வருடம் இங்கு பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். இந்த விழாவிற்கு 'கங்கா தசரா' என்று பெயர்.

ஹரித்வாரில் பல ஸ்நானம் செய்யும் இடங்கள் உள்ளன. முக்கியமான ஸ்நானம் செய்யும் இடம் பிரம்மகுண்டம் (ஹர்தீ பைடி) எனப்படும். கங்கை பூமிக்கு வருவதை முதன் முதலில் பிரம்மதேவன் இந்த இடத்தில் வரவேற்றதால் இதற்குப் பிரம்ம குண்டம் என்ற பெயர் வந்தது.

வியாழன் மேடராசியில் பிரவேசிக்கும் போது 12 ஆண்டு களுக்கு ஒருமுறை நடைபெறும் 'கும்ப மேளா' மிகவும் பிர சித்தி பெற்றது. இது ஏப்ரல் மாதத்தில் வரும். கும்பமேளாவின் போது இந்த இடத்தில் இலட்சக்கணக்கானோர் ஸ்நானம் செய்ய வருவார்கள். உலகின் பல பாகங்களிலிருந்தும் சாதுக்கள், சந்நியாசிகள், யோகிகள், தபஸ்விகள் எனப் பலரும் கும்பமேளாவிற்குத் திரளாக வருவார்கள். இவர்களுக்கு உணவு வழங்க பணக்கார மடாதிபதிகள் அங்கு முன்னரே வந்து கூடாரமடித்துத் தங்கியிருப்பார்களாம். ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் அர்த்த கும்பமேளாகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

கும்பமேளாவுக்கு வரும் சாதுக் கூட்டத்தில் நாகா சாதுக்கள் என ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். இவர்கள் நிர்வாணமாக வருவர். அச்சமயத்தில் அங்கு கடுமையான குளிராக இருக்கும். கங்கையில் பனிக்கட்டிகள் மிதந்து வரும். அப்படிப்பட்ட குளிரில் இந்த நாகா சந்நியாசிகள் கங்கா ஸ்நானம் செய்து ஆடை ஏதுமின்றி நிர்வாணமாகத் திரிகிறார்கள் என்றால் அவர்களுடைய யோகத்தின் மகிமையும் தவ வலிமையும் தான் இதற்குக் காரணம் என்கின்றார்கள்.

தினமும் மாலை 6.30 மணியளவில் இங்கு 'கங்கா ஆர்த்தி' நடைபெறும். அதனைக் கண்டுகளிப்பதற்கு முன்னர் கங்கையில்

நீராடவேண்டும். ஆலாத்தியை ஹிந்தி மொழியில் 'ஆர்த்தி' என்கிறார்கள். கங்கைக் கரையில் சீமெந்தினால் மேடையிட்டு இரும்புச் சங்கிலிகளைப் பொருத்தியிருக்கிறார்கள். இவற்றை இறுகப் பற்றிக் கொண்டு கவனமாக நீராட வேண்டும். இல்லையேல் நதியின் இழுப்புக்கு ஆளாகவேண்டி வரும்.

நானும் மனைவியும் மகனது குடும்பமும் கங்கையில் நீராடி மகிழ்ந்தோம். கங்கையின் வேகம் அதிகமாக இருந்ததால் மனதில் சிறிது பயமும் இருக்கத்தான் செய்தது. அங்கு ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நீராடிக் கொண்டிருந்தார்கள்.

கங்கைக் கரையில் சூரியன் அஸ்தமிக்கும் பொழுது கங்கா ஆர்த்தி நடைபெறும். அதனைக் கண்டுகளிக்க குளித்த ஈரத்துணிவுடன் பலர் காத்திருந்தனர். இரு கரைகளிலும், ஏராளமானோர் திரண்டிருந்தனர். எமது வாகனச் சாரதி தோமஸ் நல்ல அனுபவம் மிக்கவர். எந்த இடத்திலிருந்து பார்த்தால் கங்கா ஆர்த்தியைக் கண்டுகளிக்கலாம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. சீமெந்துப் பாலமொன்றில் எம்மை நிறுத்திவைத்தார்.

கங்கைக் கரையில் கங்கா மாதா, சிவன், விஷ்ணு, அனு மான், பிரம்மா, துர்க்கா போன்ற கடவுளர்களின் கோயில்கள் உள்ளன. கங்கா மாதாவின் கோவிலில் பெரிய மணிகள் 'ஓம் ஓம்' என ஒலிக்க பெரிய தட்டுகளில் கற்பூரம் ஏத்தி நதிக்குக் காண்பித்து ஆலாத்தி எடுப்பார்கள். இதே சமயத்தில் அங்குள்ள கடவுளர் யாவர்க்கும் ஆலாத்தி எடுக்கப்படுகிறது. அப்போது 'கங்கா மாத ஜே' என்ற கீதம் ஒலிக்கப்படுகிறது. கரை முழுவதும் பெரிய பெரிய தீப ஆராத்திகள் கங்கைக்குக் காண்பிக்கப்படுகின்றன. மக்கள் தொன்னைகளின் பூக்களை வைத்து அவற்றின் அகல் விளக்குகளை ஏற்றி கங்கையில் விடுகிறார்கள். ஆயிரக்கணக்கான தீபங்கள் நீரின் ஓட்டத்தில் அசைந்தாடிச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

தீபமேற்றி விடுவதற்கென்று பூக்கள் நிறைந்த நெய் விளக்கோடு கூடிய தாமரை இலைத் தொன்னைகள் இங்கு

விற்கப்படுகின்றன.

இந்த கங்கா ஆர்த்தியைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் கரையின்மேல் இரண்டு மணிநேரம் முன்னதாகவே வந்து முன்னால் உட்கார்ந்து கொள்கிறார்கள். தவிர, இந்தக் காட்சியைப் புகைப்படம் பிடிக்கவும் தரிசிக்கவும் திரளாக மக்கள் கூடுவது பார்ப்பவர்களுக்கு மட்டற்ற அழகுக் காட்சியையும் மகத்தான மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. இந்த ஆனந்தம் அனுபவித்து அறிய வேண்டியது; எழுத்தில் வடிக்க முடியாதது.

ஹரித்துவாரில் மாமிச உணவு விலக்கப்பட்டுள்ளது. மது அருந்துதல், போதை வஸ்துப் பாவித்தல், சூதாடுதல் போன்றவைகளும் விலக்கப்பட்டுள்ளன.

**மானஸ தேவி கோயில்.**

இந்தக் கோயில் 'சிவாலிக்' என்ற மலையின் உச்சியில் உள்ளது. மலைமீது ஏறிச் செல்வதற்குப் பாதை உள்ளது. ஆனாலும் அந்தப் பாதையில் நடந்து செல்வது மிகச் சிரமமானது. சிரமத்தைக் குறைப்பதற்காக 'வின்ச்' என்று சொல்லப்படும் தொட்டில்கள் அமைத்துள்ளார்கள். எங்கள் நாட்டில் மலையகத் தேயிலைத் தோட்டங்களில் முன்னைய காலத்தில் கொழுந்துகளைத் தொழிற்சாலைக்கு மலையிலிருந்து அனுப்புவதற்கு இதுபோன்ற தொட்டில்களைப் பாவித்தது எனக்கு ஞாபகம் வந்தது. இரும்புக் கம்பிகளில் மின்சாரத்தின் மூலம் இந்தத் தொட்டில்கள் மலையுச்சிக்கு அனுப்பப்படுகின்றன. அன்று கூட்டம் அதிமாக இருந்தது. எனவே, வரிசைக் கிரமத்தில் நின்று இந்தத் தொட்டில்களில் ஏறிக் கோவிலுக்குச் சென்றோம். இதில் ஏறிச் செல்வதற்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். இந்த 'வின்ச்' தொட்டிலில் செல்வது ஆகாயத்தில் பறப்பதைப் போன்ற ஓர் உணர்வினைத் தருகிறது.

இங்குள்ள அன்னைக்குப் பக்தர்கள் அரிசிப்பொரியை நிவேதனம் செய்கிறார்கள். அர்ச்சனை செய்தபின் பக்தர்களைக் குனியும்படி செய்து முதுகில் அடித்து ஆசீர்வதிக்கிறார்

அங்குள்ள பூசகர்.

இங்கு வேறும் ஒரு விசேடம் உண்டு. பக்தர்கள் தங்களது வேண்டுதல்களை மனதில் இருத்தி அங்கு தரப்படும் நூலை சந்நிதானத்தின் எதிரே உள்ள ஓர் இடத்தில் கட்டினால் அந்த வேண்டுதல்களை மானஸ தேவி நிறைவேற்றி வைப்பாள் என்பது நம்பிக்கை.

மானஸ தேவி, துர்க்கையின் இன்னொரு வடிவம் என்கிறார்கள். ஹரித்துவார் நகரில் உள்ள மலையின் உச்சியில் இருந்து மானஸ தேவியானவள் அர்ப்பணிப்புள்ள தாயாக தனது பிள்ளைகளைப் பாதுகாத்து கவனிப்பது போன்று காத்தருளுகிறாள் என ஹரித்துவார் மக்கள் நம்புகிறார்கள்.

இக்கோவிலில் உள்ள கண்டாமணியானது காலை யிலும் மாலையிலும் பெரும் நாதத்துடன் ஒலிக்கப்பட்டு பக்தர்களைத் தொழுகைக்கு அழைக்கிறது. ஹரித்துவார் நகரில் பல இடங்களிலிருந்தும் மானஸ தெவியின் கோயிலை நாம் பார்க்க முடிகிறது.

'வின்ச்' தொட்டிலில் மின்சாரத்தின் உதவியோடு மலை உச்சிக்கு ஏறும்போதும் இறங்கும்போதும் ஹரித்துவார் நகரின் கண்கொளாக் காட்சிகளைப் பார்த்து ரசிக்க முடியும். தூரத்து மலைகளில் முகில்கள் படியும் காட்சியும் கங்கா நதித் தீரத்தத்தின் அழகும் பக்கத்து மலைகளில் பட்சிகள் இசைக்கும் கீதங்களும் எத்தனை முறை பார்த்தாலும் கேட்டாலும் இன்பமளிப்பவை.

**சண்டி தேவி கோயில்.**

மானஸ தேவி கோயிலைப் போன்ற அமைப்பிலேயே சண்டிதேவி கோயிலும் அமைந்துள்ளது. ஹரித்துவாரின் கிழக்குப் பகுதியில் நகரைப் பார்த்தபடி 6 கிலோமீற்றர் தொலைவில் கங்கையின் மறுபுறத்தில் இந்தக் கோயில் அமைந்துள்ளது. இக்கோவிலுக்குப் போகும்போது பக்தர்கள் குடிநீரை எடுத்துச் செல்கிறார்கள். அங்கு மலை உச்சியில் குடிநீர் கிடைப்பதில்லை. 1997இல் இந்தக் கோயிலுக்குச்

செல்வதற்கு மின்சாரத்தில் இயங்கும் 'வின்ச்' தொட்டில் வசதி செய்துள்ளார்கள். அதற்கு முற்பட்ட காலத்தில் சுமார் எட்டு மைல் தூரம் காட்டுப் பாதையில் நடந்து செல்லவேண்டும். கங்கையையும் அதன் கால்வாயையும் கடக்க வேண்டும். மலை மீது வழியில் காளி கோயில், அனுமார் கோயில் முதலியன அமைந்துள்ளன.

சண்டிதேவி கோயிலுக்கு அருகே அஞ்சனிதேவி கோயில் உள்ளது. அஞ்சனி தேவி என்பவள் ஆஞ்சநேயருடைய தாயாவாள்.

சண்டிதேவி கோயில் உள்ள மலையை நீலபர்வதம் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்த மலையின் கீழே கங்கைக் கரையில் அடர்ந்த காட்டின் நடுவே கௌரிசங்கர் கோயில் இருப்பதாகச் சொன்னார்கள். இங்கு வனவிலங்குகள் அதிகம் இருப்பதால் சாதுகளைத் தவிர வேறு எவரும் அங்கு செல்வதில்லை எனவும் அறியமுடிந்தது.

**பாரதமாதா கோயில்**

ஹரித்துவார் நகரின் வடக்குப் புறமாக 4 கிலோமீற்றர் தொலைவில் பாரதமாதா கோயில் அமைந்துள்ளது. இங்கே சிற்ப வேலைகளுடன் கூடிய பாரதமாதா சிலை வைக்கப் பட்டுள்ளது. ஏழு மாடிகள் கொண்ட இந்த கோயிலை ஏராள மான சுற்றுலாப் பயணிகள் வந்து பார்க்கிறார்கள். மேலே செல்வதற்கு 'லிப்ற்' வசதியிருக்கிறது. பாரத நாட்டின் வர லாற்றை அறியும் வண்ணம் ஒவ்வொரு மாடியிலும் பல்வேறு தகவல்களைப் பொறித்து வைத்திருக்கிறார்கள். சமயம், சமூகம், பொருளாதாரம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி எனப் பாரதத்தின் ஆரம்பகாலம் முதல் இன்றைய காலம் வரையுள்ள தகவல்களை இங்கே அறியக் கூடியதாக உள்ளது. நாட்டிலேயே பாரத மாதாவுக்கு கோயில் இங்கேதான் அமைந்துள்ளது.

**'பகவான் தாம்' கோயில்**

இந்த பவான் தாம் கோயிலில் பாரத தேசத்திலுள்ள கடவுளர்களின் உருவச் சிலைகள் மாபிள் கற்களால்

செதுக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஹரித்துவாரில் இருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்தக் கோயிலும் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட மாபிள் கற்களாலான கடவுளர்களின் சிலைகள் இங்கே உள்ளன. மீனாட்சி, சரஸ்வதி, லக்ஷ்மி ஆகிய தெய்வங்களின் சிலைகள் இங்கே சிற்பக்கலையின் உச்சங்களாகத் தெரிகின்றன.

திரும்பும் வழியில் தெருவின் ஓரத்தில் சுமார் 40 அடி உயரமான சிவபிரானின் சிலையைப் பார்த்தோம். அதுவும் அற்புதமான சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்திருந்தது.



# 04

# ரிஷிகேசம்

*29.09.2008 அன்று காலை ஹரித்துவாரில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து ரிஷிகேசம் நோக்கிப் புறப்பட்டோம். நமது புராணங்களான இராமாயணம், மகா பாரதம் ஆகியவற்றில் வருகின்ற கதாநாயகர்கள் உலாவிய இடம் ரிஷிகேசம். உத்திரப் பிரதேச மாநிலத்தில் வடபகுதியில் அமைந்திருக்கும் இந்த இடம் கங்கையின் வலப்பக்கக் கரையில் அமைந்துள்ளது. மூன்று பக்கங்களிலும் மலைக்குன்றுகளால் சூழப்பட்ட இந்த இடத்தில் கங்கை நதியின் இருபுறங்களிலும் கிராமங்கள் அமைந்துள்ளன.*

*கடவுளரின் இருப்பிடமாகக் கருதப்படும் இமயமலையை நோக்கி முனிவர்களும் ஞானிகளும் கடுமையான பயணத்தை மேற்கொள்வதற்கு முன்பு இங்குள்ள ஆச்சிரமங்களில் தங்கி இளைப்பாறிய பின்பே தமது பயணத்தை மேற்கொள்வர்.*

*இந்துமத தத்துவங்களோடு புராணக்கதைகளோடும் கல்வியோடும் ரிஷிகேசத்திற்குத் தொடர்பு இருக்கிறது. யோகாசனப் பயிற்சி, ஆயுர்வேத மருத்துவம் போன்றவற்றைப் பயில பல மேல்நாட்டவர்கள் இங்கு வந்து மாதக்கணக்கில் தங் கியிருப்பார்கள்.*

*இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த இடத் திற்கு வருவதற்குத் தெருக்கள் இருக்கவில்லை. அதனால் வாகனங்களில் வரமுடியாத நிலையிருந்தது. ஹரித்துவாரி லிருந்து கால்நடையாகவே இங்கு வரவேண்டியிருந்தது.*

அக்காலத்தில் ரிஷிகேசத்தில் கடைத்தெருக்கள், அன்ன சத்திரங்கள் எதுவுருமிருக்கவில்லை. ஐம்பது அறுபது சன்னியாசிகள் மட்டும் வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட இந்த இடத்தில் இன்று பல்லாயிரக்கணக்கான சாது சன்னியாசிகள் நிறைந்துள்ளனர். இவர்கள்தங்குவதற்கானஅன்னசத்திரங்களும் இருக்கின்றன. சமஸ்கிருத பாடசாலைகள், தர்மசாலாக்கள், கோவில்கள், சேத்திரங்கள் பல இங்குள்ளன.

**லட்சுமணன் ஜூலா**

ரிஷிகேசத்திற்குச் செல்லும் வழியில் லட்சுமணன் ஜூலா என்னுமிடத்தில் எங்களது சாரதி தோமஸ் காரை நிறுத்தினர். ஹிந்தியில ஜூலா என்றால் ஊஞ்சல். ரிஷிகேசத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் லட்சுமணன் ஜூலா இருக்கிறது. இது தூண்கள் எதுவுமில்லாத பாலம். கங்கையை கடப்பதற்கு லட்சுமணன் தனது அம்புகளைக் கொண்டே பாலத்தை அமைத்தானாம். சணல் கயிற்றினால் பாலம் அமைத்து அவன் கங்கையைக் கடந்ததாகவும் கூறப்படுகிறது. இப்போது இரும்பினால் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. 1939இல் கட்டப்பட்ட இந்தப் பாலத்திலிருந்து கங்கை பாய்ந்தோடும் அழகையும் சூழவுள்ள மலைச்சாரலின் இயற்கை அழகையும் இரசிக்கலாம். இந்தப் பாலத்தின் மீது நடக்கும்போத பாலம் மெதுவாக ஆடுகிறது. பாலத்தின் மீது ஆடி ஆடி நடந்து செல்வது இனிமையான அனுபவம். மலைக்காற்று இதமாக உடலைத் தழுவும் போது சுகமாக இருக்கிறது. இந்தப் பாலம் எண்பது அடி நீளமும் ஆறு அடி அலகமும் கொண்டது. இந்த ஒடுக்கமான பாலத்தில் மனிதர்கள், சிறிய கரத்தைகள், பொதிசுமக்கும் பொனி குதிரைகள் மாத்திரமே ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்ல அனுமதிகப்படுகிறது.

ஆடுபாலத்திற்கு வலப்பக்கம் லட்சுமணன் கோயில் இருக்கிறது. பிரம்மஹத்திதோஷம் நீங்குவதற்காக லட்சு மணன் இருநூறு ஆண்டுகள் இந்தப் பகுதியிலேதான் தவம் இருந்ததாகக் கூறப்படுகிறது. லட்சுமணன் கோயிலில் தொட்டில் கிருஷ்ணனுக்கு ஒரு சந்நிதியும் லட்சுமணனுக்கு

சந்நிதியும் இருக்கின்றன. கங்கையை நோக்கிய வண்ணம் சுவரிலே ஸ்ரீபத்திரி நாராயணர் எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு ஒரு புறத்தில் நாரத முனிவரும் மறுபுறத்தில் இலக்குமி தேவியும் காட்சி தருகிறார்கள்.

கங்கையின் இடக்கரையில் ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபம் இருக்கிறது. அங்கு 'மாபிள்' கல்லால் ஆன ஆதிசங்கரரது சிலையும் சீடர்களது சிலைகளும் காணப்படுகின்றன. அவற்றைக் கண்ணுற்ற போது பாரதத்தின் தொன்மை மிகுந்த - வேத நெறியின் அடிப்படையில் வாழையடி வாழையாக வளர்ந்து வந்த குருபரம்பரையைத் தரிசித்தோம். அத்வைத தத்துவத்தை ஆன்மீக உலகிற்கு அளித்த மகாபுருஷர் ஆதிசங்கரர் என்ற எண்ணம் ஏற்பட்டபோது அந்த மகாபுருஷரின் சிலையைக் கைகூப்பி வணங்கினோம்.

ஆதிசங்கரர் மண்டபத்திற்கு எதிரே இருக்கும் கங்கைப் படித்துறைக்கு 'லட்சுமணன் குண்டம்' எனப் பெயர் வழங்குகிறது. இங்கே பலர் பொரிகடலை போன்ற ஒருவகை உணவை சிறிய தாமரை இலைகளில் வைத்து விற்பனை செய்கிறார்கள். இவற்றை வாங்கி சிலர் பாலத்திலிருந்தவாறு கங்கையில் வீசுகிறார்கள். ஏராளமான கொழுத்த மீன்கள் கூட்டமாக நீரின் மேற்பரப்புக்கு வந்து அந்த உணவைப் போட்டி போட்டு உண்பது ஒரு வேடிக்கைக் காட்சியாக இருக்கிறது. பெரியோர் முதல் சிறியோர் வரை இந்த மீன்களுக்கு உணவளித்து மகிழ்கிறார்கள். அங்கு கங்கையில் மீன்பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. மீறி மீன்பிடித்தல் ஆறுமாதச் சிறை வாசமும் 500 ரூபா தெண்டமும் விதிக்கப்படுகிறதாம்.

சிறிது தூரம் நடந்து சென்றால் 'கீதா பவனம்' என்ற பரந்துவிரிந்த மாடிக்கட்டிடங்கள் உள்ளன. 1943 இல் இந்தக் கீதாபவனம் கட்டப்பட்டது. இங்கு யாத்தீரிகர்கள் தங்கிச் செல்வதற்கு அறைகள் கட்டிவிட்டிருக்கிறார்கள். ஒரு புத்தகக் கடையும் இருக்கிறது. சிவனுக்கும் திருமாலுக்கும் கோவில்களும் இருக்கின்றன. இராமாயண, பாரத, பாக வதக் காட்சிகள் திரும்பும் பக்கமெல்லாம் ஓவியங்களாகக்

காட்சியளிக்கின்றன. உட்சுவரில், பகவத் கீதையின் சுலோகங்கள் முழுவதும் அவை தொடர்பான ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. கீதா பவனத்தின் பின்புறத்தில் அடர்ந்து வானோங்கி வளர்ந்திருக்கும் காடுகளும் சீறிப்பாய்ந்துவரும் கங்கை நதியும் அழகாகக் காட்சி தருகின்றன.

இந்தக் கீதாபவனம் 'பாபாகம்பளி வாலா' என்பவரால் கட்டப்பட்டது. 'சாரோ தாம்' யாத்திரை என்று சொல்லப்படுகின்ற இமய மலைச்சாரலில் அமைந்திருக்கும் புனிதத் தலங்களான கேதார் நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் இங்கு தங்கிச் செல்கிறார்கள். அவர்களுக்கு இலவச உணவும் இங்கு வழங்கப்படுகிறது.

சிறிது தூரம் புல்வெளிகளில் நடந்து சென்றால் 'சொர்க்காசிரமம்' என்ற இடம் இருக்கிறது. புனித கங்கையில் நீராடி ஆன்மீகத் தியானத்துடன் எவ்விதமான புறவுலக ஈடுபாடுகளுமின்றி வாழ நினைப்பவர்கள் பலர் இங்கு இருக்கிறார்கள். அதற்கு வசதியான சூழலாக இந்தச் சொர்க்க ஆசிரமம் பரந்த புல்வெளியில் அமைந்திருக்கிறது. இங்கு கண்ணன் திருவிளையாடல்களை விளக்கும் காட்சிகளும் இராம காதையின் காட்சிகளும் ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. இங்கு ஒரு நவக்கிரகக் கோயிலும் அமைந்துள்ளது. இதன் பக்கத்தில் கண்ணாடி அறைகளில் கண்ணபிரானின் விஸ்வரூபமும் வீணை இசைக்கும் சரஸ்வதியின் உருவமும் இருக்கின்றன. இந்த உருவங்கள் கண்ணாடியின் பிரதிபலிப்பால் திரும்பிய பக்கமெல்லாம் நூற்றுக்கணக்கில் தெரிகின்றன.

அதன் பின்னர் உலகப் புகழ்பெற்ற சிவனாந்த ஆச்சிரமத்துக்குச் சென்றோம். கங்கையின் மேற்குக் கரையில் அமைந்த இந்த ஆச்சிரமம் தமிழ்நாட்டில் 'பத்தமடை' என்னும் ஊரில் பிறந்த சிவானந்த சரஸ்வதி சுவாமிகளால் **1936**இல் நிறுவப்பட்டது. அவர் மலேசியா சென்று சிறிது காலம் வைத்தியத் தொழில் புரிந்தவர். அதன் பின் அமைதியை வேண்டி ரிஷிகேசம் வந்து ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்தவர்.

*சிவானந்த ஆச்சிரமம் வேதாந்த தத்துவங்களை உலகுக்கு எடுத்தியம்பும் பல்கலைக்கழகமாக விளங்குகிறது. சிவானந்த ஆச்சிரமத்துக்கு உலகெங்கும் கிளைகள் இருக்கின்றன. 14.07.1963 இல் சமாதிநிலை எய்திய சிவானந்தருக்கு இங்கு சமாதிக்கோயில் அமைத்துள்ளார்கள். ஆச்சிரமத்தில் நூற்றுக் கணக்கான துறவிகள் தங்கியுள்ளார்கள்.*

*ஆன்மீகப் பேரறிஞரான சிவானந்தர் முந்நூறுக்கு மேற்பட்ட ஆன்மீக நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவற்றில் பல நூல்கள் பாரதத்தின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆச்சிரமத்தில் ஒரு நூல் விற்பனை நிலையமும் உள்ளது. அங்கு சென்று எமக்குத் தேவை யான நூல்களை வாங்கிக் கொண்டோம்.*

*சிவானந்த ஆச்சிரமத்தில் தினமும் ஆன்மீகச் சொற்பொழிவுகள், யோகாசன வகுப்புகள், ஆயுர்வேத வைத்தியங்கள் நடைபெறுகின்றன. உலகின் பல்வேறு நாடு களிலிருந்தும் பலர் இங்குவந்து தங்கிப் பயன் பெறுகிறார்கள்.*

*இந்த ஆச்சிரமத்தில் கோயில் ஒன்றும் உள்ளது. இதில் மகாவிஷ்ணுவையும் சிவலிங்க மூர்த்தியையும் எழுந்தருளச் செய்துள்ளார்கள். நாங்கள் சென்றவேளை கோயிலில் பூஜை ஆரம்பமாகியிருந்தது. நாங்கள் அங்கு தரிசனம் செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டோம்.*


**பரத மந்திர்**

*ரிஷிகேசத்தின் மத்திய பகுதியில் நெருக்கமான கடை வீதிகள் உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. 'பரத மந்திர்' என்ற புகழ்பெற்ற கோயில். இராமனின் தம்பி பரதன் நெடுங்காலமாகத் தவம் செய்த இடத்தில் இந்தக் கோயிலை அமைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். பௌத்த கோயில்களின் வடிவத்தில் அமைந்த இந்தப் 'பரதமந்திர்' எளிமையான காட்சி தந்தாலும் புராண முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பழமை வாய்ந்த கோயி லைச்சுற்றி பாரிய மதில்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதனைச் சரித்திரவாயிலாகவும் அறியமுடியாதுள்ளது எனக் கூறுகிறார்கள்.*

இவற்றையெல்லாம் பார்வையிட்டுவிட்டு நாங்கள் திரும்பியபோது எங்களது கார்ச்சாரதி தோமஸ் எங்களிடம் கூறினார்; "தூர இடங்களான அவுஸ்ரேலியாவிலிருந்தும் ஸ்ரீலங்காவிலிருந்தும் இவ்வளவு தூரம் வந்து இமயமலையின் அடிவாரத்தில் நிற்கிறீர்களே, ஏன் நீங்கள் இமயமலையிலுள்ள கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய கோயில்களையும் தரிசிக்கக் கூடாது? இன்னொரு சந்தர்ப்பம் இங்கு வருவதற்குக் கிடைக்காமலே போகலாம். முயற்சித்து அங்கும் சென்று அக்கோயில்களையும் தரிசிக்கப் பாருங்கள்."

தோமஸ் இப்படிக் கூறியபோது நாங்கள் சஞ்சலம் அடைந்தோம். நாங்கள் சிறு பிள்ளைகளுடன் வந்திருக்கிறோம். பனி படர்ந்த இமயமலைக்கு செல்வதற்கு ஏற்ற உடைக ளோடும் ஏனைய ஆயத்தங்களோடும் வரவில்லை. இந்தத் திருத்தலங்களுக்குச் செல்லும் பாதை கடினமானது. பலர் புறப்பட்டுச் சென்று அரைவாசி வழியில் தொடர்ந்து செல்லமுடியாது நோயுற்றுத் திரும்பியதையும் நான் அறிந்திருந்தேன். அத்தோடு எமது பயணத்திட்டத்தை மாற்றினால் வேறு சிக்கல்களும் ஏற்படும். ஹோட்டல்களில் நாங்கள் தங்கவேண்டிய நாட்கள், புகையிரதப் பயணச் சீட்டு கள், விமானத்தில் பயணம் செய்ய வேண்டிய நாட்கள் எல்லாம் மாறுபடும். இந்த மாற்றங்களைச் சரிசெய்வது இலேசான காரியமில்லை. என்ன செய்யலாம் என நான் யோசித்தேன்.

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்காத எனது மகன் ராஜன், "ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ அப்பா, அங்கும் போய்வருவோம்" என்றான்.



# 05

# அலகநந்தா - பாகீரதி நதிகளின் சங்கமம்

ரிஷிகேசத்தில் இருந்தபோது இமயமலையில் இருக்கும் கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய திருத்தலங்களுக்குச் செல்லத் தீர்மானித்தோம். இவை இரண்டும் எமது பயணத்திட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட இடங்கள். எமது கார்ச்சாரதி தோமஸின் ஆலோசனைப்படியே இந்தப் பயணமாற்றம் ஏற்படுத்தப்பட்டது. பயண ஒழுங்குகளை டெல்லியிலுள்ள 'பனிக்கர் டிரவல்ஸ்' என்ற நிறுவனத்தினரே செய்திருந்தனர். அவர்களிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு எமது பயண மாற்றத்திற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற் கொள்ளும்படி வேண்டினோம். அதற்கமைய அவர்கள் மாற்றங்களைச் செய்து தரச் சம்மதித்தனர்.

இந்தத் தலங்களுக்கு வருடத்தின் எல்லாக் காலங்களிலும் செல்லமுடியாது. ஏப்ரல் நடுப்பகுதியிலிருந்து ஒக்டோபர் மாதம் வரைக்கும் தான் செல்லலாம். மற்றக் காலங்களில் இந்தத் தலங்கள் உள்ள மலைப்பிரதேசம் முழுவதும் பனியி னால் மூடப்பட்டுவிடும்.

ரிஷிகேசத்திலிருந்து கேதார்நாத் செல்வதற்கு, ஏற்ற இறக்கங்கள் உள்ள மலைப்பாதையில் 262 கி.மீற்றர் பயணிக்க வேண்டும். கடல் மட்டத்திலிருந்து இந்த இடம் 11,735 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் இப்பிரதேசத்தில் அதிக மழை பெய்யும். மழை பெய்யும் போது மலைச்சாரலின் சரிவான பாதைகளில் பயணிக்க

முடியாது. பாதைகள் மிகவும் ஒடுக்கமானவை. ரிஷிகேசத்தில் எமது பயணத்திற்குத் தேவையான பொருட்களை வாங்க வேண்டியிருந்தது. லக்ஷ்மணன் ஜூலாவைப் போன்ற அதே அமைப்பில் ராம்ஜூலா என்றொரு பாலமும் உள்ளது. அதனைக் கடந்து அக்கரைக்குச் சென்றால் கடைத்தெருக்கள் உள்ள பகுதியை அடையலாம்.

எமது பயணத்துக்கு வேண்டிய பொருட்களான குளிர் தாக்காத ஸ்வெட்டர்கள், தலைக்குக் குல்லாக்கள், போர்த்திக் கொள்ள கம்பளிகள், மலைப்பாதையில் நடப்பதற்கு ஏற்ற சப்பாத்து, கம்பளியிலான காலுறைகள், கையுறைகள், டோர்ச்லைட், முதலுதவிப்பெட்டி, சில மருந்து வகைகள், குடிநீர்ப் போத்தல்கள், பிஸ்கட் வகைகள் போன்றவற்றை வாங்கிக் கொண்டோம்.

ரிஷிகேசத்தைவிட்டு நீங்குமுன் அங்கு கிடைக்கும் முக்கிய பொருட்கள் சிலவற்றையும் வாங்க நினைத்தோம். உருத்திராக்கம் இங்குள்ள எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. சிவசின்னங்களில் ஒன்று உருத்திராக்கம். ஏகமுக உருத்திராக்கம், திரிமுக உருத்திராக்கம், பஞ்சமுக உருத்திராக்கம் என உருத்திராக்கத்தில் பதினான்கு வகைகள் உள்ளன. ஏகமுக உருத்திராக்கம் என்றால் அதில் ஒரு வரை மட்டும் உள்ளது. இந்த வரையை முகம் என்கிறார்கள். இந்த உருத்திராக்கம் மிக மிக அருமையாகவே கிடைக்குமாம். இந்தியப் பணத்தில் ரூபா 4500 முதல் 5000 வரை இதற்கு மதிப்பு உண்டு. இந்த உருத்திராக்கத்தை வீட்டில் வைத்துப் பூஜித்தால் சகல செல்வங்களும் கிட்டும் என்கிறார்கள். மிளகு சைஸில் இருக்கும் 108 உருத்திராக்க மணிகளை பவுணில் கட்டி ருத்ரி என்னும் பெயரில் பெண்கள் அணியும் சங்கிலிகளாக விற்பனை செய்கிறார்கள். இதன் விலை ரூ.18,000. பஞ்சமுக உருத்திராக்கம் 108 இன் விலை ரூ.200; இது மட்டும் மலிவானது.

கங்கைக் கரையில் ஓர் உருத்திராக்க மரத்தைப் பார்த்தோம். அதில் காய்கள் நிறைந்திருந்தன. கங்கையை ஒட்டிய மலைக்காடுகளில் நிறையவே உருத்திராக்க மரங்கள்

இருக்கின்றன எனச் சொன்னார்கள்.

உருத்திராக்கத்தைப் ‘பிளாஸ்டிக்’கில் செய்து விற்பனை செய்வார்கள் என்பதனை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். எனவே உண்மையான உருத்திராக்கத்தைக் கண்டறிய வழி யேதுமுண்டா எனக் கடைக்காரிடம் கேட்டேன். உண்மை யான உருத்திராக்கம் தண்ணீரில் போட்டால் தாழும். பிளாஸ்டிக் உருத்திராக்கம் மிதக்கும் எனக்கூறி, தண்ணீருள்ள பாத்திரத்தில் உருத்திராக்கங்கள் சிலவற்றை இட்டு எமக்கு செயற்கைமுறை விளக்கம் தந்தார் கடைக்காரர்.

ரிஷிகேசத்தில் கிடைக்கும் இன்னுமொரு முக்கிய பொருள் ‘ஸ்படிகம்’ என்னும் கற்களாகும். ஸ்படிகமாலை, ஸ்படிகலிங்கம், ஸ்படிகத்தில் செய்த பிள்ளையார் போன் றவை இங்கே விற்பனையாகின்றன. ஸ்படிக அணிவதும், ஸ்படிகத்தில் செய்யப்பட்ட திருவுருவங்களை வீட்டில் வைத்துப் பூஜிப்பதும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும், நோயற்ற வாழ்வைத் தரும் என்பது நம்பிக்கை. கடையில் உள்ள மின்சார பல்ப்புகளை அணைத்துவிட்டு ஸ்படிகக் கற்களை ஒன்றோடு ஒன்று உரசும்போது தீப்பொறி பறக்கிறது. இதுவே உண்மையான ஸ்படிகத்தைக் கண்டறியும் முறை என விளக்கம் தந்தார் கடைக்காரர்.

ரிஷிகேசத்தில் பலவகையான இரத்தினக் கற்களும் மலி வான விலையில் கிடைக்கின்றன. எண் சாத்திரப்படி தமக்குப் பொருத்தமான இரத்தினக் கற்களை வாங்கி மோதிரங்களில் பதித்து அல்லது சங்கிலியில் கோத்து அணிந்த கொள்வதில் சுற்றுலாப் பயணிகள் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

ரிஷிகேசத்தில் எமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு கேதார்நாத் நோக்கிப் புறப்பட்டோம். மலைப்பாதையில் எமது வாகனம் ஏறிச் செல்லும்போது பனி மூடிய மலைச் சிகரங்களை மிக அருகிலே காணக்கூடியதாக இருந்தது. வெயிலில் பனி உருகிவருவது வெள்ளியை உருக்கி ஊற்றியது போல் தெரிந்தது. வழி எங்கும் சிறு சிறு அருவி கள் உற்பத்தியாகி தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

இந்தச் சிறுநதிகள் கீழே விழுந்து பெருநதியாகி 'சோ'வென்ற இரைச்சலுடன் பெருக்கெடுப்பது அதிசயக் காட்சியாகத் தெரிகிறது. மலைகளும், அருவிகளும், நதிகளும் நிறைந்த மலைப்பாதையில் பயணம் செய்யும்போது மனதில் மகிழ்ச்சி தோன்றுகிறது.

சில இடங்களில் மலைப்பாதை பயங்கரமாக இருக்கிறது. ஒரு வாகனம் மட்டும் செல்லக்கூடிய ஒடுக்கமான பாதையில் வெளியே எட்டிப் பார்த்தால் செங்குத்தான அதலபாதாளம் தெரிகிறது. 'கரணம் தப்பினால் மரணம்' என்பார்களே அதனை அந்தப் பாதையில் பயணம் செய்யும்போது பல இடங்களில் உணரக்கூடியதாக இருந்தது. பாதையில், பாதை செப்பனிடும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. திடீர் திடீரென மலையிலிருந்து பாறாங்கற்கள் பெயர்ந்து விழுந்து பாதையை மூடிவிடுமாம். அங்குள்ள தொழிலாளர்கள் அவற்றை அகற்றி உடனுக்குடன் பாதைகளைச் செப்பனிடுவார்கள். அதற்கெனத் தொழிலாளர்கள் பலர் அங்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். மலைச்சாரல்கள் கெட்டியான கற்பாறைகளாக இல்லாது உதிர்ந்து விடக்கூடிய மணற்பாங்கான கற்களாகத் தென்பட்டன. பாதையில் முக்கியமான இடங்களில் 'வாக்கிரோக்கி'யுடன் சிலர் நிற்கிறார்கள். இவர்கள் வளைவான பாதையில் தூரத்தே வாகனம் வரும்போது மறுபக்கத்தில் நிற்பவரிடம் அறிவித்து வாகனப் போக்குவரத்தைச் சீர் செய்கிறார்கள். இந்தப் பாதையில் வாகனத்தை 'ரிவேர்ஸ்' செய்ய முடியாது.

எதிரே வரும் வாகனத்துக்கு வழிவிடுவதற்காக எமது வாகனத்தைச் சில இடங்களில் நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. எமது வாகனச்சாரதி தோமஸ் இந்தப் பாதை யில் பல வருடங்களாக வாகனம் ஓட்டிய அனுபவம் உள்ளவர். மிகவும் சாதுர்யமாக வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்.

"இந்தப் பாதை இவ்வளவு கஷ்டமானதாகவும் பயங்கரமானதாகவும் இருக்கிறதே. வசதியுள்ளவர்கள் ஹெலி கொப்டரில் போவார்களா?" எனத் தோமஸிடம் வினவினேன்.

"அதற்கெல்லாம் கொடுப்பனவு வேண்டும். ஒரு முறை மைசூர் மகாராஜா கேதார்நாத் தரிசனத்துக்காக ஹெலிகொப்டரில் சென்றிருக்கிறார். மலைகள் மேகங்கள் மூடிக்கொண்டு விட்டன. மேகமூட்டம் மூன்று நாட்கள் விலகவேயில்லை. மகாராஜாவினால் கேதார நாதரைத் தரிசிக்கமுடியாமல் போய்விட்டது" என்றார் தோமஸ்.

**தேவபிரயாகை**

நாங்கள் 70 கி.மீற்றர் பயணம் செய்தபின் தேவபிர யாகை என்ற நகரத்தை அடைந்தோம். இங்கு ஓர் அற்புதமான காட்சியை நாங்கள் காணக்கூடியதாக இருந்தது. தேவப் பிரயாகைக்கு வடக்கே நூற்று முப்பது மைல் தூரத்துக்கு அப்பால் 'கங்கோத்ரி' என்னும் இடத்திலிருந்து 'பாகீ ரதி' நதி ஓடி வருகிறது. அதற்கு மேல் உள்ள 'கோமுகம்' என் னும் இடத்திலிருந்து இது உற்பத்தியாகிறதாம். பகீரதன் கடுந்தவம் இயற்றி தனது சந்ததியினருக்கு நற்கதி தந்தருள கங்கையை வரவழைத்தபோது அது வானுலகிலிருந்து கோபா வேசத்துடன் பாய்ந்து வந்ததாம். சிவபெருமான் தம் சிரசில் கங்கையை இந்த இடத்திலேதான் தாங்கிக்கொண்டார் எனவும் அங்கிருந்து பாய்ந்து வருவதால் இந்த நதிக்கு 'பாகீரதி' எனப் பெயர் வந்ததாகவும் அறியமுடிகிறது.

குபேரனின் தலைநகரான அலகாபுரியிலிருந்து அலக நந்தா நதி ஓடி வருகிறதாம். இப்புண்ணிய தீர்த்தம் விஷ்ணு பாதத்திலிருந்து பெருகி வருவதாகக் கூறப்படுகிறது.

சிவனது சிரசிலிருந்து பெருகிவரும் பாகீரதியும் விஷ்ணுவின் பாதத்திலிருந்து பெருகிவரும் அலகநந்தாவும் சங்கமமாகும் இடத்தில் 'கங்கை' எனப் பெயர் பெற்றுப் பாயும் நதிகளின் சங்கம அற்புதக் காட்சியை நாம் அங்கு கண்டுகளித்தோம்.

இந்தத் தேவப்பிரயாகை 108 வைஷ்ணவ தலங்களில் ஒன்றாகும். இது தொடர்பான ஒரு வரலாற்றுக் கதையும் உண்டு. ஒரு காலத்தில் இப்பகுதியில் மழையின்றி மக்கள் தவித்தபோது, மன்னனின் கனவில் ஸ்ரீ வைகுண்டப் பெருமான்

தோன்றி 'பெரியாழ்வாரை இங்கு அழைத்து வந்தால் மழை பெய்யும்' எனக் கூறவும் அதன்படியே ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தர் என்ற பெயருடைய பெரியாழ்வாரை மன்னர் இங்கு அழைத்து வந்தபோது பெரும் மழை பெய்து கங்கை கரைபுரண்டு ஓடியதாம். பெரியாழ்வார் தேவப்பிரயாகைக்கு வந்தபோது அங்கு எழுந்தருளியிருக்கும் புருஷோத்தமனின் பக்தியில் கரைந்துருகி பத்துத் தீந்தமிழ்ப் பாசுரங்களைப் பாடியுள்ளார். அதில் இரண்டாவது பாசுரத்தில்,

**"நலம் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்**
**நாரணன் பாதத்துழாவும்**
**கலந்து இழிபுனலால் புகழ்படு கங்கை"**

என்று பாகீரதி - அலகநந்தா நதிகளின் சங்கமத்தின் தத்துவத்தை பொதித்துப் பாடியுள்ளார். சிவபிரானின் சிரசை அலங்கரிக்கும் கொன்றை மலரும் நாராயண மூர்த்தியின் திரு வடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட துளசியும் இங்கு கலக்கிறதாம். அந்தப் புண்ணியத்தின் சேர்க்கையால் மற்றொரு பாசுரத்தில்,

**"எழுமையும் கூடிய ஈண்டிய பாவம்**
**இமைப்பொழுது அளவினில் எல்லாம்**
**கழுவிடும் கங்கை"**

என்று கூறி ஏழேழு பிறவியிலும் சேர்த்துக் கொண்ட பாவங்களை ஒரே நொடியில் அகற்றும் ஆற்றல் கொண்டது கங்கை என்று மிக உறுதியோடு கூறுகிறார்.

இந்தப் புனித இடத்தைத் தரிசித்தபின் 'மோனல் றெஸ்ரோறண்ட்' என்ற ஹோட்டலில் நாம் மதிய உணவு அருந்தினோம். வட இந்தியாவில் எல்லா இடங்களிலும் சப்பாதித்தான் உணவு. 'தாளி' என்று ஓடர் கொடுத்தால் அதில் சிறிதளவு சோறும் சேர்த்துத் தருவார்கள். எமது வட இந்தியப் பயணத்தில் புரியாத பாஷையும், ஒத்து வராத உணவும் பல இடங்களில் எமக்குச் சிரமத்தைத் தந்தன. ஆனாலும் ஆங்காங்கே தரிசிக்கக் கிடைத்த தெய்வீகச் சூழல் இச்சிரமங்களை மறக்கச்செய்து உள்ளத்தில் பரவசத்தை ஏற்படுத்தின.

# 06

# இமயமலையில் இருக்கும் இருபெரும் புண்ணிய தலங்கள்

**ஸ்ரீநகர்.**

தேவப்பிரயாகையில் மதியபோசனத்தின் பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு கேதார்நாத் நோக்கிய எமது பயணத்தைத் தொடர்ந்தோம். எமது வாகனம் அலகநந்தா நதிக் கரையோரமாகப் போய்க் கொண்டிருந்தது. வழிநெடுகிலும் பல சிறிய கிராமங்கள் தென்பட்டன. ஆங்காங்கே பசுமை நிறைந்த பல நெல்வயல்களும் காணப்பட்டன. எமது நாட்டில் வைக்கோலை 'பட்டடை' யாகக் குவித்து வைத்திருப்பார்கள். ஆனால், இங்கு நிலத்திலே குவித்து வைக்காமல் மரக் கெவர்களில் கட்டிவைத்துச் சேமிக்கிறார்கள். இவற்றைப் பார்க்கும்போது 'வைக்கோல் பட்டடை'கள் நிலத்திலிருந்து நான்கு, ஐந்து அடி உயரத்தில் எழுந்து நிற்பது போன்று காட்சி தருகின்றன. கீழ்ப்பகுதியில் மரத்தின் அடிப்பாகமும் மேலே மரத்தின் கிளைகளும் தெரிகின்றன. நதிப்பெருக்கெடுத்தால் வைக்கோலை அள்ளிச் சென்றுவிடுமாம். அதற்காகத்தான் இவ்வாறு மரத்திலே கட்டிவைத்துச் சேமிக்கிறார்கள்.

பாதை வளைந்து வளைந்து மலையில் ஏறிச் செல்வதால் வாகன ஓட்டுநர்களுக்கான அறிவுறுத்தல்கள் தெருவில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இரண்டு மணிநேரப் பயணத்தின் பின் ஸ்ரீநகர் என்ற இடத்தை அடைந்தோம். இந்தப் பாதையில் உள்ள பெரிய நகரம் இது எனச் சாரதி கூறினர்.

ஸ்ரீநகரில் சிவன் ஆலயம் ஒன்று இருக்கிறது. இதனைக்

'கமலேஸ்வரர் ஆலயம்' என்று கூறுகிறார்கள். திருவீழிமிழலைப் புராணத்தில் இந்தக் கமலேஸ்வரர் பற்றிய ஒரு கதை இருக்கிறது. மகாவிஷ்ணு இங்கு சிவபெருமானை ஆயிரம் 'பிரும்ப கமலம்' என்கிற தாமரைப் புஷ்பங்களால் அர்ச்சனை செய்ய விரும்பினார். தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மலர்களை அர்ச்சித்தபோது ஒரு மலர் குறைந்ததாம்.

கடைசி மலரைக் காணவில்லை. அவரைச் சோதிப்பதற்காக சிவபெருமான் அந்த மலரை மறைத்து விட்டாராம். மகாவிஷ்ணு சற்றும் தயங்காமல் தனது ஒரு கண்ணை எடுத்து கடைசித்தாமரை மலராக அதனைச் சிவபெருமானுக்கு அர்ச்சித்தாராம். சிவபெருமான் அக மகிழ்ந்து மகாவிஷ்ணுவிற்கு சக்கர ஆயுதத்தை அளித்தாராம். அந்தத் தலமே இந்தக் கமலேஸ்வர ஆலயம் என்று சொல்லப்படுகிறது.

அலகநந்தா நதியின் அக்கரையில 'கிள்ளேச்வர' என்ற ஆலயம் இருக்கிறது. அர்ஜுனனுக்கு பாசுபாதாஸ்திரம் அளித்த சிவபெருமான் உறையும் தலம் இதுவெனக் கூறுகிறார்கள்.

ஸ்ரீநாத்தில் பெரிய 'ஆமி காம்ப்' ஒன்றும் இருப்பதாக சாரதி தோமஸ் கூறினார்.

**ருத்ரப் பிரயாகை.**

ஸ்ரீநாத்திலிருந்து பத்துமைல் தூரம் பயணம் செய்தபோது ருத்ரப் பிரயாகை என்ற இடத்தை அடைந்தோம். 'பிரயாகை' என்றால் நதிகள் சங்கமிக்கும் இடம் என்று பொருள். இங்கு அலகநந்தாவுடன் "மந்தாகினி" என்ற நதி சங்கமமாகிறது. மந்தாகினி நாங்கள் சென்று அடையவிருக்கும் கேதார்நாத் தலத்திலிருந்து வந்து இங்கு அலகநந்தாவுடன் சங்கமிருக்கிறது. இந்தச் சங்கமத்தின் பின் மந்தாகினி தனது பெயரை இழக்க, அலகந்தா தேவப்பிரயாகையில் பாகீரதியுடன் சேருவதற்காக வேகமாகப் பாய்ந்து செல்கிறது. தேவப்பிரயாகையில் பாகீரதி, அலகநந்தா ஆகிய இரு நதிகளும் தங்களது பெயர்களை இழந்து கங்கை ஆகின்றன.

ருத்ரப் பிரயாகையில் இரு நதிகளின் சங்கமம் மட்டுமல்லாது பத்ரிநாத், கேதார்நாத் செல்லும் பாதைகளும் சங்கமிக்கின்றன. இங்கிருந்து அலகநந்தா நதியின் கரையோ ரமாகச் சென்றால் பத்ரிநாத் தலத்தையும் மந்தாகினி நதிக் கரையோரமாகச் சென்றால் தேதார்நாத் தலத்தையும் அடை யலாம். இமயமலையில் இருக்கும் இருபெரும் புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் யாத்திரீகர்களுக்கும் இது ஒரு சந்தியாக விளங்குகிறது. இதன் காரணமாக இங்கு எந்தநேரமும் யாத்திரீகர்களின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரிஸா, குஜராத்தி, வங்காளம், இந்தி என இனம்புரியாத மொழிபேசுபவர்கள் பல்வேறு வகையான உடையணிபவர்கள், மாறுபட்ட வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டவர்கள் என பக்தி வெள்ளத்தில் திளைக்கும் பலவகை மனிதர்களை இங்கு காணலாம்.

கடல் மட்டத்தில் ஈராயிரம் அடி உயரத்தில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். சூழவுள்ள மலைகளின் வடகிழக்குப் பக்கத்திலிருந்து பாய்ந்தோடிக்கொண்டிருக்கும் அலகநந்தா நுரை கக்கிக்கொண்டு பேரிரைச்சலுடன் வெண்ணிறமாகக் காட்சி தருகிறது. வடபுறத்திலிருந்து மெதுவாக ஊர்ந்துவரும் மந்தாகினி நீலப்பச்சை நிறமாகத் தெரிகிறது. நதிகளின் சங்கமத்தில் ஏற்படும் ஓசையைக் கேட்கும் போது பெரும் சங்குகள் “ஓம் ஓம்” என்று முழங்குவதுபோல் தோன்றுகிறது.

இந்த நதிகளின் சங்கம இடத்தில் முக்கோண வடிவில் ஒரு பாறை இருக்கிறது. இதற்கு “நாரதப்பாறை” என்று பெயர். முன்னொருகாலத்தில்நாரதமுனிவர்இங்கிருந்துஇசைப்பயிற்சி செய்தாராம். ஆனால் கற்பனை ஓடியவேகத்திற்கு அவரால் பாடமுடியவில்லை. எனவே எரிச்சலுடன் தனது கையில் இருந்த தம்புராவை நீரில் எறிந்துவிட்டு சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தாராம். அவரது கடும் தவத்தைக் கண்டு சிவபெருமான் அவர் மேல் இரக்கங்கொண்டு அவருக்கு இசை கற்பித்தாராம். சிவபெருமானிடம் இசை பயின்ற நாரதமுனிவர்

அங்கே இருந்து வீணை வாசித்துக் கொண்டிருக்கிறாராம். அந்திவேளைகளில் இந்த நாரதப் பாறையில் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தால் 'நாரதரின் வீணாகானத்தைக் கேட்க முடியும்' என்கிறார்கள்.

இதுவரை அலகநந்தா நதிக்கரையோரம் பயணித்துக் கொண்டிருந்த நாம் ருத்ரப் பிரயாகையிலிருந்து மந்தாகினி நதியின் கரையில் கேதார்நாத் தலத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினோம்.

ஏறத்தாழ 35 கி.மீ. பயணம் செய்தபின் 'அகஸ்திய முனி' என்ற இடத்தை அடைந்தோம். அந்தப் பகுதி அகத்திய முனிவர் தவம் செய்த இடம் எனக்கூறினார்கள். பார்வதி - பரமேஸ்வரன் திருமணம் நடந்தபோது திருமணத்துக்குக் கூடிய கூட்டத்தின் காரணமாக வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்துவிட்டதாம். அதனைச் சரிக்கட்டி சமன்செய்ய அகத்திய முனிவரை சிவபெருமான் தென்புலத்துக்கு அனுப்பிவைத்தாராம். அந்தத் தமிழ் முனிவர் அகத்தியர்தான் முதன் முதலாக விந்திய மலையைக் கடந்து தென்னகம் வந்து சமன்செய்ததாகப் புராணக்கதைகள் கூறுகின்றன.

**குப்தகாசி**

கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் இந்த இடம் அமைந்திருக்கிறது. 'குப்த' என்றால் இரகசியம். காசி என்றால் பேரொலி. 'குப்தகாசி' என்றால் பரமேஸ்வரர் தேவர் களுக்கும் மகிரிஷிகளுக்கும் தம்முடைய இரகசிய ரூபமான சந்திரசேகர வடிவத்தைக் காட்டி அருளிய திருத்தலம் என்று பொருள். வசிட்டர் இங்குதான் 'பிரம்மரிஷி' ஆனார் என்று சொல்லப்படுகிறது.

**ஃபடா**

தொடர்ந்து 14 கி.மீ தூரம் பயணித்து ஃபடா என்ற இடத்தை அடைந்தோம். இந்த இடத்திலிருந்து 'கேதார் நாத்'துக்கான பாதை கரடுமுரடானதாகவும் மிகக் குறுகலான தாகவும் அமைந்திருக்கிறது.

நீர் அருவிகள் பாதையின் குறுக்காக ஓடிக் கொண்டிருந்தன. காட்டுப்பகுதி வாகனத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டாலோ அல்லது விபத்து ஏற்பட்டாலோ உதவிக்கு யாரும் இருக்கமாட்டார்கள். அடுத்துவரும் 'கௌரிகுண்டம்' என்ற இடத்திலிருந்து 14 கி.மீ. தூரம் வாகனம் செல்லமுடியாது. மூன்று முதல் ஐந்து அடி அகலமான மலைப்பாதை, கால்நடையாகத்தான் செல்லவேண்டும். 'போனி' என்ற மட்டக் குதிரைகள் மீது ஏறிச் செல்லலாம். குதி ரைப் பாகன் எம்மைக் குதிரை மேல் ஏற்றிவிட்டு பக்கத்தில் நடந்து வருவார். செங்குத்தான மலைப்பாதையில் குதிரை செல்லும்போது சறுக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனாலும் இந் தப் 'போனிக்' குதிரைகள் தினமும் இவ்வழியால் பயணித்துப் பழக்கப்பட்டுவிட்டன. ஆபத்து ஏதும் இல்லாமல் அழைத்துச் செல்வார்கள்.

போனிக் குதிரையில் ஏறிப் பயணிக்க முடியாதவர்களை 'தண்டி' என்ற சாய்வு நாற்காலி போன்ற அமைப்புள்ள பல் லக்கில் வைத்து நான்குபேர் தூக்கிச் செல்வார்கள். இதைவிட 'கண்டி' என்ற கூடை போன்ற அமைப்புள்ள பெட்டிகளில் நிறை குறைவான ஆட்களை ஏற்றி முதுகில் சுமந்து செல்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் வெவ்வேறு தொகையான கட்டணங்கள் அறவிடப்படுகின்றது. 14 கி.மீ. தூரத்தை இந்த மலைப்பாதையில் பயணித்து ஒரு நாளில் திரும்பிவிட முடியாது. மறுநாள்தான் திரும்பலாம்.

**ஹெலிகொப்டர் பயணம்.**

சமீபகாலமா ஃபடா என்ற இடத்திலிருந்து ஹெலி கொப்டரில் இந்தப் 14 கி.மீ. தூரத்தைப் பயணிக்க வசதி செய்துள்ளார்கள். ஐந்து இருக்கைகள் கொண்ட ஹெலிகள் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. ஆனால் இவற்றுக்குரிய கட்டணம் அதிகம். ஒருவருக்கு 7500/- ரூபா வசூலிக்கிறார்கள். சிறுவர்களுக்கு அரைக்கட்டணம் கிடையாது. நாங்கள், ஆறுபேருக்குமாக இந்தியப் பணத்தில் ரூபா 45000/- கொடுக்க வேண்டியிருந்தது. பயணிகளின்


நிறையைக் கணித்து அதற்கேற்றவாறு 'போர்டிங்பாஸ்' தருகிறார்கள். நானும் மனைவியும் முதலிலும் மகன் குடும்பத்தினர் அடுத்தும் ஹெலியில் பயணம் செய்தோம்.

இந்த ஹெலியின் பயணம் எமக்குப் புதிய அனுபவம். அற்புதமான அனுபவமாக இருந்தது. ஹெலியில் பறக்கும் போது நான்கு புறத்துச் சுற்றுச் சூழலையும் பார்த்தபடி பறந்தோம்! மலைமுகடுகளுக்கூடாக அவற்றில் மோதி விடாதவாறு வளைந்தும் திரும்பியும் ஹெலி உயர உயரப் பறந்துகொண்டிருந்தது. பனிமுகடுகளிலிருந்து ஜில்லென்ற குளிர்காற்று உடலைச் சிலிர்க்க வைத்தது. மஞ்சள் வெயி லில் ஹெலியின் நிழல் மலைமுகடுகளில் ஊர்ந்துவந்து கொண்டிருந்தது. தூரத்தே பனிபடர்ந்த வெள்ளிமலைகள் தகதகவென ஜொலித்துக்கொண்டிருந்தன. இதைத்தான் மஹாகவி பாரதி "வெள்ளிப் பனிமலைமீது உலாவுவோம்" என்ற பாடினானோ! அந்த வெள்ளிப் பனிமுகடுகளின் கீழே உள்ள பகுதி மரஞ்செடிகள் ஏதுமின்றி கறுப்புநிறத்தில் தோன்றியது. அதன் கீழே காடுகள் நிறைந்த பச்சை மலைகள் தோன்றின. வெள்ளி, கறுப்பு, பச்சை மலைகளை நான்கு புறமும் ஒரு சேரப் பார்க்கும்போது ஆகா! அழகோ அழகு!! இந்த மலைகளில் ஆங்காங்கே சிறு சிறு ஊற்றுக்கண்களிலிருந்து நதிகள் தோன்றி கீழே ஓடிக் கொண்டிருக்கும் பெருநதியடன் சங்கமிக்கும் காட்சி அற்புதத்திலும் அற்புதம்! "எத்தனைகோடி இன்பம் வைத்தாய் இறைவா! இறைவா!" என்ற பாரதியின் பாடல் வரிகள் என் நெஞ்சில் அலைமோதின. மலை முகடுகளைத் தழுவிவரும் மேகக் கூட்டங்கள் எம்மையும் தழுவி அரவணைத்தன.

தூரத்தே உள்ள ஒரு மலைச்சாரலில் காவி உடையணிந்த மூன்று சந்நியாசிகள் அடர்ந்த காட்டினில் இருந்து தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களது கண்கள் சூரியனை நோக்கிய வண்ணம் இருந்தன. இமயமலையில் சந்நியாசிகள் தவஞ்செய்கிறார்கள் என்பதை சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனை இப்போது நேரிலே பார்க்கிறேன். இவர்களுக்கு இந்தத் தனிமையான காட்டில்

இந்த மலைச்சாரலில் எவ்வாறு உணவு கிடைக்கும்? காற்று, வெயில், மழை போன்றவற்றில் இருந்து இவர்கள் எப்படித் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்? இரவில் இவர்களுக்கு எங்கிருந்து வெளிச்சம் கிடைக்கும்? காட்டு மிருகங்களில் இருந்து இவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்? இவற்றுக்கெல்லாம் ஒரே பதில் - அவர்களது தவவலிமைதான்!

நாம் பயணித்த ஹெலி கேதார்நாத் தலத்தின் முன்னால் தரையிறங்கியது.



# 07

# கேதார்நாத் தரிசனம்

"ஜெய் கேதார்நாத்"

கேதார்நாத் யாத்திரைக்கு வரும் பக்தர்கள் எதிரே வருபவர்களைப் பார்த்து இவ்வாறு முகமன் கூறுவார்கள். கேதார்நாத் திருத்தலத்தின் முன்னால் உள்ள திடலில் நாங்கள் ஹெலிகொப்டரில் இருந்து இறங்கி மகனது குடும்பத்தினரது வரவுக்காகக் காத்து நின்றபோது பலர் "ஜெய் கேதார்நாத்" என எம்மைப் பார்த்துக் கூறினார்கள். நாமும் பதிலுக்கு அவ்வாறே கூறிக்கொண்டோம். அடுத்து வந்த ஹெலியில் இருந்து இறங்கிய மகன் குடும்பத்தினர் எம்மோடு இணைந்து கொண்டனர். நாங்கள் நின்று கொண்டிருந்த திடலில் இருந்து கேதார்நாத் திருத்தலத்தை சென்றடைய ஒரு கிலோமீற்றர் நடக்க வேண்டி இருந்தது. நடந்து செல்ல முடியாதவர்களை கூடையில் வைத்துத் தமது முதுகில் சுமந்து செல்வதற்கு அங்கு கூலியாட்கள் இருக்கிறார்கள். எமது பேரப்பிள்ளைகள் இருவரையும் இரு கூலியாட்கள் சுமந்துவர நாங்கள் கோவிலுக்கு நடந்து சென்றோம்.

'கேதார்' என்பது சிவபெருமானுடைய இன்னொரு பெயர். சிவபெருமானின் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுள் கேதார்நாத்தும் ஒன்று. சிவபெருமான் இங்கேதான் பஞ்சபாண்டவர்களுக்கு தரிசனம் தந்ததாகக் கூறப்படுகிறது. சிவபெருமான் உறையும் இடங்களிலே பூவுலகில் கேதார் நாத்திற்கு நிகரான வேறோர் இடம் இல்லை என வியாசர்

பஞ்சபாண்டவர்களுக்கு எடுத்துரைக்க அவர்கள் சிவபெருமா னைத் தேடி இங்கு வந்தார்கள். சகோதரர்களையும் உற்றார் உறவினர்களையும், குருமார்களையும் கொன்று குவித்த பாவத்திற்குப் பரிகாரம் தேட வந்த இவர்களை சிவபெருமான் சந்திக்க விரும்பவில்லை. ஓர் எருதாக மாறி மாட்டு மந்தைக் கூட்டத்தில் ஒளிந்து கொண்டார்.

பஞ்சபாண்டவர்கள் தாம் செய்த பாவங்களிலிருந்து விடுபடவேண்டுமானால் கேதார்நாத்தில் நித்திய தவ யோகத்தில் ஆழ்ந்திருக்கும் உமாமகேஸ்வரனைத் தஞ்சம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை என வியாசமுனிவர் அவர்களுக்கு எடுத்துரைத்ததாகப் புராணம் கூறுகிறது.

தாம் பார்த்த மந்தைக் கூட்டத்தில் ஓர் எருதிலே தெய்வீக அம்சம் ஒளிர்வதைக் கண்ட பீமன் அது சிவபெருமான் தான் என அடையாளம் கண்டுகொண்டு அதனைப் பிடிக்க முயன்றபோது சிவபெருமான் பூமிக்குள் மறைய ஆரம்பித்தார். பலசாலியான பீமன் அவர் பூமிக்குள் சென்று மறை யாமல் இருக்க எருதின் ஏரியைப் பிடித்திழுக்க, சிவபெருமானின் ஏனைய பாகங்கள் நான்கு இடங்களில் விழுந்தனவாம். மேற்கில் துங்கநாத்தில் புஜம், முகம் ருத்ரநாத்தில், வயிறு மத்யமேச்வரத்தில், ஜடை கல்பேச்வரத்தில் தங்கின. பீமன் பிடித்திழுத்த ஏரியை கேதார்நாத்தில் தங்கியது. இந்த ஐந்து இடங்களும் 'பஞ்ச கேதாரம்' என வழங்கப்படுகின்றன. இவற்றைப் 'பஞ்சபர்வதம்' எனவும் கூறுவார்கள்.

வெள்ளிப் பனிமலை பின்னணித் திரையாகக் காட்சி அளிக்க முன்னால் கேதார்நாத் ஆலயமும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் கண்கொளாக் காட்சியாக அமைகின்றன. ஆலயத்தில் உள்ள லிங்கம் கருங்கல்லினால் ஆனது. எருதின் ஏரி யைப் போன்ற தோற்றமுடையது. இங்கே உள்ள ஆலயத்தைப் பாண்டவர்கள் முதலில் நிர்மாணித்தார்கள் எனவும், பின்னர் ஆதிசங்கரர் புனர் நிர்மாணம் செய்தார் எனவும் அறிய முடி கிறது. திருச்சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. ஒரேயொரு சுற்றுப்பிரகாரம்தான் இங்கே உண்டு. சுற்றிலும் உள்ள

மலைகள் அரணாக அமைந்திருக்கின்றன. கருவறை விமானம் பாண்டவர்களால் கட்டப்பட்டது என அங்கு பூஜை செய்பவர் கூறினார்.

ஆலயத்தின் முன்பாக ஒரு பெரிய நந்தியின் சிலை இருக்கிறது. நுழைவாயிலின் அருகில் இடதுபுறத்தில் பிள்ளை யார் வீற்றிருக்கிறார். அவர் வலக்கையில் உருத்திராக்க மாலையை உருட்டிக்கொண்டு தவசீலராக அமர்ந்திருக்கிறார். அந்தப் பிள்ளையார் சிலை மிகவும் புரா தனமான சிலை என்பது பார்த்த மாத்திரத்திலேயே புரிகிறது. நுழைவாயிலில் இரு புறமும் துவாரபாலகர்கள் காட்சியளிக்கிறார்கள். துவாரபாலகர்களின் மேலே கோபாலகிருஷ்ணரின் உருவம் அமைந்துள்ளது. சுற்றிலும் உள்ள சுவர்களில் பஞ்சபாண்டவர்களின் பெரிய கற்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. திரௌபதி, குந்தி, கண்ண பிரான் சிலைகளும் இருக்கின்றன. மத்தியில் பித்தளையினாலான சிறிய நந்தி ஒன்று கருவறையை நோக்கி அமைந்திருக்கிறது.

கருவறையில் மூன்றடி உயரமுள்ள ஜோதிர்லிங்கமாக கேதாரநாதர் வீற்றிருக்கிறார். ஜோதிர்லிங்கத்தின் இடப் பாகத்தை சக்தியாக ஆராதிக்கிறார்கள். கீழே நாற்புறமும் வெள்ளிப்பட்டையால் வரம்பு கட்டியிருக்கிறார்கள். இங்கு வீரசைவ பரம்பரையைச் சேர்ந்த ‘பண்டா’க்கள் எனப்படுவோர் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சமஸ்கிருத பண்டிதர்கள். இவர்கள் வேதம் ஓதி சங்கல்பம் செய்ய சுவாமிக்கு நாமே நெய் அபிஷேகம் செய்யலாம். அர்ச்சனை செய்யலாம். தீப தூபங்கள் காட்டலாம்; தொட்டுத் தழுவி வணங்கலாம். பாண்டவர்கள் வழிபட்ட அதேமுறையிலேதான் தலைமுறை தலைமுறையாக இங்கு வழிபாடு நடப்பதாக அறிகி றோம். கருவறையில் ஓர் அகண்ட ஜோதி எந்நேரமும் எரிந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் தரிசனத்தை முடித்துக் கொண்டு கோயிலை வலம் வந்தோம். கோயிலில் பின்புறத்தில் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்ட இரு கல்வெட்டுக்கள் காணப்பட்டன. ‘சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டிலிருந்து இங்குவந்த

முனிவர்கள் ஸ்ரீ ஞானசம்பந்தர், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் ஸ்ரீ கேதார்நாதரைப் பற்றிப் பாடிய பாடல்கள் கீழே கல்வெட்டில்உள்ளன'என்றகுறிப்பும்அவர்களதுஉருவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்தபோது பெரும் மகிழ்வு ஏற்பட்டது. வட இந்தியாவில் நாங்கள் காலடி எடுத்து வைத்தபின் இப்போதுதான் தமிழைப் பார்க்கிறோம். இருவர் பாடிய தேவாரங்களையும் உரத்து வாசித்து மகிழ்ந்தோம்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இந்தத் தலத்தை நேரில் வந்து தரிசித்ததாக வேறு சான்றுகள் இல்லை. இவர்கள் இருவரும் எமது நாட்டில் உள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய தலங்களை இராமேஸ்வரத்திலிருந்து தமது ஞானதிருஷ்டியினால்தரிசித்து இத்தலங்கள் மேல் தேவாரங்கள் பாடியது போல் 'கேதார்நாத்' திருத்தலத்தையும் தமிழ்நாட்டிலிருந்து ஞான திருஷ்டியினால் தரிசித்துப் பாடியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

சிறிது தூரத்தில் கொட்டகை போன்ற சிறிய கட்டிடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் பளிங்குச் சிலையொன்று நிறுவப்பட்டிருந்தது. இவர் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெருங்காடுகளும் கொடிய விலங்குகளும் நிறைந்திருந்த மலைகளினூடாக கடுங்குளிரில் தனது பதினாறு வயதி னில் கேதார்நாத்திற்கு வந்து ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்திருக்கிறார் என்பதை நினைத்தபோது பிரமிப்பாக இருக்கிறது. ஆதிசங்கரர் பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் (சுயம்புலிங்கம்) தலங்களுக்கும் சென்று வழிபட்டு தோத்திரங்கள் இயற்றியுள்ளார். அவை வடமொழியில் உள்ளன. கேதாரநாதரைப் பற்றிய அவர் பாடிய தோத்திரம் ஒன்று பின்வருமாறு அமைகிறது:

**"இமயகிரியின் ஒரு பகுதியில் ஆனந்தத்தடன் எழுந்தருளி**
**முனிவர்களாலும் தேவர்களாலும் அசுரர்களாலும்**
**யட்சர்களாலும் பெரிய நாகங்களாலும் பூஜிக்கப்படும்**
**கேதாரம் என்னும் இடத்தில் உள்ள சிவபெருமானைத்**
**துதிக்கிறேன்"**

ஸ்ரீ ஆதிசங்கரர் அத்வைத தத்துவத்தை முன்வைத்தவர். ஆன்மீக உணர்ச்சி பரவித் தழைக்கவும், தெய்வ பக்தி செழிக்கவும், ஆலய தரிசனங்களும் புனிதப் பயணங்களும் ஆண்டாண்டு காலமாகத் தொடரவும், தீர்த்த மகிமைகளும் தலபுராணங்களும் சிறந்தோங்கவும், பாரதமெங்கும் பாதயாத்திரை செய்து 1100 ஆண்டுகளுக்கு முன்னர் அடித்தளம் அமைத்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர் என்பதை இந்தப் பயணத்தின்போது நாம் தெட்டத்தெளிவாக உணரமுடிந்தது. முப்பத்திரண்டே வயதிற்குள் சமாதிநிலை அடையமுன் அவர் இதனைச் சாதிக்கிறார் என எண்ணியபோது பிரமிப்பாக இருக்கிறது. பாரத பூமியை இரண்டு தடவை வலம் வந்து, புராணப் பெருமைகளை எல்லாம் எமக்கு நினைவுபடுத்தி, தெய்வங்களின் சிறப்புக்களை உள்ளத்தில் ஆழப்பதித்து, சாத்திரங்களைத் தொகுத்து, தோத்திரங்களைப் படைத்து, வழிபாட்டு முறைகளையும் வாழ்க்கை நெறிகளையும் இவர் எமக்குத் தந்தருளியிருக்கிறார்.

கோவிலின் முன்புறத்துக்கு வந்தபோது ஒரு முனிவர் நந்தியின் அருகில் அமர்ந்திருந்தார். அவர் எங்களைத் தமது அருகே வரும்படி சைகை செய்தார். அருகில் சென்றபோது எங்களுக்குத் திருநீறு பூசி ஆசீர்வதித்தார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உருத்திராக்கம் தந்தார். அவற்றை அவர் சூழவுள்ள மலைச்சாரல் காடுகளில் பெற்றிருக்கலாம். நாம் அது தொடர்பாகக் கேட்டபோது மலைச்சாரலைக் காட்டினார். அவர் எதுவும் கதைக்கவில்லை. அங்குள்ளவர்கள் அவரை 'மௌனசாமி' என்கிறார்கள்.

கேதாரீஸ்வரரைத் தரிசித்தது வாழ்வில் பெரும் பேறு பெற்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது. கேதாரீஸ்வரரின் சக்தியாக விளங்கும் 'கேதாரகௌரி' விரதத்தைப் பெண்கள் நோற்பது வழக்கம். பார்வதி தேவியார் கௌரி விரதத்தைக் கைக்கொண்டு பரமேஸ்வரனது இடது பாகத்தில் இருக்கும் பேறினைப் பெற்றார் என்பது புராண வரலாறு. இந்த நோன்பினை நோற்கும் கன்னியர்க்கு திருமணப் பேறும்

இன்பமான இல்லற வாழ்வும் நன்மக்கட்பேறும் கிட்டுமென புராணங்களில் கூறப்பட்டுள்ளது. நமது நாட்டிலும் கேதார கௌரி விரதம் பெண்களால் அனுஷ்டிக்கப்படுவது வழமை யில் உள்ளது.

கேதாரநாதரைத் தரிசித்தபின் பக்கத்து மலையின் மேலே உள்ள சூழலைக் கவனித்தோம். தென்பகுதியில் வைரவர் கோயில் ஒன்று இருக்கிறது. திரும்பும் வழியில் சிறு கடைகள் இருக்கின்றன. இவற்றைப் பார்வையிட்டபடியே நாம் ஹெலிகொப்டர் இருக்கும் இடத்துக்குத் திரும்பினோம். அப்போது ஓர் அசம்பாவிதம் ஏற்பட்டது. மருமகள் தலை சுற்றுவதாகக் கூறி வாந்தி எடுக்கத் தொடங்கினாள். சுவாசிக்கக் கஷ்டப்பட்டாள். சிறிது நேரத்தில் மயக்கமுற்று நிலத்திலே சாய்ந்துவிட்டாள். நாடித்துடிப்பு ஒழுங்காக இருந்தது. பயப்படும்படியாகஒன்றுமில்லை.12,000அடிஉயரத்தில்பவன அமுக்கம், பிராணவாயு ஆகியவை குறைவாக இருப்பதால்தான் இப்படி ஏற்பட்டது என்பதைப் புரிந்துகொண்டேன். உடனே பிராணவாயு கொடுக்க வேண்டும் அல்லது உயரம் குறைந்த மலையடிவாரத்தக்குச் செல்ல வேண்டும். நிலைமையை கைத்தொலைபேசியில் ஹெலிகொப்டர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தோம். அவர்கள் துரிதமாகச் செயற்பட்டார்கள். கீழே போவதற்குத் தயாராக இருந்த பயணிகளை ஹெலிகொப்டரில் இருந்து இறக்கவிட்டு எமக்கு முன்னுரிமை கொடுத்து எங்களை ஹெலியில் ஏறச்சொன்னார்கள். மயக்கநிலையில் இருந்த மருமகளை தூக்கி ஏற்றுவதற்கு உதவி செய்தார்கள்.

ஹெலி கீழே இறங்கிக் கொண்டிருக்கும்போது மருமகள் விழித்தெழுந்து விட்டாள். கீழே வந்ததும் சூடாகக் கோப்பி தந்தார்கள். எல்லாம் சரியாகிவிட்டது. சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு ஹெலிகொப்டர் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து அவர்களது பதிவுப் புத்தகத்தில் எழுதி வைத்து விட்டு வெளியே வந்தபோது எமது கார்ச்சாரதி தோமஸ் எமக்காகக் காத்துநின்றார்.

மெலே நிமிர்ந்து, கேதாரநாதரை மீண்டும் ஒருமுறை

வணங்கினேன். நல்லவேளையாக தரிசனம் முடிந்தபின்னரே மருமகளுக்கு மயக்கம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்தால் கேதாரநாதரைத் தரிசிக்கும் பாக்கியம் எமக்குக் கிடைக்காமலே போயிருக்கலாம். ‘அதற்கெல்லாம் கொடுப்பனவு வேண்டும். ஹெலிகொப்டரில் கேதார நாதரைத் தரிசிக்கச் சென்ற மைசூர் மகாராஜா மேகமூட்டம் மலையில் பாதையை மூடிக்கொண்டதால் தரிசிக்க முடியா மல் திரும்பினார்’ என்று ஆரம்பத்தில் தோமஸ் கூறியது எனது ஞாபகத்துக்கு வந்தது.

கேதார்நாத் தரிசனத்தக்கு உகந்த காலம் ஏப்ரல் 15 முதல் அக்டோபர் மாதம் வரை ஆகும். ஏனைய காலங்களில் கோயிலைப் பனி முற்றாக மூடிவிடும். நாங்கள் அக்டோபர் மாத ஆரம்பத்தில் வந்ததால் எமக்குத் தரிசனம் கிடைத்திருக்கிறது. இன்னும் இரண்டு கிழமை தாமதித்து வந்திருந்தால்கூட எம்மால் இங்கு வரமுடியாமல் போயிருக்கும். இதனைத்தான் ‘கொடுப்பனவு வேண்டும்’ என்று தோமஸ் கூறினாரா என எண்ணி மீண்டும் கேதாரநாதரை மனமுருகித் துதித்தேன்.



# 08

# பத்ரிநாத் தரிசனம்

கேதார்நாத் தரிசனத்தை முடித்துக்கொண்டு பத்ரிநாத் திருத்தலத்துக்குப் புறப்பட்டோம். 'மலைகளில் நான் இமாலயம்' என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவக்கீதையில் கூறுகிறார். வைணவத் திருப்பதிகள் எனச் சிறப்புப் பெறும் 108 திருப்பதிகளில் பத்ரிநாத் திருப்பதியும் ஒன்றாகும்.

இங்குள்ள பத்ரிநாதர் வைஷ்ணவர்களுக்கு வைகுண்ட நாதன், சைவர்களுக்கு பஞ்சமுகி சிவன், சாக்தர்களுக்குக் காளி. ஜைனர்களுக்கு நிர்வாணத் தீர்த்தக்காரர் என எந்த வடிவிலே மனக்கண்ணால் பக்தர்கள் வழிபடுகிறார்களோ அந்த வடிவில் அவர் காட்சி தருகிறார் என்பது நம்பிக்கை. 'எல்லாம் நானே' என்ற தத்துவத்தை இது விளக்குகிறது.

இமயமலைச் சாரலில் 13,350 அடி உயரத்தில் பத்ரி நாத் திருத்தலம் அமைந்திருக்கிறது. பஞ்சபாண்டவர்கள் பத்ரிநாதரைத் தரிசிக்க கேதார்நாத் வழியாகத்தான் சென்றார் கள் எனக் கூறப்படுகிறது. அந்தக்காலத்தில் பத்ரிநாத் செல்வதற்கு இதுதான் ஒரே பாதையாக இருந்தது.

நாங்கள் சென்றுகொண்டிருந்த பாதையில் இமாலய மலைத்தொடர் ஒரே சீராக அமைந்திருக்கவில்லை. ஓரிடத்தில் தாவரங்கள் ஏதுமற்ற பாறாங்கல்லாக இருக்கிறது. வேறோர் இடத்தில் ஏதுமற்ற பாறாங்கல்லாக இருக்கிறது. வேறோர் இடத்தில் மண் மலையாக இருக்கிறது. பிறிதோர் இடத்தில் வயல்களும் தாவரங்களும் மண்டிக்

கிடக்கும் செழிப்பான பூமியாகத் தெரிகிறது. சில இடங்களில் மலையே தெரியாதவாறு அடர்ந்த காடாகத் தோற்றமளிக்கிறது. இமாலயப் பயணம் அலுப்புத் தெரியாமல் இருப்பதற்கு அவ்வப்போது மாறுபடும் இந்தத் தோற்றங்கள் தான் காரணமாய் அமைகின்றன. இந்தக் காட்சிகள் கண்களைக் கவர்ந்தபோதிலும் பக்கத்தில் அதலபாதாளத்தில் ஓடிவரும் அலகநந்தா நதியைப் பார்க்கும்போது வயிற்றைக் கலக்கியது. தூரத்தில் வளைவில் ஊர்ந்து கொண்டிருந்த ஒரு பஸ்ஸைப் பார்க்கிறோம். பஸ் சாரதி சற்று நிதானம் தவறினால் அல்லது மலை யில் மண்சரிவு ஏற்பட்டால் என்ன கதி? என நினைத்தபோது நெஞ்சு பகீரென்றது.

பஞ்சபாண்டவர்கள் தமது இறுதிக் காலத்தில் இதே பாதையால்தான் இமயத்தை நோக்கி சுவர்க்க யாத்திரை சென்றார்கள். யோகத்தில் மனதை நிறுத்தி மகாபர்வதமான இமயத்தில் ஏறிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுள் திரௌபதியின் மனம் யோகத்திலிருந்து பிறழ்ந்து விட்டது. கால்கள் தள்ளாடி அவள் நிலத்திலே வீழ்ந்தாள். அவள் விழுவிதைக் கண்ட மகா பலசாலியான பீமன் முன்னால் சென்று கொண்டிருந்த அண்ணன் தருமரிடம் கேட்டான், ‘தவத்தில் பெரியவரே, திரௌபதி ஒரு பொழுதும் எந்தப் பாவமும் செய்யவில்லையே.... அவள் கீழே விழுந்ததற்குக் காரணமென்ன?’

பீமனுடைய கேள்வியைக் கேட்ட தருமர், பின்னால் திரும்பாமல் நடந்துகொண்டே பதில் சொன்னார். ‘அவளு டைய மனதில் அர்ஜுனனிடம் மட்டும் மிகுதியான அன்பு இருந்தது.’ சற்று நேரத்திற்கப் பிறகு சகாதேவனும் பூமியில் விழுந்தான். அவன் விழுந்ததைப் பார்த்து பீமன் தருமரிடம் கேட்டான், ‘அண்ணா சகாதேவனுடைய மனதில் அகந்தை என்பது துளியும் இருந்ததில்லை. இவன் எந்தக் காரணத்தால் விழுந்தான்?’ தருமர் மறுமொழி கூறினார், ‘தன்னைப் போன்ற புத்திமான் வேறுயாரும் கிடையாது என்ற அகந்தையால் அவன் விழுந்தான்’. தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தார்

தருமர்.

சகாதேவனைத் தவிர மற்றச் சகோதரர்களுடனும் ஒரு நாயுடனும் தருமர் முன்னேறிக் கொண்டிருந்தார். அப்போது சகாதேவனின் பிரிவினால் துக்கம் தாளாது நகுலனும் விழுந்தான். பீமன் மீண்டும் தருமரிடம் கேட்டான். 'அண்ணா, அறத்திலிருந்து சற்றும் வழுவாத நகுலன் ஏன் விழுந்தான்?' தருமர் நகுலனைப் பற்றிச் சொன்னார். 'தன்னைப் போன்ற அழகன் வேறு யாருமில்லை என்று அவன் அவன் மனதில் இருந்த அகந்தைதான் காரணம். 'வா தம்பி, யார் என்ன வினை செய்தார்களோ அதன் பயனை நிச்சயமாக அனுபவிப்பார்கள்.' மேலும் சிறிது தூரம் போனதும் வீரத்தில் சிறந்த அர்ஜுனன் பாதையில் விழுந்தவுடன் பீமன் மீண்டும் தருமரிடம் கேட்டான். 'அண்ணா, அர்ஜுனன் விளையாட்டுக்காகக் கூடப் பொய் பேசமாட்டான். எந்த வினையின் காரணமாக அவன் விழுந்தான்?' தருமர் பதில் சொன்னார். 'அர்ஜுனனுக்கு தனது வீரம் பற்றிய அகந்தை இருந்தது'. தருமர் முன்னே போய்க் கொண்டிருந்தார். அப்போது பீமனும் கீழே விழுந் தான். விழுந்ததும் தருமனை அழைத்துக் கேட்டான், 'எனது வீழ்ச்சிக்கு என்ன காரணம்?' தருமர் சொன்னார். 'தம்பி, உனக்கு உணவில் மிக விருப்பம். மேலும் மற்றவர்களை நீ துச்சமாக நினைத்துத் தற்பெருமை பேசிக்கொண்டிருப்பாய். அதனால்தான் நீ விழவேண்டி வந்தது' எனக் கூறிக்கொண்டே வரிசையாக எல்லாச் சகோதரர்களும் வீழ்ந்தபிறகு தருமர் தனியாக மனித சஞ்சாரமற்ற வேறு உயிர்களே செல்ல இயலாத நெடிதுயர்ந்த இமயமலையில் பின்னே திரும்பாமல் மேலே மேலே போய்க்கொண்டிருந்தார் என்பது மகாபாரத வரலாறு.

பஞ்சபாண்டவர்கள் சென்ற அதே பாதையில்தான் நாமும் இப்போது சென்று கொண்டிருக்கிறோம் என்ற விந்தையான ஓர் எண்ணம் என் மனதில் தோன்றியது. பாதை சரியானது தான்! ஆனால் அந்த உயரத்துக்கு எம்மால் போகமுடியாதே! 'விழுந்து விடுவோம்' என்ற உண்மை உள்ளத்தில் உறைத்தது.

நாங்கள் சென்று கொண்டிருந்த பாதையில் 'பாண்டுகேசுவரம்'

என்ற இடத்தினை அடைந்தோம். இது பாண்டவர்கள் பிறந்த ஊர் என்று சொன்னார்கள். இங்கு கிடைத்த செப்புப் பட்டயங்கள் பாண்டவர்களில் மூத்தவரான தருமரால் எழுதப்பட்டவை எனவும் அவை பத்ரிநாத் ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன எனவும் கூறினார்கள். பாண்டுகேசுவரத்திலிருந்து ஒரே செங்குத்தான மலையேற்றம்தான். அடுத்துவந்த பத்துமைல் தூரத்தில் நாம் 4000 அடி உயரம் ஏறினோம்.

ஒரு மாலை வேளையில் நாங்கள் பத்ரிநாத் ஆயலத்தை அடைந்தோம். அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற் கான ஏற்பாடுகளைச் செய்தோம்.

பத்ரிநாத் ஆலயம் அலகநந்தா நதியின் கரை யோரமாக அமைந்துள்ளது. ஆதியில் ஸ்ரீமத் நாராயணன் வேதங்களைச் சிருஷ்டித்து, தானே ஆதி குருவாகத் தோன்றி மக்களை உய்விக்கும் பொருட்டு நாராயணனாக இமயத்தில் தவக்கோலம் பூண்டார். அப்போது லட்சுமிதேவியானவள் ‘பத்ரி (இலந்தைச் செடி)யாக உருவெடுத்து மகாவிஷ்ணுவுக்கு நிழல் கொடுத்து அவரது தவம் பூர்த்தியடைய உதவினாள். இதன் காரணமாகவே இந்த இடத்திற்கு ‘பத்ரிநாத்’ என்ற பெயர் ஏற்பட்டது. ‘பத்ரி’ என்றால் சமஸ்கிருத மொழியில் இலந்தைச் செடியைக் குறிக்கும். ஆதிகாலத்தில் இப்பகுதியில் இலந்தைச் செடிகள் நிறைந்து காணப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

பத்ரிநாத் ஆலயம் ஆறு மாதங்களுக்கு மட்டுமே யாத்திரீகர்களுக்காகத் திறந்து வைக்கப்படும். மே மாதத்தில் திறக்கப்பட்டு தீபாவளிக்குப் பின் மூடப்பட்டு விடும். ஏனைய காலங்களில் பனியினால் மூடப்பட்டுவிடும். பனிக்காலம் முடிந்தபின் ஒவ்வொரு ஆண்டும் ஆலய நிர்வாகிகள் சோதி டர்களையும் பண்டிதர்களையும் கலந்தாலோசித்து கோயில் திறக்கப்படும் திகதியை அறிவிப்பார்கள். அதேபோன்று பனிக் காலம் தொடங்குமுன் கோயிலை மூடுவதற்கும் இதேமுறை அனுசரிக்கப்படுகிறது.

இங்கு ஓர் அதிசயம் நடப்பதாகக் கூறுகிறார்கள்.

பனிகாலத்தில் கோயிலை மூடும்போது போதுமான அளவு நெய்யை மூலஸ்தானத்தில் உள்ள விளக்கில் ஊற்றி கதவை மூடிவிட்டு வந்துவிடுவார்களாம். பனிக்காலம் முடிந்து மார்ச் முதல் வாரத்தில் கோயிலைத் திறக்கும்போது தீபம் சற்றும் ஒளிகுன்றாமல் எரிந்து கொண்டிருக்கும். சுவாமிக்குச் சாத்திய மாலைகள் சற்றும் வாடாமல் அப்படியே இருக்கும். இதைக் காண்பதற்காகவே கோயில் திறக்கப்படும்போது யாத்திரீகர்கள் பலர் அங்கு வருவார்களாம். கோயிலைத் திறக்க நேரிடும்போது வாயிற்கதவை மூடியுள்ள பனிக் கட்டிகளை மண்வெட்டியினாலும் பிக்கானினாலும் வெட்டி அப்புறப்படுத்த வேண்டியிருக்குமாம். காற்று புகக்கூட முடியாத இடத்தில் எரியும் இந்தத் தீபத்தை 'ஜோதி' என்கின்றனர். கோவில் திறக்கப்படும் நாளன்று அகண்ட ஜோதி தரிசன நாளாகவே இருக்கும். கோவில் மூடியுள்ள காலத்தில் தேவர்கள் இங்கு வந்து பத்ரிநாதரைத் தரிசிப்பதாக ஐதீகம்.

இந்தத் தலத்தின்மேல் திருமங்கையாழ்வாரும் பெரி யாழ்வாரும் பாசுரங்கள் பாடியுள்ளனர்.

கி.பி 9 ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரால் நாரத குண்டத் தில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகத்தையே இங்குள்ள மூல மூர்த்தியாக பிரதிஷ்டை செய்ததாகவும் கூறுகின்றனர்.

இந்த ஆலயமானது அசோக சக்கரவர்த்தி காலத்தில் பௌத்தர்களால் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகிறது. பத்ரிநாதர் பத்மாசனத்தில் இருக்கிறார். அதனால் புத்தரை நினைவுபடுத்துகிறார். பௌத்தர்கள் இதனைப் புத்தவிஹாரை என்று நம்புகின்றனர். இன்றும் பௌத்த யாத்திரிகர்களை இங்கே காணலாம்.

குபேரன் வசிக்கும் அளகாபுரி இங்கிருந்து ஒன்பது மைல் தொலைவில் இருப்பதாகக் கூறுகிறார்கள். அலகநந்தா நதி அங்கிருந்துதான் உற்பத்தியாகி வருகின்றதாம்.

ஆதிசங்கரர் ஏற்பாடு செய்த காலத்திலிருந்து பத்ரிநாத ருக்கு பூசை செய்யும் உரிமை கேரளத்தின் நம்பூதிரிமார்களுக்கு உரியது. இவர்களை பத்ரிநாத் கோவில் நிர்வாகத்தினர்

நியமிக்கின்றனர். இங்கு பூசை செய்பவர்களை 'ராவல்ஜி' என்று அழைக்கின்றனர்.

இங்குள்ள அலகநந்தா நதியில் தண்ணீர் பனிக்கட்டி போல் ஜில்லென்று குளிரும். இந்த அலகநந்தா நதியின் மிக அருகே தப்தகுண்டம் என்னும் வெந்நீர் ஊற்று உள்ளது. பத்ரிநாதரின் திருவடிக்குக் கீழ் இருந்து இந்த வெந்நீர் ஊற்று வருகிறது என்று கூறுகிறார்கள். பத்ரிநாத்தின் சிறப்புகளில் இந்த தப்தகுண்டமும் ஒன்றாகும். குண்டத்தின் நீரிலிருந்து ஆவி பறக்கிறது. கையையோ காலையே வைத்துவிட்டால் கொப்பளித்துவிடும் போலிருக்கிறது. நான் தயங்கி நின்றபோது மகன் ராஜன் குண்டத்தில் தொப்பென்று குதித்துவிட்டான். உள்ளே குதித்துவிட்டால் ஒரு கணநேரம் எம்மால் சூடு தாங்குமுடியாது. பின்னர் தாங்கக்கூடிய சூடுதான் என்பதைப் புரிந்துகொண்டு நாங்கள் ஒவ்வொருவராக அந்தத் தப்தகுண்டத்தில் இறங்கி ஸ்நானம் செய்தோம். இடுப்பளவு ஆழம்தான். உடம்பிற்குச் சுகமாக இருந்தது. அங்கிருந்து எழுந்து வெளியே வர மனம் வரவில்லை.

கோவிலில் ஆறு மணிக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் ஆராத்தியும் நடைபெறும் என அறிந்து அங்கு சென்றோம். தரைமட்டத்திலிருந்து கோயில் ஐம்பது அடி உயரத்தில் உள்ளது. படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். கோயில் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது, மூலஸ்தானம் கர்ப்பக்கிரஹம் பொன் தகடுகளால் வேயப்பட்ட மேல் கூரை யோடு சேர்ந்தது. இரண்டாவது தரிசன மண்டபம், இங்கேதான் பூஜை மற்றும் இதர சடங்குகள் நடைபெறுகின்றன. ஆனால், இந்த மண்டபம் மிகச் சிறிதாக இருப்பதால் ஒரு சிலரே இந்த மண்டபத்தில் இருக்கமுடியும். மூன்றாவது சபா மண்டபம். இங்குதான் பக்தர்களுக்கு தரிசனம் கிட்டுகிறது. தப்த குண்டத்தில் நீராடிவிட்டு பூசைகளில் கலந்துகொள்கிறார்கள்.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலில் உள்ள பத்துத் தூண்கள் விஷ்ணுவின் பத்து அவதாரங்களைக் குறிக்கின்றன. கோபுர வாசலைக் கடந்ததும் கருடாழ்வார்

தரிசனம் தருகிறார். உள்ளே ஆஞ்சநேயர், விநாயகர், துர்க்கை, மகாலட்சுமி ஆகிய தெய்வங்களுக்கு சந்நிதானங்கள் இருக்கின்றன. கருவறையில் பத்ரி ஸ்ரீமத் நாராயணன் தெய்வீக ஒளிவீச பேரெழிற் கோலத்தில் காட்சி தருகிறார். நவரத்தின அணிமணிகள், பலவித மலர்மாலை அலங்காரங்களுடன் பத்மாசனத்தில் அமர்ந்த திருக்கோலத்தில் பத்ரி நாதரைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தோம்.

இங்கு பூசை ஆராதனைகள், மந்திர வழிபாடுகள், தென்னாட்டுக் கோயில்களில் நடப்பதைப் போன்றே இடம்பெறுகின்றன. பூசை செய்வோர் குளிரைத் தாங்க ஏதுவாக கம்பளிக்கோட்டு, தலைக்குத் தொப்பி, கையுறை, காலுறைகளுடன் காணப்படுகின்றனர்.

வழிபாடு முடிந்து சிறித நேரத்தின் பின் கோவிலின் பிரதான அர்ச்சகரை அவரது இருப்பிடத்திற்குச் சென்று வணங்கி ஆசீர்வாதம் பெற்றோம். இந்தியாவில் உள்ள முக்கிய மொழிகளில் அவரால் சம்பாஷிக்க முடிகிறது. இடையிடையே ஆங்கிலமும் கலந்து பேசுகிறார். ‘நாங்கள் ஸ்ரீலங்காவிலிருந்தும் அவுஸ்ரேலியாவிலிருந்தும் வந்திருக்கிறோம். கேதார்நாத் தரிசனத்தை முடித்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறோம்’ என கூறியபோது அவர் ‘இப்படி வந்தது ஓர் அற்புதம் It is a Miracle. இது எல்லோருக்கும் கிட்டுவதில்லை’ என்று கூறினார். அடுத்தநாள் காலை நடைபெறும் மஹா அபிஷேகத்தில் நாங்கள் உபயகாரராகக் கலந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தோம். அதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி அவர் தனது உதவியாளரைப் பணித்தார். எங்களை அதிகாலை ஐந்து மணிக்கு கோயிலுக்கு வரும்படி கூறினார். அவரது உதவியாளரிடம் அபிஷேகத்துக்குரிய பணத்தைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டோம்.

அன்று நாங்கள் தங்கவேண்டிய அறைக்குத் திரும்பியபோது கடும் குளிராக இருந்தது. எம்மால் தாங்க முடியவில்லை. அறையின் உள்ளே குளிர் வராதவாறு நீக்கல்களைத் துணிகொண்டு அடைத்தோம். தடிப்பான ‘குல்ற்’

போர்வைக்குள் எம்மைப் போர்த்திக்கொண்ட போதும் தூங்கமுடியவில்லை. இரவு முழுவதும் நித்திரையின்றி நடுங்கிக் கொண்டிருந்தோம்.

மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு தப்த குண்டத்திலிருந்து சுடுநீர் எடுத்துவந்து தந்தார்கள். அறையில் உள்ள குளியலறையில் தண்ணீரைக் கலந்து குளித்துவிட்டுக் கோயிலுக்குச் சென்றோம்.

காலைநடைபெறும்மஹாஅபிஷேகத்தைக்காணபெரிய வரிசைகாத்திருந்தது. அதில் நாங்களும் சேர்ந்துகொண்டோம். பலமொழிபேசுபவர்களும்அங்கேநின்றுகொண்டிருந்தார்கள். கோயில் கதவு திறக்கப்பட்டதும் நாங்கள் உள்ளே சென்று முன்வரிசையில் அமர்ந்துகொண்டோம். மஹா அபிஷே கத்தில் உபயகாரராக இருப்பவர்களுக்கு தர்ப்பை அணிவித்து பெயர், நட்சத்திரம் கூறி சங்கல்பம் செய்கிறார்கள். தொடர்ந்து புரோகிதர் வேதமந்திரம் ஓத பத்ரிநாதருக்கு மஹா அபிஷே கமும் அர்ச்சனையும் நடைபெறுகின்றன. இந்த மஹா அபிஷே கத்தில் கலந்துகொண்ட எங்களுக்கு பெரும் ஆத்ம திருப்தியும் மனநிறைவும் ஏற்பட்டன. பிறவிப் பயனை அடைந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அபிஷேகம், பூசை. தீபா ராதனை முடிந்ததும் பத்ரிநாதரை வணங்கி அர்ச்சகர் தந்த பிரசாதத்தையும் பெற்றுக்கொண்டு வெளியே வந்தோம்.

அப்போது ஓர் அரிய காட்சி தென்பட்டது. பத்ரிநாதர் ஆலயத்தின் பின்னால் உள்ள நாராயண மலைக்குப் பின்புறத்தில் ஒரு மலைச்சிகரம் தெரிந்தது. அது வெள்ளியை உருக்கி வார்த்தது போலத் தென்பட்டது. சூரிய ஒளியில் பளிச்சென்று கண் கூசியது. அதனைச் சிவபிரான் உறையும் ‘நீலகண்ட பர்வதம்’ என்று கூறினார்கள். அதன் உயரம் 21600 அடி என்றும் அறிந்தோம். அந்த உயர்ந்த ஒளி வீசும் மலையைப் பார்த்தபோது சிவபெருமானை நேரில் தரிசித்தால் எப்படி இருக்குமோ அந்த மாதிரியான ஓர் உணர்வு ஏற்பட்டது.

09

# மனநிறைவைத் தந்த திருத்தல தரிசனம்

பத்ரிநாத் தரிசனத்தை முடித்தபின் ஆலயத்தின் முன்றலில் நாங்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த வேளையில் ஒருவர் எம்மிடம் வந்து "நீங்கள் ஸ்ரீ லங்காவிலிருந்து வந்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறது" என்றார்.

"ஆமாம், நாங்கள் ஸ்ரீலங்காவிலிருந்துதான் வந்திருக்கிறோம்."

"அங்கு அரசியல் நிலைமை எப்படி இருக்கிறது? போரின் கொடுமை பெரிதாக இருக்கிறதே...!" என்றார்.

"நாங்கள் கொழும்பில் இருக்கிறோம். அதனால் நேரடியான போரின் தாக்கம் எமக்கில்லை. போர் இப்போது ஸ்ரீலங்காவின் வடபகுதியில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது."

"ஆனாலும் நீங்கள் தமிழர்கள்தானே... உங்களுக்கு எப்படியும் பாதிப்புகள் இருக்கத்தான் செய்யும்"

இதற்கு நாங்கள் பதில் ஏதும் கூறவில்லை. இந்தப் பயணத்தில் இந்தியர்களோடு அரசியல் பேசுவதை நாங்கள் கூடியவரை தவிர்த்து வந்திருக்கிறோம். ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதில் அவர்களுக்கு இலங்கையர் மீது கோபம் அதிகம் இருக்கும் என்ற எண்ணம் எமக்கிருந்தது. அவரே தொடர்ந்தார்.

"ஸ்ரீலங்கா அரசியலில் இந்தியா புகுந்து குழப்பிக் கொண்டிருக்கிறது. ராஜீவ் காந்தி தேவையற்ற முறையில் ஸ்ரீலங்கா அரசியலில் மூக்கை நுழைத்ததால் தான் கொலை

செய்யப்பட்டார்"

இப்படி அவர் கூறியது எமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்து ராஜீவ்காந்தி கொலையை சராசரி இந்தியர்கள் பார்ப்பதைவிட அவர் வேறுவிதமாகப் பார்க்கிறார். அவர் பேசிய ஆங்கிலமும் இந்தியர்கள் பேசும் ஆங்கில உச்சரிப்பை விட வித்தியாசமாக இருந்தது.

"நீங்கள் இந்தியாவில் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?" எனக் கேட்டேன். அவர் தன்னை ஒரு வங்காளி எனக் கூறினார்.

அப்போது எமது வாகனச் சாரதி தோமஸ் அங்கு வந்து எம்மைத் துரிதப்படுத்தினார். "இங்கிருந்து சிறிது தூரத்தில் சீன தேசத்தின் எல்லை இருக்கிறது. அங்கும் சென்று பார் வையிடலாம்" என்றார்.

"நாங்கள் சீனாவின் எல்லைக்கே வந்துவிட்டோமா!" ஆச்சரியத்தால் எனது குரல் உயர்ந்தது. அப்போது எங்களிடம் பேசிக்கொண்டிருந்த அன்பர், "ஆமாம், இங்கிருந்த மூன்று கிலோமீற்றர் தொலைவில் சீன எல்லை இருக்கிறது. அந்த எல்லையில் 'மானா கிராமம்' என்ற ஓர் இடமும் இருக்கிறது. அவற்றையும் நீங்கள் பார்வையிடலாம்" என்றார்.

"ராஜீவ் காந்தி கொலையை நீங்கள் சாதாரண இந்தியர்கள் போலல்லாது அறிவுபூர்வமாக சரியான கோணத்தில் பார்க்கிறீர்கள்" எனக்கூறி அவரோடு கைகுலுக்கி விடைபெற்றோம்.

**மானா கிராமம்**

பத்ரிநாத் ஆலயத்திலிருந்து புறப்பட்டு பதினைந்து நிமிடத்தில் சீன எல்லையை அடைந்தோம். அதுவே இந்தியாவின் எல்லையுமாகும். அதைத் தாண்டிச் செல்ல யாருக்கும் அனுமதியில்லை. இந்திய இராணுவத்தினரின் கூடா ரங்கள் பல அங்கே காணப்பட்டன. அதனையே 'மானா கிராமம்' என்கிறார்கள். அங்குள்ள ஒற்றையடிப்பாதையில் சிறிது தூரம் நடந்துசென்ற போது சிறிய சரஸ்வதி கோயிலும் அதனருகே ஒரு குகையும் தென்பட்டன. குகை வாயிலில் நின்று பார்த்தபோது

ஒரே இருட்டாக இருந்தது. முனிவர்கள் சிலர் அந்தக் குகைக்குள் இருந்து தவம் செய்து கொண்டிருப்பதாகத் தோமஸ் கூறினார். இந்தக் குகையை 'கணேசர் குகை' எனப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நடந்த காலகட்டத்தில் பெருந்தொகையான இராணுவத்தினர் இங்கு இருந்தார்களாம். இப்போது இங்குள்ள இராணுவக் கூடாரங்கள் பல வெறுமையாகக் காணப்படுகின்றன. ஒரு சில இராணுவத்தினரே சில கூடாரங்களில் தென்பட்டனர். அங்கு வேறு எதனையும் பார்க்கக் கூடியதாக இருக்கவில்லை.

பத்ரிநாத் தரிசனத்துடன் எமது இமயமலை யாத்திரையை முடித்துக்கொள்ளத் தீர்மானித்தோம். இமயமலையில் உள்ள கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய நான்கு புண்ணியத் தலங்களுக்கு மேற்கொள்ளப்படும் யாத்திரை 'சாரோ தாம் யாத்திரை' என ஹிந்தியில் அழைக்கப்படுகிறது. இதனை 'உத்தராக் கண்ட யாத்திரை' எனவும் கூறுவர். இந்த யாத்திரையில் நாங்கள் கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய இடங்களுக்குச் செல்லவில்லை. அதற்கு எமது பயணத்திட்டம் இடந்தரவில்லை.

கங்கோத்ரி என்பது கங்கை நதி உற்பத்தியாகும் இடம். இங்கு கங்காமாதா கோயில் இருக்கிறது. கங்கையைப் பூவுலகத்திற்குக் கொண்டு வருவதற்கு பகீரதன் தவம் செய்ததாகச் சொல்லப்படும் 'பகீரதசிலா' எனப்படும் கற்பலகை கங்காமாதா கோவில் அருகில் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

'யமுனோத்ரி' என்பது யமுனை நதி உற்பத்தியாகும் இடம். இங்கு யமுனாமாதா கோயில் அமைந்திருக்கிறது. அசீத முனிவர் என்பவர் தினமும் யமுனையிலும் கங்கையிலும் குளித்தவர். முதுமையடைந்ததன் காரணமாக அவரால் கங்கோத்ரிக்குச் செல்லமுடியவில்லை. எனவே கங்கை நதியே அவருக்காக யமுனோத்ரிக்கு வந்தது என்பது ஒரு நம்பிக்கை. அநுமான் இலங்கையை எரித்தபின் தனது வாலை இங்கேதான் அணைத்தார் என்றும் கூறுகிறார்கள்.

நதிகள் உற்பத்தியாகும் இந்த இரு இடங்களை நாங்கள்

தரிசிக்காதபோதும் கடவுளரின் உறைவிடமான கேதார்நாத், பத்ரிநாத் திருத்தலங்களைத் தரிசித்தமை எமக்குப் பெரும் மனநிறைவை அளித்தது.

வடஇந்தியப் பயணத்தில் இரண்டு பிரதான அம்சங்கள் உள்ளன. ஒன்று திருத்தலங்களைத் தரிசிக்கும் புனித யாத்திரை. மற்றது உல்லாசப் பயணம். சிலர் திருத்தலப் புனி தப் பயணங்களை மட்டுமே மேற்கொள்வர். வெளிநாடுக ளில் இருந்து வருபவர்களில் பெரும்பாலானோர் உல்லாசப் பயணத்தை மேற்கொள்வர். நாங்கள் எமது பயணத்திட்டத்தில் புனிதப் பயணத்துடன் உல்லாசப் பயணத்தையும் இணைத்துக் கொண்டோம்.

டெல்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களை ஒன்றிணைத்த உல்லாசப் பயணத்தை 'தங்க முக்கோண' உல்லாசப் பயணம் என்பர். (Golden Triangle)

இந்தத் தங்க முக்கோண உல்லாசப் பயணம் உலகப் புகழ்பெற்றது. உலக அளவில் முக்கியத்துவம் பெற்ற சில இடங்கள் இந்தத் தங்க முக்கோணத்துக்குள் அடங்குகின்றன.

**குதுப் மினார்**

இமயமலைப் பயணத்தை முடித்துக்கொண்டு நாங்கள் நேராக டெல்கியை வந்தடைந்தோம். டெல்கி இந்தியாவின் தலைநகராக விளங்குகிறது. இதற்கு 3000 வருட வரலாறு உண்டு. மகாபாரதத்தில் வரும் இந்திரப் பிரஸ்தம்தான் இப்போதுள்ள டெல்கி எனக் கூறுகிறார்கள். இங்குள்ள யமுனா நதித் தீரத்திலேதான் பாண்டவர்களின் அரண்மனை இருந்ததாம். யுதிஷ்டிரர் கட்டிய கோயில் ஒன்று இப்போதும் யமுனை நதிக்கரையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

டெல்கியில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் கோபுரம் 'குதுப் மினார்'. உலகில் உள்ள செங்கற் கோபுரங்களில் இதுவே மிக உயரமானது. இதன் உயரம் 237.8 அடியாகும். இந்தியாவின் முதலாவது முஸ்லிம் மன்னனான குத்புத்தீன் என்பவனால் இதன் கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டு

அவனது வழித்தோன்றல்களால் கட்டி முடிக்கப்பட்டது. 1193 இல் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டிடம் 1386 இல் கட்டி முடிக்கப்பட்டதாம். இதுவே இந்தியாவில் இன்றுள்ள பழமை வாய்ந்த இந்து இஸ்லாம் கட்டிடக் கலையின் உன்னதங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

உருளை வடிவமான இந்தக் கோபுரத்தின் அடிப்பாகம் 14.3 மீற்றர் விட்டமும் மேற்பகுதி 2.75 மீற்றர் விட்டமும் உடையது. தூரத்திலிருந்து பார்க்கும்போதே இதன் கம்பீரம் பிரமிக்க வைக்கிறது.

இந்தக் கோபுரம் அமைந்திருக்கும் இடத்தில் அருகில் சிதைவடைந்த சில கட்டிடங்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன. கோபுரத்தையும் அதனை அண்டியுள்ள பகுதியையும் இணைத்து குதுப் மினார் வளாகம் என்று கூறலாம். இந்தக் குதுப் மினார் வளாகத்தை யுனெஸ்கோ நிறுவனம் உலகின் நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம் நிறைந்த பகுதி World Heritage Site எனப் பட்டியலிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் என்ற நாட்டிலுள்ள ஒரு கோபுரத்தைப் பார்த்த குத்புத்தீன் மன்னன் அதனையும் விடத் திறமான கோபுரத்தைத் தான் கட்ட வேண்டும் என்று எண்ணியே இந்தக் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினான். ஆனால் அவனது காலத்தில் ஐந்து மாடிகள் கொண்ட இந்தக் கோபுரத்தின் முதலாவது மாடியை மட்டுமே அவனால் கட்ட முடிந்தது. அவனுக்குப் பின் அரியணை ஏறிய அவனது மருமகன் - மகளின் கணவன் சம்சுத்தீன் என்பவன் அடுத்த மூன்று மாடிகளைக் கட்டினான்.

இந்தக் கோபுரத்தோடு இணைந்த ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் உள்ளது. இந்தப் பள்ளிவாசல் ‘குவ்வாத், துல் இஸ்லாம் மசூதி’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதுவே இந்தியாவின் முதலாவது பள்ளிவாசலாகும். இது 1198 இல் கட்டப்பட்டது. அக்காலத்தில் இந்தப் பள்ளிவாசலோடு இணைந்த குதுப் மினார் கோபுரம் தொழுகை நடத்துவதற்கு மக்களை அழைப்பதற்கான கோபுரமாக விளங்கியது. இந்தக்

கோபுரத்தின் உச்சியில் இருந்துதான் 'பாங்கு' ஓதுவார்களாம்.

இந்தியாவில் ஆண்டாண்டு காலம் நிலவிவந்த இந்து அரசர்களின் அரசாட்சியை வீழ்த்தி முஸ்லிம் ராஜ்ஜியத்தை ஏற்படுத்தியதன் வெற்றிச் சின்னமாக இந்தக் குதுப் மினார் கட்டப்பட்டதாக சில நூல்களில் குறிப்புக்கள் உள்ளன. இஸ் லாத்தின் பெருமையைப் பறைசாற்றுவதற்காக இக்கோபுரம் கட்டப்பட்டதாகவும் கருத்து நிலவுகிறது.

இந்தக் குதுப் மினார் வளாகத்தின் கிழக்கு வாசலில் ஒரு கல்வெட்டு ஆங்கில மொழியில் உள்ளது. அதில் 27 இந்துக் கோயில்களை இடித்து அந்த இடிபாடுகளைக் கொண்டே இங்குள்ள முஸ்லிம் பள்ளிவாசலும் குதுப் மினார் கோபு ரமும் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நிறுவனத்தினர், இந்தக் குதுப் மினார் வளாகத்தில் உள்ள கட்டிடங்கள் யாவும் ஜைன, இந்து மதக் கோயில்களின் இடிபாடுகள் கொண்டு கட்டப்பட்டுள்ளதென ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

இந்தக் குதும்மினார் கோபுரத்தின் ஒவ்வொரு மாடியைச் சுற்றியும் 'பலகணிகள்' உள்ளன. இந்தப் பல்கணிகளை கற்களால் செதுக்கப்பட்ட முண்டுகோல்கள் தாங்கிப் பிடிக்கின்றன.

இந்த முண்டுகோல்களுக்கு இடையே தேன்கூடுகள் போன்ற அமைப்பில் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. கோபுரத்தின் வடக்குப்புற வாசலில் அடியிலிருந்து உச்சிவரை 379 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் படிக ளில் ஏறி ஒவ்வொரு மாடிகளுக்கும் செல்ல முடியும். இந்தக் கோபுரத்தின் பல இடங்களில் அரபு, நாகர எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை இந்தக் கோபுரம் தொடர்பான வரலாற்றைக் கூறுவனவாக அமைந்துள்ளன. சில குறான் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோபுரம் 1368 இல் ஒரு தடவை மின்னலால் தாக்கப்பட்டதாம். அப்போது நான்கு மாடிகள் மட்டுமே கட்டப்பட்டிருந்த இந்தக் கோபுரத்தின் மேல்மாடி உடைந்து விழுந்துவிட்டதாம். 1370 இல் மூன்றாம் தலைமுறை முஸ்லிம்


மன்னனாக இருந்த பெருஸ் ஷாதுக்ளக் என்பவன் மேலே இரண்டு மாடிகளைக் கட்டியதாக அறியமுடிகிறது. 1803 இல் நிலநடுக்கம் காரணமாக மீண்டும் மேல்பகுதி உடைந்துவிட்டது. 1829 இல் மேஜர் ஆர் ஸிமித் என்ற வெள்ளைக்காரப் பொறியியலாளர் அதனைத் திருத்தி அமைத்தார் என அறிய முடிகிறது.

குதுப்மினார் வளாகத்தில் உள்ள பள்ளிவாசல் இந்துக்கோவில் ஒன்றை இடித்துவிட்டு அதன் அத்தி வாரத்திலேயே கட்டப்பட்டது. இந்தப் பள்ளிவாசலும் குதுப்மினார் கோபுரமும் இந்துக் கோயில்களின் இடிபாடுகளைக் கொண்டு கட்டப்பட்டதால் இந்து இஸ்லாமியக் கட்டிடக்கலையின் ஒரு கலவையை இங்கு காணமுடிகிறது.

இந்தக் குதுப் மினார் வளாகத்தில் வியப்பூட்டும் ஓர் இரும்புத்தூண் உள்ளது. 7 மீற்றர் உயரமான இந்தத் தூணில் சமஸ்கிருத பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த இரும்புத்தூண் 1600 வருடங்களாக மழையில் நனைந்து வெயிலில் காய்ந்த போதும் துருப்பிடிக்காமல் இருப்பதை உல்லாசப் பயணிகள் வியப்புடன் பார்க்கின்றனர். இந்தத் தூண் பீகார் மாநிலத்தில் உள்ள விஷ்ணுபாத மலையில் உள்ள விஷ்ணுகோயிலில் இருந்து கொண்டு வரப்பட்டு நடப்பட்டிருக்கலாம் எனவும் விஷ்ணுக் கடவுளின் சின்னமாக இது விளங்குகிறது எனவும் அறிய முடிகிறது. இந்தத் தூணின் உச்சியில் ஓர் ஆழமான குழி தென்படுகிறது. இந்தக் குழியில் விஷ்ணுவின் வாகனமான கருடனின் சின்னம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என எண்ண இடமுண்டு என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்த இரும்புத்தூணின் அடி விட்டம் 6 அடி 4 அங்குலம். நுனியின் விட்டம் 2 அடி 4 அங்குலம். எட்டு கடினமான இரும்புச் சட்டங்களால் இந்தத் தூண் நிலத்திலே பொருத்தப்பட்டுள்ளது. இந்தத் தூண் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதை இருக்கிறது. தூணில் எவராவது தமது முதுகுப்புறத்தைப் பொருத்தி பின்புறமாகத் தமது கைகளால் இந்தத் தூணைக் கட்டிப்பிடித்து வேண்டுதல் செய்தால்

அவரது வேண்டுதல் நிறைவேறுமாம்.

விஞ்ஞானிகள் பலர் இந்தத் தூண் எவ்வாறு ஆண்டாண்டு காலமாகத் துருப்பிடிக்காமல் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க பல்வேறு பரிசோதனைகள் மேற்கொண்ட போதும் அதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லையாம். மெய்ஞ்ஞானம் சம்பந்தப் பட்ட விடயங்களை விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்க முடியா தல்லவா!



# 10

# ஷாஜகான் கட்டிய செங்கோட்டை

**இந்தியா கேட்**

டெல்கி நகரின் மத்தியில் ‘இந்தியா கேட்’ எனப்படும் ஒரு நினைவுத் தூபி காணப்படுகிறது. வெள்ளைக்காரர்களின் ஆட்சியில், முதலாவது உலக மகா யுத்தத்தின்போது போராடி உயிர் நீத்த 70,000 இந்திய இராணுவத்தினரை நினைவுகூரும் முகமாக இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டது. 42 மீற்றர் உயரமான இந்த நினைவுத் தூபியை சேர் எட்வின் லுற்றியன்ஸ் என்பவர் வடிவமைத்தார். இதே தோற்றமுள்ள போராளிகளுக்கான நினைவுத்தூபி ஒன்று பிரான்ஸ் நாட்டிலும் இருக்கிறதாம். இங்குள்ள தூபியை வடிவமைத்த சேர் எட்வின் லுற்றியன்ஸ் என்பவரே இன்றுள்ள டெல்கி நகரை யும் வடிவமைத்தார் எனக் கூறப்படுகிறது. இந்த நினைவுத் தூபிக்கு அடிக்கல் நாட்டியவர் டியூக் ஒஃப் கொன்னோற் என்பவர். 1921 பெப்ரவரி மாதத்தில் இந்த நினைவுத்தூபி கட்டி முடிக்கப்பட்டது.

நாங்கள் ஒரு மாலை வேளை இந்தத் தூபியை பார்க்கச் சென்றிருந்தோம். ஒரு குறுக்குத் தெருவின் மத்தியில் அமைந்திருக்கும் இந்த ‘இந்தியா கேட்’ ஒரு நினைவுத் தூபி எனக் கூறப்பட்டாலும் இதனைச் சூழவுள்ள பகுதி ஒரு களியாட்டத்திடல் போலக் காட்சி தந்தது. வர்ணஜால மின்விளக்குகள் திரும்பும் இடமெல்லாம் ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தன. கார்கள், மோட்டார் சைக்கிள்கள்,

ஸ்கூட்டர்கள் ஆங்காங்கே நிறைந்து காணப்பட்டன. சுற்றியுள்ள பச்சைப் பசேலென்ற புற்றரையில் ‘பிக்னிக்’ வந்தவர்கள் சிலர் கூடியிருந்து மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். ‘பொனி’ எனப்படும் மட்டக் குதிரைகளிலும் ஒட்டகங்களிலும் சிலர் சவாரி செய்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஒரு இடத்தில் குரங்காட்டம். வேறோர் இடத்தில் பாம்பாட்டம். சிறுவர்கள் சிலர் பந்து விளையாடி மகிழ்ந்தனர். பெரியவர்கள் சிலர் புற்றரையில் அமர்ந்து சீட்டாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். சிறுமி களில் சிலர் சவர்க்கார நுரையில் குமிழிகள் ஊதி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

கடலை, சுண்டல், ஐஸ்கிறீம், புறுட்சலட், சோடா, பழங்கள், உருளைக்கிழங்கு சிப்ஸ் என வகைவகையான தின்பண்டங்கள். இவற்றை வாங்குவோரும், விற்போரும் எங்கும் மகிழ்ச்சி நிறைந்த சனக்கூட்டம். பெருவாரியான வெளிநாட்டவர்களும் இங்கு காணப்பட்டனர்.

இந்த நினைவுத் தூபியின் முன்னால் ஒரு சிறிய விதானம் காணப்படுகிறது. இந்த விதானத்தின் உள்ளே ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் சிலை முன்னர் வைக்கப்பட்டிருந்ததாம். இப்போது அந்தச் சிலையை வேறோர் இடத்துக்கு மாற்றியிருக்கிறார்கள். இந்த விதானத்தில் சுதந்திர இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் சிலையை வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்தத் தூபியின் வளைவுப் பகுதியின் கீழே ஒரு சிறிய கோயில் போன்ற அமைப்பு உள்ளது. கறுப்பு மாபிள் கற்களால் அமைக்கப்பட்ட இந்தச் சிறிய கோயிலில் அமரஜோதி ஒன்று என்றும் அணையாது எரிந்துகொண்டிருக்கிறது. இதனை ‘அமர் ஜவான் ஜோதி’ என்று அழைக்கிறார்கள். அமரத்துவம் அடைந்த போர் வீரர்களின் ஜோதி என்று கருத்துப்பட இந்த ஜோதி இவ்வாறு அழைக்கப்படுகிறதாம். இந்தச் சிறிய கோயி லில் ஓர் உருளை வடிவான மேடை இருக்கிறது. அந்த மேடை யில் இராணுவத்தினர் அணியும் ‘ஹெல்மெட்’ உருவமும்

அதனருகே ஒரு சிறிய கைத்துப்பாக்கியும் காணப்படுகின்றன. இந்தச் சிறிய கோயிலும் ஜோதியும் இந்திய பாகிஸ்தான் போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவாகப் புதிதாக அமைக்கப்பட்டு இந்தியா கேட்டுடன் இணைக்கப்பட்டதாம். **1971** டிசம்பரிலிருந்து இங்குள்ள ஜோதி அணையாது எரிந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தூபியின் வளைவுப் பகுதியிலும் அடித்தளத்திலும் **13,516** அமரத்துவம் அடைந்த இந்திய இராணுவத்தினரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்திய சுதந்திர தினத்தன்றும் இந்திய நாட்டுடன் தொடர்புடைய ஏனைய முக்கிய நாட்களிலும் இந்திய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இங்கு வந்து வழிபாடு செய்தல் சம்பிரதாயமாகவுள்ளது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் செல்லும்போதும் இந்தத் தூபிக்கு மரியாதை செலுத்துவது வழக்கத்தில் உள்ளது. இந்தத் தூபியின் வளைவினூடாகத் தூரத்தே தெரியும் இந்திய ஜனாதிபதி மாளிகையான 'இராஷ்டிரபதி பவன்' கண்களுக்குப் பெருவிருந்தாக அமைகிறது.

பாண்டவர்கள் முன்னர் அரசு புரிந்த இந்திரப் பிரஸ்தத்தின் அமைவிடம் இதுவாகத்தான் இருந்தது எனச்சிலர் கூறுகிறார்கள். இங்கு ஒரு பெரிய நீரோடையும் இருக்கிறது. இந்த நீரோடையைத் தழுவி வரும் காற்று உடலுக்கு இதமாக இருக்கிறது.

### ஷாஜகான் கட்டிய செங்கோட்டை

உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலைக் கட்டியவன் ஷாஜகான். அவன் அழகை ஆராதிப்பவன். கலையுள்ளம் படைத்தவன். கேளிக்கைகளில் விருப்புடையவன். அவனது தாத்தா மொகலாயப் பேரரசர் அக்பர். அவர் ஆக்ராவில் கட்டிய அரண்மனையில் இருந்தவாறே இவனும் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். தாத்தா கட்டிய அரண்மனையில் அவன் மேலும் பல கட்டிடங்களைக் கட்டி இணைந்திருந்தான். ஆனாலும் அவனது மனம் திருப்திப்படவில்லை. "பெரிய அளவில் ஊர்வலம் செல்ல வசதியாக ஆக்ராவில் அகலமான வீதிகள்

இல்லையே" என்று அவனது மனம் ஏங்கியது. எனவே அவன் தனது தலைநகரை மாற்றுவதற்குத் தீர்மானித்தான். உடனே அந்த எண்ணத்தை செயற்படுத்த நினைத்து "டில்லியில் யமுனை நதித் தீரத்தில் ஒரு புதிய நகரை உருவாக்குங்கள்" எனத் தனது மந்திரி பிரதானிகளுக்கு ஆணை பிறப்பித்தான்.

அடர்ந்து பரந்து விரிந்த காட்டுப்பகுதியில் புதிய தலை நகர் உண்டாகியது. **1638** இல் கட்டிட வேலைகள் ஆரம்பமாகி **1648** இல் முடிவடைந்தன. முகலாய மன்னர்களுக்கு வேண்டிய சகல வசதிகளுடனும் இந்தக் கோட்டையை ஷாஜகான் கட்டி முடித்தான்.

மக்களின் வாழ்த்தொலிகள் முழங்க, வாண வேடிக்கை களுடன் **1648** ஏப்ரல் **19** ஆம் திகதி ஷாஜகான் யமுனா நதியில் பயணித்து செங்கோட்டையின் பின்பகுதியில் அமைந்திருந்த வெள்ளியால் ஆன கதவுகளைத் திறந்து கொண்டு இந்தச் செங்கோட்டைக்குள் நுழைந்தான்.

அவன் அமருவதற்கென ஒரு புதிய 'மயில் ஆசனம்' செய்யப்பட்டது. **3** யார் நீளமும் **2.5** யார் அகலமும் **5** யார் உயரமும் கொண்ட இந்த மயில் ஆசனம் பொன்னாலும் மணி யாலும் வைர வைடூரியங்களாலும் இழைக்கப்பட்டிருந்தது. வாத்தியங்கள் முழங்க வேலைப்பாடுகளுடன் கூடிய நிலப்பாவாடையில் நடந்து சென்று மன்னன் மயில் ஆசனத்தில் அமர்ந்தான்.

இந்தக் கோட்டையின் முன்பகுதி தர்பார் மண்டபமாக அமைந்துள்ளது. இங்கே தான் மன்னன் நாட்டுப் பிரஜைகளைச் சந்தித்து அவர்களது தேவைகளைக் கேட்டறிந்து கொள்வான். இந்த மண்டபத்தின் மேல்விதானத்தில் கலைத்திறன் மிக்க அற்புத ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இன்றளவும் நிறம் மங்காமல் இந்த ஓவியங்கள் மண்டபத்தை அழகு செய்து கொண்டிருக்கின்றன. கோட்டையின் உள்ளே அழகிய விதா னத்துடன் கூடிய மாளிகைகள் அமைந்துள்ளன. மூன்று குளிய லறைகள், தொழுகைக்கான மண்டபம், பூந்தோட்டங்கள் ஆகி யனவும் காணப்படுகின்றன. கோட்டையின் நடுப்பகுதியில்

இசைக் கலைஞர்களுக்கான ஒரு மண்டபம் இருக்கிறது. இவர்கள் இசைக்கச்சேரிகள் நடத்துவதை மன்னன் கேட்டு இரசிப்பானாம்.

இந்தக் கோட்டையை ஷாஜகான் தனது எதிர்கால அரசாட்சிக்காகப் பல திட்டங்களோடு கட்டி யெழுப்பியபோதும் அவனால் நீண்டகாலம் இந்தக் கோட் டையிலிருந்து அரசாட்சி செய்ய முடியவில்லை. அவனது மகன் அவுரங்க சீப் தந்தையை சிறையில் அடைத்துவிட்டுத் தான் ஆட்சிபீடம் ஏறினான். இவனே இக்கோட்டையிலிருந்து ஆட்சி செய்த கடைசி மொகலாய மன்னன் ஆவான்.

1659 இல் அவுரங்க சீப் இந்தக் கோட்டையின் உள்ளே தானும் தனது மனைவியரும் வழிபடுவதற்கென ஒரு வழிபாட்டுத் தலத்தைக் கட்டினான். ‘மோதி மசூதி’ எனப் பெயர் கொண்ட இந்த வழிபாட்டுத்தலம் பளிங்குக் கற்களால் ஆனது. மசூதியின் முக்கிய பகுதிகள் பவளங்களால் இழைக் கப்பட்டிருந்தனவாம். அவுரங்கசீப் இந்த மசூதியிலேயே ஐந்து நேரத் தொழுகைகளைச் செய்வான் என அறிய முடிகிறது.

ஷாஜகானின் மயில் ஆசனம் உலகப் புகழ் பெற்றது. இப்போது அந்த ஆசனம் இங்கு இல்லை. 1739 இல் நதீர் ஷா என்ற பேர்ஸிய மன்னன் இந்தக் கோட்டையைத் தாக்கியதோடு இந்த மயில் ஆசனத்தை ஈரான் நாட்டுக்குக் கடத்திச் சென்றிருக்கிறான். அவன் கடத்திச் சென்றபோது இந்த ஆசனம் சிதைவடைந்து விட்டதாகக் கூறுகிறார்கள்.

1857 இல் பிரித்தானியர்களால் மீண்டும் இக்கோட்டை தாக்கப்பட்டது. இருந்தபோதிலும் இப்போதும் இந்தச் செங்கோட்டை மொகலாய மன்னர்களின் சிறப்பினைப் பறைசாற்றிய வண்ணம் இருக்கிறது.

இக்கோட்டையின் நுழைவாயில் ‘லாகூர் கேற்’ என அழைக்கப்படுகிறது. லாகூர் நகரத்தை நோக்கியபடி இந்த வாசல் அமைந்திருப்பதால் இந்தப் பெயர் அந்த வாசலுக்கு ஏற்பட்டதாம். ஆனால் இப்போது லாகூர் நகரம் பாகிஸ்தானுக்குச் சொந்தமாகிவிட்டது. இந்த வாசலிலேதான்

இந்திய சுதந்திரப் போராட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் முன்னர் நடைபெற்றன என அறிய முடிகிறது.

டெல்கியிலுள்ள நினைவாலயங்களில் இதுவே மிகப் பெரியதாகும். செங்கற்களினால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை இயற்கை அழிவுகளையும் தாண்டி இன்றும் கம்பீரத்துடன் காட்சி தருகிறது. இந்தக் கோட்டையைச் சுற்றி இரண்டு கிலோமீற்றர் நீளமான சுற்றுமதில் இருக்கிறது. இந்தச் சுற்றுமதில் யமுனா நதிப் பக்கத்தில் 18 மீற்றர் உயரமும் நகர்ப்பக்கத்தில் 33 மீற்றர் உயரமும் கொண்டது.

லாகூர் வாசல் பக்கம் உள்ள வீதியில் நகை வியாபாரிகள், கம்பள வியாபாரிகள், புடவை வியாபாரிகள், பெண்களுக்கான அழகுசாதன வியாபாரிகள் கடை வைத்திருக்கிறார்கள். இந்தவியாபாரிகளில் அனேகமானோர் பெண்கள். இந்த வீதியை 'மீனா பஜார்' என அழைக்கிறார்கள். இந்தியாவின் புகழ்பெற்ற இக்கடைத் தெருவில் வெளிநாட்டவர்கள் எந்த நேரமும் நிறைந்து காணப்படுகிறார்கள்.

இந்தச் செங்கோட்டையின் ஒரு பகுதியில் தினமும் மாலை வேளைகளில் ஒரு படக்காட்சி இடம்பெறுகிறது. இந்தியாவின் 5000 வருட சரித்திரத்தை புராண காலத்திலிருந்து இற்றை வரை இப்படக் காட்சியில் காணமுடிகிறது என்று கூறுகிறார்கள்.

1857 இல் இந்தக் கோட்டை பிரித்தானியாவில் கைப்பற்றப்பட்டு இராணுவத் தலைமையகம் ஆக்கப்பட்டது. 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபின் இந்திய இராணுவத்தின் பொறுப்பில் இக்கோட்டை வந்தது. அதன் பின்னர் 2003 இல் இந்திய சுற்றுலாத்துறைக்குக் கையளிக்கப் பட்டது.

தற்போது இக்கோட்டையில் இந்தியா சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15 அன்று இந்தியக் கொடி ஏற்றப்பட்டு இந்தியப் பிரதமரால் நாட்டுமக்களுக்கு உரை நிகழ்த்தப்படுகின்றது.

**லக்ஷ்மி நாராயண் கோயில் (பிர்லா மந்திர்)**

பிர்லா என்ற இந்தியாவின் மிகப்பெரிய தொழிலதிபர் இந்தியாவின் நகரங்கள் பலவற்றில் இந்துக் கோயில்களை அமைத்துள்ளார். அவர் முதன்முதலில் அமைத்தது டெல்கியிலுள்ள விஷ்ணு கோயிலாகும். இந்தக் கோயில் டெல்கியின் மத்தியில் அமைந்துள்ளது. இது 1938 இல் கட்டப்பட்டது. இந்திய தேசத்தின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் விருப்பத்துக்கு ஏற்ப எல்லாச் சாதி, மத இனத்தவரும் வழிபடுவதற்கென இக்கோயில் திறந்து வைக்கப்பட்டது. முக்கியமாக ஹரிஜனங்கள் எனப்படும் தீண்டத் தகாதவர்களும் இக்கோயிலின் உள்ளே சென்று வழிபடக்கூடியதாக இக்கோயில் அமைய வேண்டும் என மகாத்மா காந்தி விரும்பினார்.

இந்தக் கோயில் ஒரிஸா கட்டிடக்கலை அமைப்பில் உருவானது. உயரமான வளைவான கோபுரங்களைக் கொண் டது. முக்கிய கோபுரம் 160 அடி உயரம் உடையது. ஏனைய கோபுரங்கள் 116 அடி உயரமானவை. வெள்ளை மாபிள் கற்கள், செங்கற்கள் கொண்டு கோயிலின் வெளிப்புறம் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி உட்புறத்தின் மூன்று பக்கங்களிலும் இரண்டு மாடிகள் கொண்ட விறாந்தைகள் அமைந்துள்ளன. பின்புறத்தில் புற்றரைகள் காணப்படுகின்றன.


கோவிலின் மூல விக்கிரகம் விஷ்ணு. இங்கு லக்ஷ்மிக்கும் சிறிய கோவில் அமைந்துள்ளது. பரிவாரத் தெய்வங்களாக துர்க்கை, சிவன் ஆகிய தெய்வங்கள் உள்ளன. இங்கே ஒரு புத்தர் கோயிலும் உள்ளது.

விஷ்ணு அவதாரம் எடுத்த நாளை 'ஜன்மாஷ்டமி' என இங்கு பெரிய அளவில் கொண்டாடுகிறார்கள். இது ஏப்ரல் மாதத்தில் வருகிறது. தினமும் மாலை வேளைகளில் விஷ்ணுவுக்கும் லக்ஷ்மிக்கும் எடுக்கப்படும் 'ஆராத்தி' யைப் பார்ப்பதற்கென பக்தர்களின் கூட்டம் அலை மோதுகிறது. இங்கு ராமநவமி, தீபாவளி ஆகிய தினங்களிலும் பெரிய அள வில் உற்சவங்கள் இடம்பெறுகின்றன.

‘கீதாபவனம்’ என ஒரு மண்டபம் இங்கு இருக்கிறது. இந்து மத ஓவியங்கள் இந்தக் கீதாபவனச் சுவர்களில் வரையப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் இந்த ஓவியங்களை ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூர் ஓவியர்கள் வரைந்தார்களாம்.

இந்தக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியவர் மகாத்மா காந்தி. கோயிலைக் கட்டி முடிக்க ஆறு வருடங்கள் எடுத்ததாம். மகாத்மா காந்தி இந்தக் கோயிலுக்கு அடிக்கடி வந்து பிரார்த்தனையில் ஈடுபடுவாராம்.

பலர் இந்தக் கோயிலின் பிரமாண்டத்தையும் கட்டிடக்கலையின் அழகையும் இரசிப்பதற்கென்றே வருகிறார்கள். டெல்கிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் இந்த லக்ஷ்மி நாராயன் கோயிலுக்கு வருகிறார்கள். இக்கோயில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஓர் இடமாகவும் மாறியிருக்கிறது.



# 11

# வாஸ்து முறைப்படி நிர்மாணிக்கப்பட்ட ஒரு நகரம்

இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் வீடு ஒன்றைக் கட்டுவதற்கு முன் அந்த வீட்டின் வாசல் எந்தப் பக்கம் இருக்க வேண்டும், சுவாமி அறை எங்கு இருக்க வேண்டும், சமையல் அறை எங்கு அமைய வேண்டும் என்றெல்லாம் சாத்திரமுறைப்படி தீர்மானிப்பார்கள். இதனை 'வாஸ்து சாஸ்திரம்' என்பார்கள். இப்போதெல்லாம் கொழும்பு போன்ற நகரங்களில் வாஸ்து சாஸ்திரத்தின்படி வீடுகள் அமைவதில்லை. அவ்வாறு அமைக்கக்கூடிய இடவசதிகள் பொதுவாக நகரப் பகுதிகளில் இருப்பதில்லை. ஆனால், ஒரு மன்னன் தனது பிரஜைகள் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் முந்நூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு பெரிய நகரையே வாஸ்து சாஸ்திரத்தின்படி நிர்மாணித்தான் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! இந்த நகரில் தனது அரண்மனை எங்கு அமைய வேண்டும், எங்கு குடியிருப்புகள் இருக்க வேண்டும், எங்கெல்லாம் நகரின் வாசல்கள் அமைய வேண்டும் என்றெல்லாம் அவன் துல்லியமாகக் கணித்தான். இந்த மன்னனின் பெயர் இரண்டாவது ஜெய்சிங் மகராஜா, இவன், தான் அமைத்த நகருக்கு 'ஜெய்பூர்' எனத் தனது பெயரையே சூட்டினான்.

**1699** முதல் **1744** வரை ஆட்சியில் இருந்த இந்த மன்னனுக்கு இளவயதிலேயே ஆட்சிப் பொறுப்புக் கிட்டியது. இவன் சிம்மாசனம் ஏறியபோது 'அம்பர்' என்ற இடமே

தலைநகராக இருந்தது. மக்கள் தொகை பெருகு வதையும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதையும் கவனித்த மன்னன் 11 கிலோமீற்றர் தள்ளி வேறொரு தலைநகரை அமைக்கத் தீர்மானித்தான். அவ்வாறு நகரை அமைக்குமுன் கட்டிடக்கலை தொடர்பான நூல்கள் பலவற்றை வாசித்தான். கட்டிடக்கலைஞர்களைக் கலந்தாலோசித்தான். வங்காளத்தில் இருந்த பிரபல வாஸ்து சாஸ்திர நிபுணரான வித்தியாதர் பட்டாச்சார்யா என்ற பிராமணரை அழைத்து நகரின் வரைபடத்தைக் காட்டி வேண்டிய மாற்றங்களைச் செய்தான். இவர் அக்காலத்தில் வானசாஸ்திர நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர். தான் அமைக்கப்போகின்ற நகரின் பாதுகாப்பு, கட்டிடக் கலையின் அழகு, பண்பாட்டுஅம்சங்கள், விஞ்ஞான ரீதியான நோக்கு, இந்திய சிற்பசாஸ்திர நுணுக்கங்கள் போன்றவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த நகரை அமைத்தான். இந்தக் கட்டிட வேலைக்கான அடிக்கல் நாட்டு விழா 25.11.1727 இல் இடம்பெற்று எட்டு வருடங்கள் நிர்மாண வேலைகள் நடைபெற்றன.

இந்த நகரம் ஒன்பது தொகுதிகளைக் கொண்டது. இந்த ஒன்பது தொகுதிகளும் ஒன்பது கிரக நிலைகளைக் குறிக்கின்றன எனக் கூறுகிறார்கள். இவற்றுள் இரண்டு தொகு திகளில் ‘சிற்றி பலஸ்’ என அழைக்கப்படும் அரண்மனை, ஜனனமகால் எனப்படும் மகாராணிகளின் அந்தப்புரம், ‘ஜந்தார் மந்தர்’ எனப்படும் வானிலை அவதானிப்பு மையம் என்பன அமைந்துள்ளன. மிகுதி ஏழு தொகுதிகளும் மக்கள் வாழ்விடங்களாகவுள்ளன. நகரின் பாதுகாப்புக் கருதி நகரைச் சுற்றி பெரும் மதில் கட்டப்பட்டுள்ளது. இந்தச் சுற்று மதிலின் ஏழு இடங்களில் பலம் பொருந்திய பெரிய வாயில்கள் அமைந்துள்ளன. கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள வாயில் ‘சூரிய வாசல்’ எனவும் மேற்குப் புறவாயில் ‘சந்திர வாசல்’ எனவும் அழைக்கப்படுகிறது. வடக்குப் புறத்தில் உள்ள வாயில் முன்னைய தலைநகரான ‘அம்பர்’ நகர்ப்பக்கமாக உள்ளது. ஏனைய வாயில்கள் தெற்குப் புறமாக அமைந்துள்ளன.

இந்த வாயில்கள் சூரிய உதயத்தில் திறக்கப்பட்டு சூரிய அஸ்தமனத்தில் மூடப்படுகின்றன.

நகரின் உள்ளே உள்ள தெருக்கள் யாவும் மேற்குக் கிழக்காகவும் சந்தைப் பகுதிகள் வடக்குத் தெற்காகவும் அமைந்துள்ளன. தெருக்கள் 111 அடி அகலமான பெருந் தெருக்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வட இந்தியாவில் அக்காலகட்டத்தில் அமைந்த நகரங்களில், தாறுமாறாக ஒழுங்கற்ற முறையில் நெளிந்து வளைந்து செல்லும் தெருக்களையும் ஒழுங்கைகளையும் திட்டமிடப்படாத வகையில் மயக்கங்களை ஏற்படுத்தும் கோட்டை கொத்தளங்களையும், கோவில்களையும், அரண் மனைகளையும் பார்க்க நேரிட்ட எங்களுக்கு இந்த ஜெய்பூர் நகரைப் பார்க்கும்போது கேத்திர கணிதக் கோடுகளைப் போன்று அச்சொட்டாக அமைந்திருக்கும் இந்த நகரின் தெருக்களும் கட்டிட அமைப்புகளும் பெரும் வியப்பை ஏற்படுத்தின. இந்த நகரை உருவாக்கிய இரண்டாவது ஜெய்சிங் மன்னனைப் பற்றிக் கூறுவதற்கு மேலும் சில தகவல்கள் உள்ளன. இவனது கொள்ளுத் தாத்தா ராஜாமான் சிங் மொகலாய்ச் சக்கரவர்த்தி அக்பரது இராஜபுத்தானப் பகுதி யின் படைத்தளபதியாக விளங்கியவர். அக்பரது ஆட்சியில் குறுநில மன்னனாக இருந்து திறை செலுத்தி வந்ததோடு அக்பருக்கு மிக நெருக்கமானவராகவும் அன்புக்குரியவராகவும் விளங்கியவர். 'அம்பர்' நகரில் 1592 இல் ஒரு கோட்டையை அமைத்து அங்கிருந்து 1619 வரை ஆட்சி புரிந்தவர். இவர் ஓவியம், சிற்பக்கலை, இலக்கியம் ஆகியவற்றில் பெரு விருப்புடையவராகவும் விளங்கியவர்.

அக்பர் சக்கரவர்த்தியின் வழிவந்த அவரது கொள்ளுப் பேரன் அவுரங்கசீப் மன்னனுக்கு திறைசெலுத்தி அரசாளும் மன்னனாகவே இரண்டாவது ஜெய்சிங் இருந்தான். இவன் சூரியவம்சத்தில் உதித்த சத்திரியன். இந்து மதத்தைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும் மொகலாய சாம்ராஜ்ஜி யத்தின் நல்லுறவைப் பேணியவன். சிறுவயதிலேயே

இவன் அதிக புத்தி கூர்மையுள்ளவனாகத் திகழ்ந்தான். இவனது தாயார் மகாராஷ்டிரம், குஜராத், வங்காளம் ஆகிய இடங்களிலிருந்து சிறந்த ஆசிரியர்களை வரவழைத்து இவனுக்கு கல்வியறிவூட்டினார். இவன் சிறந்த கணிதவியலாளனாகவும் வானசாஸ்திர விற்பன்னாகவும் கட்டிடக் கலைஞனாகவும் பெரும் போர்வீரனாகவும் திகழ்ந்தான். இந்த இரண்டாவது ஜெய்சிங் மன்னின் திறமைகளை மெச்சி அவுரங்கசீப் இவனுக்கு 'சவாய்' என்னும் உயரிய பட்டத்தை 1696 இல் வழங்கிக் கௌரவித்தான். 1707 இல் மகராஜா அந்தஸ்தை வழங்கினான்.

இவன் கட்டிய ஜெய்பூர் நகரம் மட்டுமே உலகின் வாஸ்து சாஸ்திர முறைப்படி திட்டமிட்டு கட்டப்பட்ட ஒரேயொரு நகரமாகத் திகழ்கிறது.

1876 இல் வேல்ஸ் இளவரசர் இந்நருக்கு வருகை தந்தார். இதன் பொருட்டு இந்த நகரம் முழுவதும் 'பிங்க்' நிறத்தில் வர்ணம் பூசப்பட்டது. இந்த நிறம் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. உல்லாசப் பயணிகள் இந்த நகரை 'பிங்சிற்றி' என அழைக்கின்றனர்.

**'சிற்றி பலஸ்' (சந்திரமகால்)**

இரண்டாவது ஜெய்சிங் அமைத்த ஜெய்பூர் நகரின் மத்தியில் இந்த 'சிற்றி பலஸ்' என்னும் அரண்மனை இருக்கிறது. இந்த அரண்மனைக்கு மன்னன், சந்திரமகால் எனப் பெயரிட்டிருந்தான். இங்கிருந்தே மன்னன் இராச்சிய பரிபாலனம் செய்தான். நகரின் பதினைந்து வீதமான நிலப்பரப்பில் இந்த அரண்மனை அமைந்திருக்கிறது. 1729 இல் இதன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1732 இல் நிறைவேற்றப்பட்டன. இந்த அரண்மனையைச் சுற்றியும் உயரமான சுவர் எழுப்பப்பட்டுள்ளது. உள்ளே முற்றம், பூந்தோட்டம் ஆகியனவும் காணப்படுகின்றன. மன்னன் ஜெய்சிங்கிற்குப் பின்னர் வந்த வழித்தோன்றல்கள் இந்த அரண்மனையுடன் வேறும் சில கட்டிடங்களை புதிதாகக் கட்டி இணைத்துள்ளனர். இப்போது இந்த அரண்மனை ஒரு தொல்பொருள் அருங்காட்சிச் சாலையாக விளங்குகின்றது.

வாசலில் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்ட இரு யானைகளின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஒரே கல்லில் செதுக்கப்பட்ட யானைகள், இவற்றின் கலைநுட்பம் கண்ணைக் கவர்கிறது. முன்பக்க விறாந்தையில் குடத்தின் அமைப்பில் இருபெரும் வெள்ளிப் பாத்திரங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் 2000 கிலோ எடைக்கும் அதிகமானவை. ஒவ்வொன்றும் 1800 கலன் நீரைக் கொள்ளக்கூடியவை. இந்த வெள்ளிப் பாத்திரங்களில் புனித கங்கை நீரை நிரப்பி பிரித்தானியா செல்லும்போது 'இரண்டாவது மாதோசிங்' என்பவன் எடுத்துச் சென்றானாம். இவன் கங்கை நீரில் தினமும் நீராடும் வழக்கம் உடையவனாதலால் அவ்வாறு செய்தான் எனவும் இவன் ஜெய்சிங் மன்னனின் வழித்தோன்றல் எனவும் அறிய முடிகிறது.

இந்த 'சிற்றி பலஸ்' ஏழு மாடிகளைக் கொண்டது. ஒவ்வொரு மாடியின் நிலப்பரப்பும் வெவ்வேறு வகையான கண்ணைக் கவரும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டவை.

இந்த 'சிற்றி பலஸின்' வடக்குப் புறத்தில் கிருஷ்ணன் கோயில் ஒன்று உள்ளது. மன்னன் ஜெய்சிங் ஒரு விஷ்ணு பக்தன். தான் நிர்மாணித்த புதிய நகரின் மத்தியில் தனது கொள்ளுத்தாத்தா ராஜா மான்சிங் 'அம்பர்' நகரில் வணங்கி வந்த விஷ்ணு விக்கிரகத்தை எடுத்துவந்து 1719இல் இங்கு பிரதிஷ்டை செய்தான் என அறிய முடிகிறது.

**'ஜந்தார் மந்தர்' எனப்படும் வானிலை அவதானிப்பு மையம்.**

எங்கள் மூதாதையர்கள் கடிகாரம் புழக்கத்தில் வராத காலத்தில் அடி அளந்து நேரத்தைக் கணித்தார்கள். தமது நிழல் படரும் தூரத்தைக் காலடிகளால் அளந்து நேரத்தைக் கணிக்கும் முறை ஒன்றினை அவர்கள் அறிந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்து விவசாயிகள் விடிவெள்ளி உதயமாகும் நேரத்தைப் பார்த்து தோட்டத்துக்கு நீர்பாய்ச்சச் செல்வதும் வழக்கத்தில் இருந்தது. இரவில் குழந்தை பிறந்துவிட்டால் கதலி வாழை மரத்தை நடுவில் வெட்டிவிடுவார்கள். காலையில் குருத்து வளர்ந்திருக்கும் நீளத்தைக் கணக்கிட்டு குழந்தை

பிறந்த நேரத்தைக் கணிப்பார்களாம். இப்படியெல்லாம் நேரத்தைக் கணிக்கும் முறைகள் வழக்கில் இருந்தன.

இரண்டாவது ஜெய்சிங் மன்னன் வானசாஸ்திரக் கலையில் துறைதோய்ந்தவன். பண்டிட் ஜெகநாத் சாம்ராட் என்ற வானசாஸ்திர நிபுணரிடம் இந்தக் கலையைப் பயின்றவன். இந்தத் துறையில் உள்ள பல நூல்களைக் கற்றுணர்ந்தவன். சமஸ்கிருதம், பார்ஸி மொழிகளில் உள்ள நூல்களின் துணைகொண்டு தனது வானசாஸ்திர அறிவை விருத்திசெய்தான்.

1721 இல் ஜெய்சிங் மன்னன் டெல்கி, ஜெய்பூர், உஜ் ஜெயின், மதுரா, பெனாறிஸ் போன்ற இடங்களில் வானிலை அவதானிப்பு மையங்களை உருவாக்கினான். அதுவரை காலமும் போர்த்துக்கல், ரேக்கி போன்ற இடங்களில் உள்ள வானிலை அவதானிப்பு நிலையங்களில் உள்ள குறைபாடுகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டான். 1723 இல் வானிலை அவதானிப்புத் தொடர்பான தனது கணிதமுறை களை வெளியிட்டான். அதனைப் பார்த்த போர்த்துக்கேய வைஸ்ராய், மன்னனை வாழ்த்தினான். போர்த்துக்கல் தேசத்தில் இருந்து கோபனிக்கல், கலிலியோ, கெப்லர் போன்ற விஞ்ஞானிகளின் படைப்புகள் மன்னனின் பாவனைக்குப் பரிசளிக்கப்பட்டன. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் மன்னனை வாழ்த்தினர்.

மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட வானிலை அவதானிப்பு நிலையம் இந்துமதப் பாங்கில் அமைக்கப்பட்டது. சூரிய நிழல் விழும் தூரத்தையும் அதன் சாய்வையும் கொண்டு நேரத்தை மிகத் துல்லியமாக இங்கு கணக்கிட முடிகிறது. ஒரு நாளில் கிரகங்கள் எந்த எந்த நிலைகளில் இராசிகளில் இருக்கின்றன என்று கணிப்பிட்டுச் சொல்கிறார்கள். இங்கு வானிலையை அவதானிக்கக்கூடிய வேறும் பல கருவி கள் இருக்கின்றன. இங்கு மொத்தம் 18 வகைக் கருவிகள் இருக்கின்றன என அறிய முடிகிறது. வெற்றித்திருநகராக ஜெய்பூரை உருவாக்கிய மன்னன் ஜெய்சிங் தனது 45 வருட

அரசாட்சியின் பின்னர் 1744 இல் மரணமடைந்தான். அவன் வாஸ்து சாஸ்திரத்தின்படி நிர்மாணித்த ஜெய்பூர் நகரமும் அவனது வானிலை அவதானிப்பு மையமும் அவனது புகழை என்றென்றும் நிலைநாட்டிய வண்ணம் இருக்கும்.

இந்த 'சிற்றிபலஸ்' மற்றும் வானிலை அவதானிப்பு மையம் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கு ஒருவருக்கு இந்திய ரூபா 40/- அறிவிடுகிறார்கள். உல்லாசப் பயணிகள் இங்கு எந்நேரமும் நிறைந்து காணப்படுகிறார்கள். நாங்கள் இந்த வானிலை அவதானிப்பு நிலையத்தில் நேரம் பார்க்கும் கருவியை எவ்வாறு பயன்படுத்துவது என வினவியபோது எமது 'கைட்' நேரம் கணிக்கும் முறையை விளங்கப்படுத்தினார். அப்போது பகல் 11.36 மணியாகி இருந்தது. எமது கைக்கடிகாரத்தில் நேரத்தைச் சரிபார்த்தபோது அச்சொட்டாக 11.36 மணி காட்டியதைப் பார்த்து வியந்துபோனோம்.


**'அம்பர்' கோட்டை**

இரண்டாவது ஜெய்சிங் மன்னனின் கொள்ளுத்தாத்தா ராஜா மான்சிங் 1592 இல் கட்டியது இந்தக் கோட்டை. அடுத்து வந்த 150 வருட காலத்தில் இந்தக் கோட்டை அவனது வழித்தோன்றல்களால் காலத்துக்குக் காலம் திருத்தி அமைக்கப்பட்டது. இந்தக் கோட்டை உயரமான குன்று ஒன்றின் மேல் அமைந்துள்ளது. செங்கற்களினாலும் வெள்ளை மாபிள் கற்களாலும் கட்டப்பட்ட இந்தக் கோட்டையின் அருகே கீழேயுள்ள பகுதியில் ஒரு நீரோடை அமைந்துள்ளது. இந்தக் கோட்டையின் கட்டிட அமைப்பு இந்து, முஸ்லிம் கட்டிடக் கலவையாகக் காணப்படுகிறது. இந்தக் கோட்டை நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்த நான்கு பகுதிகளையும் அகலமான தெருக்கள் இணைக்கின்றன. இந்தத் தெருக்களில் உல்லாசப் பயணிகள் யானைகளில் ஏறி உலா வருவதற்கு ஒழுங்கு செய்து தருகிறார்கள்.

கோட்டை வாயிலில் ஒரு காளி கோயில் இருக்கிறது. காளியின் வாகனமான சிங்கம் வெள்ளியில் செய்யப்பட்டுள்ளது. வேறும் பல வெள்ளியினாலான சிங்க வாகனங்களை

ஆங்காங்கே காணக்கூடியதாக இருந்தது. காளி கோவிலின் முன் கதவும் வெள்ளியினால் செய்யப்பட்டுள்ளது. இந்தக் காளி கோவிலுக்குப் பூஜை செய்பவர்கள் வங்காளப் பிராமணர்கள். இவர்கள் இக்கோவிலின் ஒரு பகுதியில் வசிக்கிறார்கள் என அறிய முடிகிறது. இரண்டாவது ஜெய்சிங் மன்னன் புதிய நகரை ஜெய்பூரில் அமைக்கும்வரை இதுவே இராஜஸ்தான் தரைநகராக 1727 வரை விளங்கியது.

இராஜஸ்தான் நகைகள், ஓவியங்கள், துணிவகைகள் உலகப் பிரசித்தமானவை. இங்கு துணிகளுக்கு வர்ணம் தீட்டுவதற்கு இயற்கையாகக் கிடைக்கும் வர்ணங்களையே பாவிக்கின்றனர். இரசாயனக் கலவைகளை வர்ணம் தீட்டுவதற்குப் பாவிப்ப தில்லை. கீரையை அரைத்துப் பெற்ற பச்சை வர்ணக் கலவையைக் கொண்டு எப்படித் துணியில் வர்ணம் தீட்டுவது என்பதை நாங்கள் சென்ற துணிக்கடையொன்றில் செயல்முறை விளக்கம் தந்தார் அங்கிருந்த மனோஜ் குப்தா என்ற கலைஞர். அந்தத் துணிக்கடையில் உள்ளங்கைக்குள் சுருட்டி அடக்கக்கூடிய புடவைகள் விற்பனைக்கு இருந்தன. மிகவும் பாரம் குறைந்த படுக்கை விரிப்புகள், கம்பளங்கள் மலிந்த விலையில் உயர்ந்த ரகத்தில் பெறக்கூடியதாக இருந்தன. இராஜஸ்தானில் இரத்தினக் கற்களும் மலிவான விலையில் கிடைக்கின்றன. ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்வதற்கென இங்கு சில பொருட்கள் வாங்கியபின் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பினோம்.



# 12

# ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ‘ஆக்ரா கோட்டை’

ஆக்ரா என்றாலே முதலில் எல்லோருக்கும் நினைவில் வருவது தாஜ்மஹால்தான். காதலுக்கும் கட்டிடக் கலைக்கும் அதிசயிக்கத்தக்க அழியாத சான்றாக இருந்துவரும் தாஜ்மஹால் என்ற அற்புத மாளிகை இருக்கும் இடத்திலிருந்து இரண்டரை கிலோமீற்றர் தூரத்தில் யமுனா நதிக்கரையில் மற்றுமொரு பிரமாண்ட மானுடப் படைப்பாகத் திகழ்கிறது ஆக்ரா கோட்டை. தாஜ்மஹாலைப் போல இதுவும் ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதுவே உலகில் உள்ள மிகப் பெரிய கோட்டையாகவும் கருதப்படுகிறது.

இக்கோட்டைக்குள்தான் மொகலாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக விளங்கிய அக்பரின் தலைநகரம் இயங்கிவந்துள்ளது. அக்பருக்குப் பின் அவரது வழித்தோன்றல்களான ஜெஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் என மொகலாயப் பேரரசர்கள் இக்கோட்டையில் இருந்துதான் இந்தியாவின் பெரும் பகுதி நிலப்பரப்பை ஆண்டு வந்துள்ளனர். அக்பரது தந்தை ஹமாயூன், தாத்தா பாபர் ஆகியோரும் இங்கிருந்துதான் ஆட்சி புரிந்துள்ளார்கள். ஆறு தலைமுறை மொகலாயப் பேரரசர்களின் இராஜதானியாக விளங்கியிருக்கிறது இந்தக் கோட்டை என்பதனை அதன் பிரமாண்டமும் கம்பீரமும் பறைசாற்றுகின்றன. இவர்களது காலத்தில் இந்தக் கோட்டை, நாட்டின் மிகப்பெரிய கஜானாவையும் நாணயச்சாலையையும்

கொண்டிருந்தது.

முதலில் ராஜபுத்தானத்து ‘சௌகான்கள்’ வசம் இக்கோட்டை இருந்துள்ளது. மொகலாயர்கள் இக்கோட்டையைக் கைப்பற்றியபோது இங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த செல்வங்கள் அவர்கள் வசமானது. இதில் உலகப் புகழ்பெற்ற கோஹினூர் வைரமும் அடங்கியிருந்தது.

1558இல் தனது தந்தை இறந்ததும் 14 வயதில் ஆட்சிபீடம் ஏறிய அக்பர், இந்தக் கோட்டையைப் புனரமைக்க உத்தரவிட்டார். நாலாயிரம் கட்டிடக் கலைஞர்கள் தினமும் பணியாற்றி எட்டு ஆண்டுகளில் (1565 - 1573) புதிய கோட்டையைக் கட்டிமுடித்தனர். மண்டபங்கள், மசூதிகள், மாடமாளிகைகள் எனப் பிரமாண்டமாக கட்டிடங்கள் உருவாகின. இந்தக் கோட்டையைச் சுற்றி செங்கற்களால் கட்டப்பட்ட இரண்டு மதில்கள் அமைந்துள்ளன. உட்புற மதில் 70 அடி உயரமும் வெளிப்புற மதில் 40 அடி உயரமும் கொண்டன. கோட்டையைச் சுற்றி இரண்டு பெரிய அகழிகள் அமைக்கப்பட்டன. இந்த அகழிகளில் பயங்கர முதலைகள் விடப்பட்டிருந்தன. இப்போது வெளிப்புற அகழியை நிரப்பித் தெருவாக்கியுள்ளார்கள். அக்பர் காலத்தில் இக்கோட்டையை அமைக்க 35 இலட்சம் ரூபா செலவாகியதாம். அக்பரின் முக்கிய அமைச்சரும் அவரது வாழ்க்கைக் குறிப்பை எழுதியவருமான ‘அபுஸ்பஸல்’ என்பவர் இக்கோட்டைக்குள் ஐநூறுக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டதாகக் குறிப்பெழுதியுள்ளார். அக்பர் கட்டிய கட்டிடங்கள் பலவற்றை அவரது பேரன் ஷாஜகான் பளிங்கு மாளிகைகள் கட்டுவதற்கு அகற்றியுள்ளான்.

இந்தக் கோட்டை அரைவட்ட வடிவத்தில் ஜமுனா நதிக்குச் சமாந்தரமாக அமைந்துள்ளது. இந்து, முஸ்லிம் கட்டிடக் கலையின் கலவையாக அரண்மனைகள் அமைந்துள்ளன. உள்ளே ஜகாங்கீர் மாளிகை உள்ளது. இது அக்பரினால் தனது மகனுக்காகக் கட்டப்பட்டது. இந்த இரண்டு அடுக்கு மாளிகை தங்க நிறத்தில் வர்ணம் பூசப்பட்டுள்ளது.

உள்ளே பூந்தோட்டம், முந்திரிகைத் தோட்டம் ஆகியன காணப்படுகின்றன. இங்குள்ள எண்கோண மண்டபம் 'முஸம்மன் பேர்ஜ்' அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. இங்கு அக்பரின் மகனான ஜகாங்கீரின் மனைவி நூர்ஜகான் நீண்ட காலம் வசித்துள்ளார். இந்த எண்கோண மண்டபத்திலேதான் ஷாஜகான் அவனது இறுதிக் காலத்தில் மகனால் சிறை வைக்கப்பட்டான் எனக் கூறப்படுகிறது.

இங்கு தர்பார் மண்டபம், மன்னன் மக்களைச் சந்திக்கும் பொது மண்டபம், விருந்தினர் மண்டபம் ஆகியன அமைந்துள்ளன. ஷாஜகனால் கட்டப்பட்ட ஒரு சிறிய மசூதியும் உள்ளது. இது அரசிகளின் வழிபாட்டுக்கெனக் கட்டப்பட்டதாம்.

இங்கு 'மோதி மசூதி' எனப்படும் மூன்று விதானங்களைக் கொண்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வழிபாட்டுத்தலம் உள்ளது. அதனருகே 'மீனா பஜார்' எனப்படும் ஒரு சந்தை உள்ளது. இங்கு பெண் வியாபாரிகள் மட்டும் வந்து கோட்டையில் உள்ள பெண்களுக்குப் பொருட்களை விற்பார்களாம். இங்கு அரசர்களைத் தவிர வேறு ஆண்கள் வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என அறியமுடிகிறது. இங்கு அக்பரினால் கட்டப்பட்ட ஓர் இந்துக் கோயிலும் இருந்ததாம். பின்னர் அக்கோயில் அவுரங்கசீப் மன்னனால் அழிக்கப்பட்டு விட்டது.

இங்குள்ள தெற்கு வாயிலுக்கு 'அமர்சிங் கேட்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த வாயிலைக் கட்டியவன் ஷாஜகான். அமர்சிங் என்பவன் ஜோத்பூர் இந்து மகாராஜா. அவனை சலாபட்கான் என்பவன் ஷாஜகான் முன்னிலையில் அரச சபையில் அவமானப்படுத்திவிட்டான். அதனால் கோபமடைந்த அமர்சிங், தனது வாளை உருவி சலாபட்கானை கொன்றுவிட்டான். இதனால் முகலாயப் போர்வீரர்கள் அமர்சிங்கை கொல்வதற்கு முனைந்தனர். அவன் உடனே தனது குதிரையில் ஏறி கோட்டையின் உயரமான மதிலைப் பாய்ந்து கடந்தானாம். அவனது திறமையை மெச்சி இந்த வாயிலுக்கு

'அமர்சிங் கேட்' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஆனா லும் அமர்சிங்கினது குதிரை பாய்ந்த வேகத்தில் உடலின் பாதி அகழியிலும் மீதி தெருவிலுமாக வீழ்ந்து அடிபட்டு அந்த இடத்திலேயே உயிர் நீத்ததாம். அதிசயிக்கத்தக்க இந்த நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த ஷாஜகான் அதன் நினைவாக செங்கல்லினால் அந்தக் குதிரையின் உருவத்தை அமைத்து இந்த அமர்சிங் கேட் வாயிலில் வைத்துள்ளான்.

**'ஃபதேபூர் ஸிக்ரி'** (Fatehpur Sikri)

மொகலாயப்பேரரசனானஅக்பருக்குநீண்டநாட்களாகப் பெருங்கவலை இருந்து வந்தது. அவருடைய 27 வயதுவரை பிறந்த குழந்தைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக இறந்தது அவருக்குப் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியது. தமக்குப் பிறகு நாட்டை ஆள்வதற்கு ஓர் ஆண் மகன் இல்லையே என அவரது மனம் சஞ்சலம் அடைந்தது.

அக்பருக்கு மூன்று பட்டத்து ராணிகள். ஜோதாபாய் இந்து மனைவி, மரியம் உஸ்மான் கத்தோலிக்க மனைவி, இஸ்தான் புல் என்ற அவரது மைத்துனி முஸ்லிம் மனைவி. இவர்கள் மூவருக்கும் பிறந்த குழந்தைகள் அடுத்து அடுத்து இறந்து கொண்டிருந்தன.

இந்த வேளையில் அவரிடம் சிலர் 'ஸிக்ரி' என்னும் ஊரில் 'ஷேக் சலீம் சிஸ்தி' என்னும் பெயருடைய மகான் ஒருவர் இருப்பதாகவும் அவர் பல அற்புதங்களை நிகழ்த்தி வருவதா கவும் அவரைச் சந்தித்தால் மன்னனின் குறை தீரும் எனவும் கூறினர்.

ஆக்ராவில் இருந்து 37 கி.மீ தூரத்தில் ஒரு மலைப்பிரதேசத்தில் ஸிக்ரி ஊர் இருந்தது. மன்னன் கால்நடையாகவே அந்த ஊருக்குச் சென்று அந்த மகானைத் தரிசித்தானாம். அந்த மகான் மன்னனை ஆசீர்வதித்தார். இந்து மனைவியான ஜோதாபாயை ஸிக்ரிக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார்.

அக்பர், ஜோதாபாய் வசிப்பதற்காக ஸிக்ரியில்

ஒரு மாளிகை எழுப்பி அவளை அங்கு அனுப்பிவைத்தார். ஜோதாபாய் ஸிக்ரிக்கு வந்த ஓர் ஆண்டுக்குள் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்பருடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தம்முடைய மகனுக்கு அந்த மகானுடைய பெயராகிய 'சலீம்' என்ற பெயரையே சூட்டினார். ஏழை எளியவர்களுக்கு நிறை யத் தானதர்மங்கள் செய்தார். சிறையிலிருந்த கைதிகளை விடுதலை செய்தார். அந்த மகான் இருக்கும் இடத்திலேயே தானும் இருக்க வேண்டுமென விரும்பினார். அங்கு ஒரு நகரை நிர்மாணம் செய்து ஒரு கோட்டையைக் கட்டினார். அதுதான் இன்றுள்ள ஃபதேபூர் ஸிக்ரி.

இக்கோட்டையின் கட்டிட வேலைகள் **1569** இல் ஆரம்பிக்கப்பட்டு **1574** இல் முடிவடைந்தன. அக்பர் இந்தக் கோட்டையில் இருந்து **1585** வரை ஆட்சி செய்தார். பின்னர் அந்தப் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படவே தனது இருப்பிடத்தை லாகூருக்கு மாற்றிக் கொண்டார். எனினும் **1600** இல் மீண்டும் தனது ஆரம்பகால இருப்பிடமான ஆக்ரா கோட்டைக்கு வந்து தனது ஆட்சியைத் தொடர்ந்தார். **1605** இல் அவரது வாழ்நாள் முடிவுற்றது.

நாங்கள் ஃபதேபூர் ஸிக்ரி கோட்டையைப் பார்ப்பதற்கு ஒரு 'கைட்'டின் உதவியை நாடியிருந்தோம். நாங்கள் ஸ்ரீலங்காவில் இருந்து வருகிறோம் என்று கூறியபோது அவரது முகம் மலர்ந்தது. தான் கிரிக்கெட் வீரர் ஜெயசூரியாவின் விசிறி என்றார். முத்தையா முரளிதரன் தனது பந்து வீச்சில் எவருமே முறியடிக்க முடியாத உலக சாதனையை ஏற்படுத்தப் போகி றார் என்றார். எமது சின்னஞ்சிறிய நாடான இலங்கையை கிரிக்கெட் விளையாட்டும் இங்குள்ள அரசியலும் உலகளவில் பிரபல்யப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தக் கோட்டைக்குள் அகபர் தனது மூன்று மனைவியருக்கும் தனித்தனி மாளிகைகள் கட்டியிருக்கிறார். அவருடைய இந்து மனைவியான ஜோதாபாய்க்குத் தான் முத லில் இங்கு மாளிகை கட்டப்பட்டது. இது **331** அடி நீளமும் **215** அடி அகலமும் கொண்டது. இந்து வழிபாட்டு முறைக்கான

சகல வசதிகளும் இந்த மாளிகையில் அமைந்திருக்கின்றன. ஒரு துளசி மாடமும் இங்குள்ளது. மேல் விதானங்களிலும் சுவர்களிலும் செய்யப்பட்டுள்ள வர்ண வேலைப்பாடுகள் சிறப்பானவை.

அக்பரின் கத்தோலிக்க மனைவி மரியம் உஸ்மானுக்கு கட்டப்பட்ட மாளிகை தங்க முலாம் பூசப்பட்டிருப்பதால் இதனைத் 'தங்க மாளிகை' என்கிறார்கள். இங்கு 'ஃபெர் தௌஸி' என்ற உருதுக் கவிஞனின் காவியத்திருந்து சில காட்சிகளும் இந்துக்களின் புராணக் கதைகளிலிருந்து சில காட்சிகளும் கிறிஸ்தவக் காட்சிகளிலிருந்த சிலவும் சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. மேற்குப்புறம் உள்ள தாழ்வாரத்தில் ஒரு பெண்மணி கிளியுடன் இருக்கும் சித்திரம் மிகச் சிறப்பாகவுள்ளது.

முஸ்லிம் மனைவி இஸ்தான் புல் பேகத்தின் மாளிகை இங்குள்ள மாளிகைகள் எல்லாவற்றையும் விட அதிக அழ கிய சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியது. அரசி குளிக்கும் இடம் ஒரு சிறிய தோட்டத்திற்குள் அமைந்துள்ளது. இங்கு குளிப்பதற்குத் தண்ணீரும் வெந்நீரும் வெளியிலிருந்து வருமாறு அமைத்துள்ளார்கள்.

இந்த மூன்று அரசிகளின் மாளிகைகளிலிருந்தும் அக்பரின் படுக்கை அறைக்குச் செல்வதற்குத் தனியான சுரங்க வழிகள் அமைந்துள்ளதாகக் கூறுகிறார்கள். அக்பரின் படுக்கை அறைச் சுவர்களிலும் விதானங்களிலும் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. வடக்குப் புறத்தில் உள்ள சுவரில் ஒரு பெரிய உருவம் கையில் குழந்தையுடன் இருப்பதைப் போல் வண்ணச் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. இந்தக் குழந்தை அக்பரின் மகன் சலீம் என்று கூறுகிறார்கள்.

இவற்றைவிட தர்பார் மண்டபம், மந்திரிகளுக்கான மண்டபம், பாடகர்களுக்கான மண்டபம், கஜானா, ஜோதிடர் மண்டம், அமைச்சர்களுடன் மந்திராலோசனை செய்யும் மண்டபம் முக்கியமான தஸ்தாவேஜுகளைப் பாதுகாக்கும் இடம், மசூதி ஆகியனவும் இன்னும் பல கட்டிடங்களும்

அமைந்துள்ளன.

அக்பர் ஒரு கேளிக்கைப் பிரியர். இவருக்கு ஐயா யிரத்துக்கும் மேற்பட்ட ஆசைநாயகிகள் இருந்ததாகக் கூறு கிறார்கள். 'சுவாப்கா' எனப்படுவது அக்பரின் அந் தரங்க மாளிகை. இங்கு அக்பரின் அனுமதியின்றி அவரது மனைவியர்கள் கூட நுழையமுடியாது. இந்த மாளிகை யின் வாயில்களிலும் அரசிகளின் மாளிகை வாயில்களிலும் அலிகளைக் காவலுக்கு நிறுத்தியிருந்தார்களாம். இந்த மாளிகையின் ஒரு புறத்தில் திறந்தவெளியுள்ள மூடிய தாழ்வாரங்கள் உள்ளன. இந்தத் திறந்த வெளியில் 'தாயம்' விளையாடுவதற்கான கோடுகள் வரையப்பட்டுள்ளன. இங்குள்ள பெரிய தாயக்கட்டங்களில் நகர்த்தப்படும் 'காய்'களுக்குப் பதிலாக அழகிய இளம் பெண்கள் நிறுத்திவைக்கப்படுவார்களாம். அக்பர் தனது அரசிகளுடன் அமர்ந்து தாயக்கட்டைகளை உருட்டி தாயம் விளையாடு வாராம். காய்கள் நகர்த்தப்படுவதற்குப் பதிலாகப் பெண்கள் நர்த்தனமாடியபடி நகர்வார்களாம். தாய விளையாட்டின் முடிவில் அக்பர் தாம் விரும்பிய பெண்ணை தனது அந்தரங்க மாளிகைக்கு வரவழைப்பாராம். அந்தப் பெண், பன்னீர் குளி யலின் பின் அக்பரின் மாளிகைக்குள் நுழைவாளாம். இதனை 'நர்த்தன தாயம்' என விளக்கினார் 'கைட்'.

இந்த அந்தரங்க மாளிகையின் சிறிது தூரத்தில் 'பீர்பால் மாளிகை' உள்ளது. அக்பருடைய அரசவையில் ஒன்பது பேர் வரலாற்றுச் சிறப்புப் பெற்றிருந்தனர். இவர்களில் பீர்பாலும் ஒருவர். இவரைப் பற்றிப் பல சுவையான கதைகள் உள்ளன. அவை தமிழில் உள்ள தெனாலி இராமன் கதைகளை ஒத்தவை. நமது நாட்டின் கல்லடி வேலன் தொடர்பான கதைகளைப் போன்றவை. குயுக்தி நிறைந்த சுவையான கதைகள்.

இந்தக் கோட்டையில் 'ஹாத்தி மஹால்' என்ற ஓர் இடம் உண்டு. ஹாத்தி என்றால் ஹிந்தியில் யானையைக் குறிக்கும். இதன் நுழைவாயில் 11 அடி உயரமும் 18 அடி அகலமும் உள்ளது. இங்கு யானைகளைக் கட்டி வைப்பார்கள்.

அக்பருடைய ஆட்சிக்காலத்தில் பாரிய குற்றங்கள் புரிந்தவர்களை யானையின் காலால் மிதிக்க வைப்பார்கள் அல்லது குற்றவாளியை கழுத்துவரை நிலத்திலே புதைத்துவிட்டு யானையின் காலால் இடறவைப்பார்கள். பாலியல் குற்றம் புரிந்தவர்கள், கொலைக்குற்றம் புரிந்தவர்கள், பாரிய திருட்டில் ஈடுபட்டவர்கள் ஆகியோருக்கு இத்தகைய தண்டனைகள் கொடுக்கப்பட்டதாம்.

அக்பருக்குக் குதிரை வளர்ப்பதில் பிரியம் அதிகம். அரண்மனை லாயத்தில் 12,000 குதிரைகள் இருந்ததாக அக்பரின் சரித்திரத்தில் அறிய முடிகிறத. 'பீர்பால்' மாளிகை யில் மட்டும் அக்பருக்கு பிடித்தமான 110 குதிரைகள் தனியாக இருந்தனவாம்.


இவற்றைவிட இக்கோட்டையின் ஒரு பக்கச் சுவரில் பல புறாக்கூடுகள் இருக்கின்றன. அக்பர் காலத்தில் செய்திப் பரிமாற்றங்கள் புறாக்கள் மூலமாகவே நடந்தன எனவும் அறிய முடிகிறது.

இந்தக் கோட்டையில் 'பாஞ்ச மஹால்' என்னும் ஐந்து மாடிகள் கொண்ட மாளிகை இருக்கிறது. கீழ்தளம் 72 அடி நீளமும் 58 அடி அகலமும் கொண்டது. இதில் கலை நுணுக்கம் வாய்ந்த 85 தூண்கள் உள்ளன. முதலாவது தளத்தில் 56 தூண்களும், இரண்டாவது தளத்தில் இருபது தூண்களும், மூன்றாவது தளத்தில் பன்னிரெண்டு தூண்களும், நான்காவது தளத்தில் நான்கு தூண்களும் உள்ளன. முதல்மாடி 19 அடி உயரமும் இரண்டாவது மாடி 62 அடி உயரமும் மூன்றாவது மாடி 20 அடி உயரமும் நான்காவது மாடி 12 அடி உயரமும் உள்ளன. ஐந்தாவது மாடியில் விதானம் அமைந்துள்ளது. இந்தக் கட்டிடத்தின் மேல்பகுதி பௌத்த விஹாரையின் மேல்தளம் போலத் தோற்றமளிக்கிறது.

அரசரும் அவரது மனைவியர்களும் கோடை காலங்களில் காற்று வாங்குவதற்காக இங்கு அமர்ந்திருப்பார்களாம்.இது தவிர, பௌர்ணமி நாட்களிலும் அரசர் தமது மனைவியரோடு இங்கு உல்லாசமாக இருப்பார் எனக் கூறுகிறார்கள். இந்த

மாளிகையின் இரண்டாவது மாடியில் அக்பர் தனது மனைவிய ருடன் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவார் என்றும் அறிய முடிகிறது.

அக்பர் சக்கரவர்த்தியின் அபிமானத்துக்குப் பாத்திரமான மதப் பெரியார் ஷேக் சலீம் சிஸ்தி இறந்ததும் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் வெள்ளைச் சலவைக் கற்களாலான ஒரு சமாதி எழுப்பப்பட்டுள்ளது. இந்தச் சமாதி யின் வெளியே சில வியாபாரிகள் பட்டுத்துணிகளை விற்பனை செய்கிறார்கள். இந்தப் பட்டுத் துணிகளை வாங்கி உள்ளே இருக்கும் சமாதி பீடத்தில் வைத்து வணங்கி வேண்டுதல் செய்தால் அந்த வேண்டுதல் நிறைவேறும் என்கிறார்கள். நாங்கள் இவ்வாறு வேண்டுதல் செய்வதற்கு நீண்ட 'கியூ' வரி சையில் நிற்கவேண்டி இருந்தது.



# 13

# உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால்

ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஆக்ரா அரண்மனை வளாகத்தில் அரசகுலப் பெண்களுக்கான ஒரு சந்தையில் இளவரசன் ஷாஜகான் உலாவந்தான். அங்கு கண்ணைக் கவரும் ஒரு பேரழகி கண்ணாடிப் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு கடையில் பணியில் இருந்தாள். மன்னனும் நோக்கினாள், அவளும் நோக்கினாள். இருவரும் தம்மை மறந்தனர், காதல் வயப்பட்டனர்.

தந்தை ஜகாங்கிரிடம் தனது காதலைத் தெரிவித்தான் ஷாஜகான். தந்தை ஜகாங்கிர் வேறுயாருமில்ல, உலகின் அழி யாக் காதல் காவிய நாயகனாக விளங்கிய சலீம்தான் அவன். முடிசூட்டப்பட்ட பின்னரே சலீமுக்கு 'ஜகாங்கிர்' என்ற பெயர் ஏற்பட்டது. சலீம் - அனார்க்கலி காதல் சோகத்தில் நிறைவுற்ற ஒரு துன்பவியல் சித்திரம். சலீம் அக்பரின் மகன். மொகலா யப் பேரரசின் வாரிசு. நீண்டகாலம் புத்திரப்பேறு இன்றித் தவித்த அக்பருக்கு ஒரு மதப் பெரியாரின் ஆசியால் கிடைத்த குலக்கொழுந்து.

அதனாலேதான் அந்த மதப் பெரியாரின் பெயரையே தனது மகனுக்குச் சூட்டியிருந்தார் அக்பர். அனார்க்கலி ஒரு சாதாரண ஏழைப்பெண். தனது மகன் ஓர் ஏழைப்பெண்ணைக் காதலிப்பதை அறிந்தபோது அக்பரின் மனம் சஞ்சலமடைந் தது. சலீமுக்குப் பெண் தருவதற்கு எத்தனையோ அரசர்கள் ஆயத்தமாக இருக்கும்போது சலீம் ஓர் ஏழைப்பெண்ணை

பட்டத்த ராணி ஆக்குவதை அக்பர் ஏற்றுக்கொள்ளவில்லை. மகனிடம் அனார்க்கலியின் காதலைத் துறந்துவிடும்படி கூறினார்.

ஆனால், அவனோ அவளை மறக்கமுடியாமல் தவித்தான். அனார்க்கலியை மணமுடிக்கத் தயாரானான். அக்பர் யோசித்தார். அனார்க்கலி உயிருடன் இருந்தால்தானே சலீம் அவளை மணம் முடிப்பான். எனவே, அரசகுமாரனைக் காதலித்த குற்றத்திற்கு அவளுக்குத் தண்டனை வழங்கத் தீர்மானித்தார். அனார்க்கலியை ஓர் இடத்தில் நிற்கவைத்து நாற்புறமும் சுவர் எழுப்பி அவளுக்கு உயிருடன் சமாதி கட்டினார். சலீம் துடித்தான், குமுறி அழுதான். அக்பர் அனார்க்கலியிடமிருந்து சலீமை பிரித்துவிட்டார். ஆனால், சலீமின் உள்ளத்திலிருந்து அவளை அவரால் பிரிக்க முடியவில்லை. சலீம் - அனார்க்கலி காதல் உலகமகா காதற் காவியம் ஆகியது. அக்பரின் மறைவுக்குப் பின்னர், **1605** ஆம் ஆண்டு நவம்பர் மூன்றாம் நாள் தந்தை அக்பரின் கிரீடத்தை எடுத்து தானே தனது தலையில் சூடி மொகலாயச் சக்கரவர்த்தி ஆனான் சலீம். அன்றிலிருந்து அவனது பெயர் நூர் மொகமட் ஜகாங்கிர் ஆகியது.

ஜகாங்கிரின் ஆட்சி, அக்பரது ஆட்சியைப் போன்று உன்னதமானதாக அமையவில்லை. அவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையானான். ஆனால் அவனது பட்டத்து ராணியாக வாய்த்த நூர்ஜகான் கெட்டித்தனமானவள், நாகரிகமானவள், கலையை ஆராதிப்பவள், தனது தாய் தந்தையரிடம் ஆராத அன்பு கொண்டள். அவள் தனது தந்தை இறந்துபோக யமுனா நதியின் கிழக்குத் தீரத்தில் ஓர் அழகான சமாதியை வெள்ளை மாபிள் கற்களால் கட்டுவித்தாள். அந்தச் சமாதியை அவளே வடிவமைத்தாள் எனக் கூறப்படுகிறது.

தந்தை ஜகாங்கிரிடம் ஷாஜகான் தனது காதலை வெளிப்படையாகக் கூறியபோது ஜகாங்கிருக்குத் தன் இளமைப் பருவத்துக் காதலி அனார்க்கலியின் நினைவு வந்திருக்க வேண்டும்! நிறைவேறாக் காதலால் தான் பட்ட

துன்பம் நினைவில் வந்திருக்க வேண்டும்! எவ்வித மறுப்புமின்றி மகனது காதல் நிறைவேற அனுமதி கொடுத்தான் ஜகாங்கிர்.

ஷாஜகான் காதலித்த அந்த இளஞ்சிட்டு வேறு யாருமல்ல அவனது தாய் நூர்ஜகானின் சொந்தச் சகோதரரும் முதலமைச்சருமான அஸஃப்கான் என்பவரது மகள்தான் அவள். அவள் பெயர் அர்ஜுமான்பானு.

1592ஆம் ஆண்டில் ஷாஜகான் அர்ஜுமான்பானு திருமணம் நடைபெற்றது. அப்போது மணமகளுக்கு வயது 19 மட்டுமே. மாமனார் ஜகாங்கிரிடம் சென்று மணமகள் வணங்கி எழுந்தபோது “இன்றிலிருந்து நீ மும்தாஜ் (முதன்மையானவள்) என்று அழைக்கப்படுவாய்” என்று ஆசீர்வதித்தார் ஜகாங்கிர்.

மும்தாஜின் அளவில்லாத அன்பாலும் பண்பாலும் வசீகரத்தாலும் நேர்மையான நன்னடத்தையாலும் ஷாஜகான் பெரிதும் கவரப்பட்டான். ஷாஜகானின் ஆட்சியில் மும்தாஜுக்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. அவள் கணவனுக்கு ஆலோசனை கூறி இராச்சிய விவகாரங்களை வழிநடத்துவதிலும் திறமையுடன் செயற்பட்டாள்.

ஷாஜகான் - மும்தாஜ் திருமண வாழ்க்கை 18 வருடங்கள் நீடித்தது. இந்தத் திருமண வாழ்வில் தனது கணவனது வலக்கரமாக அவள் செயற்பட்டாள். ஏழை எளியவர்களுக்கு உதவுவதிலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் மும்தாஜ் அக்கறை காட்டினாள். அதனால் அவள் யாவராலும் மதிக்கப்படுகின்ற ராணியாக வாழ்ந்தாள். லட்சியப் பெண்ணாகத் திகழ்ந்த மும்தாஜ், கணவனுக்கு நல்ல மனைவியாய், நண்பியாய், மந்திரியாய் இறுதிவரை வாழ்ந்தாள்.

ஷாஜகான் தம்பதியினருக்கு 14 பிள்ளைகள். ஷாஜகான் ஒரு போர்முனையில் இருந்தவேளை மும்தாஜின் கடைசிக் குழந்தை பிறந்தது. ஷாஜகான் போகும் இடங்களுக்கெல்லாம் தன் மனைவியை அழைத்துச் செல்வான். அப்போது மும்தாஜும் போர்முனையில் இருந்த பாசறை ஒன்றில் தங்கியிருந்தாள். பிரசவத்தின்போது மும்தாஜுக்கு கடுமையான சுகவீனம்

ஏற்பட்டது. மும்தாஜைக் காப்பாற்ற ஷாஜகான் சகல முயற்சிகளையும் எடுத்தான். மும்தாஜுக்கு தான் இறக்கப்போவது தெரிந்துவிட்டது. தனது மூத்த மகள் ஜகானரா என்பவளை அழைத்து 'இனி அப்பாவைக் கவனிப்பது உனது பொறுப்பு' என்றாள். ஷாஜகான் அவளது கட்டிலின் அருகே அமர்ந்து 'அன்பே, நான் உன்மேல் அளவில்லாத காதல் கொண்டுள்ளேன். உன் நினைவாக ஓர் அற்புதமான நினைவாலயம் எழுப்புவேன். இந்த உலகம் உள்ளவரை காலாதி காலமாக அது உனது நினைவை எமது அன்பை பறைசாற்றிக் கொண்டே இருக்கும்' என வாக்களித்தான். அப்போது மும்தாஜ் நான் இறந்தபின் நீங்கள் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்யாது எனது 14 பிள்ளைகளையும் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' எனக் கூறியபடி ஷாஜகானின் மடியில் உயிர் நீத்தாள். அவளது வயது அப்போது 38 மட்டுமே.

ஷாஜகான் அவளது பிரிவைத் தாங்கமுடியாது துடிதுடித்தான். நடைப்பிணமானான். மும்தாஜின் மறைவால் இராச்சிய பரிபாலனம் சோபை இழந்தது. அவனால் இராச்சிய விடயங்களைக் கவனிக்க முடியவில்லை. பண்டிகை நாட்களில் அவன் மும்தாஜை நினைத்து அடிக்கடி தேம்பி அழுதான். முகத்தைச் சவரம் செய்வதைத் தவிர்த்து தாடி வளர்த்தான். மும்தாஜை மறப்பதற்கு அவன் பல வழிகளிலும் முயன்றும் அவனால் முடியவில்லை. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் வெள்ளை ஆடை அணிந்து மும்தாஜின் புதைகுழிக்கு நடந்து சென்று கண்ணீர் ஆறாகப் பெருக அழுதபடி தொழுகை செய்தான். இரண்டு வருடங்கள் அவன் எந்த நிகழ்விலும் பங்குபற்றுவதைத் தவிர்த்தான்.

தாஜ்மகால் நினைவாலயத்தைக் கட்டுமுன் உலகின் சிறந்த கட்டிடக் கலைஞர்களிடம் அதற்கான வரைபடத்தை வரைந்து தரும்படி கோரினான் ஷாஜகான். பல வரைபடங்கள் வந்து சேர்ந்தன. அவற்றுள் 'ரேக்கி' நாட்டின் கட்டிடக் கலைஞர் 'உஸ்தாத் ஷா அபான்டி' என்பவர் வரைந்த வரைபடமே தெரிவு செய்யப்பட்டது. 1631 மார்கழியில் கட்டிட வேலைகள்

ஆரம்பமாகின. 20,000 தொழிலாளிகள் 22 வருடங் கள் தொடர்ச்சியாக வேலைசெய்து கட்டிட வேலை களை நிறைவு செய்தனர். அந்தக் காலத்தில் இதைக் கட்டி முடிக்க பல கோடி ரூபா செலவானதாக கூறுகிறார்கள்.

முகம்மது இஸா அபாடி என்ற கட்டிடத்தொழில் நிபுணருக்கு மாதச் சம்பளம் ரூபா ஆயிரம், சலவைக் கற்களில் பூ வேலைகள்செய்த பல்தேவ்தாஸ்என்றசிற்பக்கலைவல்லுநருக்கு மாதச் சம்பளம் எழுநூறு, கொத்தனார் அப்துல்லாவிற்கு மாதச் சம்பளம் அறுநூறு, அரா முகம்மது என்ற சிற்பிக்கு மாதச் சம்பளம் ஐநூறு என அந்தக் காலத்திலேயே சம்பளங்கள் வழங்கப்பட்டதாம். இதைவிட ஆயிரத்துக் மேற்பட்ட யானை கள் வேலைக்கு அமர்த்தப்பட்டதாகவும் அறிய முடிகிறது. ஈரான்,ஈராக், துருக்கி, அரேபியா முதலிய நாடுகளிலிருந்தும் பல்வகைத் திறன் கொண்ட கலைஞர்கள் நிர்மாண வேலை களில் ஈடுபட்டதாகவும் சான்றுகள் உள்ளன. பல மன்னர்களும் நவாப்களும் தங்கமும் வெள்ளியும் இரத்தினக் கற்களும் கொடுத்து உதவியதாக வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். இவற்றைவிட திபேத், சைனா, ஸ்ரீலங்கா, பேர் ஸியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் இரத்தினக் கற்கள் பெறப்பட்டதாம்.

நாங்கள் ஒரு அதிகாலை வேளையில் சூரிய உதயத்தின் போது தாஜ்மஹாலைப் பார்க்கச் சென்றோம். தாஜ்மகால் இருக்கும் இடத்திற்கு வாகனம் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. எனவே, நாங்கள் சென்ற வாகனத்தி லிருந்து இறங்கி ஒட்டகம் இழுக்கும் ஒரு வண்டியில் இரண்டு கிலோமீற்றர் பயணித்து தாஜ்மகாலை அடைந்தோம். தீவிர வாதிகள் தாஜ்மகாலைத் தாக்கிச் சேதப்படுத்திவிடக் கூடும் என்ற காரணத்தினாலேயே இங்கு வானங்கள் தாஜ்மகாலின் அருகில் வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

நாங்கள் அங்கு சென்றடைவதற்கு முன்னதாகவே பெருங்கூட்டம் கியூ வரிசையில் நிறைந்திருந்தது. வெளி நாட்டவர்களே அதிகளவில் காணப்பட்டனர். ஒருவாறு

நுழைவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு உள்நுழைந்தோம்.

ஆகா, அழகோ அழகு! நான் பிரமித்து நின்றுவிட்டேன். நுழைவாயிலில் இருந்து ஆயிரம் அடி தூரத்தில் தாஜ்மகால் இருக்கிறது. காலை இளஞ்சூரியனின் மஞ்சள் வெயிலில் தாஜ்மகால் தகதகவென தங்க நிறத்தில் ஜொலித்துக் கொண் டிருப்பதை தூரத்திலிருந்தபடி இரசிக்க முடிந்தது. பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட இந்த மாளிகை, காலை வெயிலில் ஒரு தோற்றமும் பகலாகும்போது வேறொரு தோற்றமும் மாலை யில் பிறிதொரு தோற்றமும் இரவில் வேறொரு தோற்றமும் பௌர்ணமி நிலவில் வர்ணிக்க முடியாத பேரழகுத் தோற்றமும் தந்து காண்போரைப் பிரமிக்க வைக்கிறது. பளிங்கில் வெவ்வேறு தரத்திலான ஒளித்தெறிப்புகள் ஏற்படும்போது இத்தகைய தோற்ற மாறுதல்கள் ஏற்படுகின்றன.

தாஜ்மகாலும் அதன் தோட்டமும் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. தாஜ்மகாலுக்குச் செல்லும் நுழைவாயில் சிவப்புக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. இந்த வாயிலில் இருந்து உள்ளே போகும் பாதையின் நடுவில் நானூறு அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்ட நீர்நிலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் நடுவில் நீர்ச்சுரப்பிகள் நீரை மேலே வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றன. தாஜ்மாகலின் அழகிய பிம்பத்தை இந்த நீர் நிலையில் காணக்கூடியதாக இருக்கிறது.

313 சதுர அடிப்பரப்பில் சலவைக்கற்களால் அமைக்கப் பட்ட மேடை மீது தாஜ்மகால் காட்சி தருகிறது. நுழை வாயிலின் இருபுறச் சுவர்களில் திருக்குறான் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் எழுத்துகள் கீழிருந்து மேல்வரி வரை ஒரே வடிவில் தெரிகின்றன. அவ்வாறு தோன்றும் படியாக எழுத்துக்களின் வடிவத்தை மேலே போகப் போகக் கொஞ்சம் கொஞ்சமாய் பெரிதுபடுத்தி எழுதியுள்ளனர். அண்ணாந்து பார்த்தால் எழுத்துகள் ஒரே சீராக அளவாக எழுதப்பட்டுள்ளதாக பார்ப்பவர் கண்களுக்குத் தோன்றுகின்றன.

தாஜ்மகாலின் உயரம் மொத்தம் 220 அடி. இது இரண்டு

அடுக்குகள் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ளது. முதல் அடுக்கு 4 1/2 உயரம் உள்ளது. இது சிவப்புக் கற்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அடுக்கு வெள்ளைச் சலவைக் கற்களால் ஆனது. இதன் உயரம் 18 அடி.

தாஜ்மகாலின் மேலே உள்ள கூம்பகத்தின் உயரம் 20 அடி. அதன்மேல் உள்ள செப்புக்கொடியின் உயரம் 30 அடி. தாஜ்மகாலின் நான்கு மூலைகளிலும் உள்ள ஸ்தூபிகள் ஒவ்வொன்றும் 140 அடி உயரம் உடையவை. இந்த ஸ்தூபிகள் புவி நடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் சரிந்து விழுந்ததால் தாஜ்மகாலின் மேல் விழுந்துவிடாதவாறு அமைத் துள்ளார்கள்.

தாஜ்மகாலின் பிரதான வாயிற்படியின் உயரம் 90 அடி. இதன் ஓரங்களில் மாபிள் கற்களில் பூவேலைகள் செய்திருக்கிறார்கள். அத்தோடு திருக்குறான் வசனங்களும் அரபு எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையும் பூ வேலைகள் போன்று அழகாகத் தெரிகின்றன.

உள்ளே மகாலின் நடுவில் மும்தாஜ் சமாதியும் அதன் பக்கத்தில் ஷாஜகான் சமாதியும் உள்ளன. தாஜ்மகாலின் மேற்புறத்திலிருந்து பார்க்கும்போது பின்புறம் ஓடும் யமுனை நதியைக் காணலாம். தாஜின் நடுவே உள்ள நீள மான நீர்ப்பொய்கையின் இரு மருங்கிலும் அழகிய மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. தாஜ்மகாலின் முழு அழகையும் காணவேண்டுமானால் பௌர்ணமி தினத்தில் காணவேண்டும் என்று கூறுகிறார்கள்.

தாஜ்மகாலைப் பார்வை இட வந்தவர்களில் பல வெளிநாட்டு காதல் ஜோடிகளையும் காணக்கூடியதாக இருந்தது. தாஜ்மகாலின் உள்ளே பாதணியுடன் செல்ல முடியாது. அங்குள்ள பளிங்குத் தரையை சப்பாத்துக் கால்கள் சேதப்படுத்தி விடாமல் இருக்க இந்த ஏற்பாடு என்கிறார்கள்.

மும்தாஜின் பிரிவால் நோய்வாய்ப்பட்ட ஷாஜகானுக்கு மேலும் பல கவலைகள் ஏற்பட்டன. 'அவரங்க சீப்' ஷாஜகானின் ஆறாவது மகன். அவன் தனது ஆண் சகோதரர்கள் யாவரையும்

கொலை செய்துவிட்டு ஆட்சிப் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்டான். இதனால் ஷாஜகானின் துன்பம் அதிகமாகியது. புத்திர சோகம் வாட்டியது. அத்தோடு நோய்வாய்ப்பட்டு பலவீனமடைந்த ஷாஜகானை ஆக்ரா கோட்டையில் சிறை யில் அடைத்து வைத்தான் அவுரங்கசீப்.

ஷாஜகான் சிறைப்பட்டிருந்தபோது அங்கிருந்து தூரத்தில் தெரியும் தாஜ்மகாலைப் பார்க்கக்கூடியதாக வசதி செய்து கொடுத்தான் அவுரங்கசீப். சிறையில் அவரை விட்டுப் பிரியாமல் அவருக்குப் பணிவிடை செய்தவள் அவருடை மூத்த மகள் ஜகானரா பேகம். ஷாஜகானின் மூச்சு நின்றபோது தாஜ்மகாலைப் பார்த்த வண்ணமே அவரது உயிர் பிரிந்தது.

அவுரங்கசீப் ஆட்சியில் மொகலாய சாம்ராஜ்யம் படிப்படியாக வீழ்ச்சியுற்றது. அவன் கொடுங்கோல் ஆட்சி செய்ததாகவும் நாட்டு மக்களைப் பெரிதும் வருத்தியதாகவும் சமயப்பொறை அற்றவனாக இந்துக்கோவில்கள் பலவற்றை இடித்துத் தள்ளினான் என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. தந்தை ஷாஜகான் இறந்தபோதும் அவன் அவரது இறுதிக் கிரியைகளில் கூடப் பங்குபற்றவில்லை எனவும் அறிய முடிகிறது.

தாஜ்மகாலின் அழகையும் கலைநுட்பத்தையும் பார்த்த வெளிநாட்டவர்கள் இது மனிதப் படைப்பல்ல, தேவப் படைப்பு என்று அதிசயித்துக் கூறியுள்ளார்கள்.

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைப் பார்த்த மனநிறைவோடு அந்த இடத்தை விட்டுப் பிரிய மனமின்றி நாம் வெளியே வந்து ‘ஒட்டக வண்டி’யில் ஏறி எமது வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் இடம் நோக்கிப் பயணித்தோம்.

# 14

# கிருஷ்ணர் பிறந்த சிறைச்சாலை

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பார்த்துவிட்டு அன்று இரவு நாங்கள் ஆக்ராவில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கினோம். மறுநாள் காலை மதுராவுக்குப் பயணமானோம். ஆக்ராவில் இருந்து 58 கிலோமீற்றர் தூரத்தில் மதுரா இருக்கிறது. மதுரா கிருஷ்ணன் பிறந்த இடம். கிருஷ்ணன் இந்து மதக் கடவுளர்களில் ஒருவர். விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக கிருஷ்ணர் அவதாரம் கருதப்படுகிறது. மகாபாரதத்திலும் பாகவத புராணத்திலும் இவரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்து சமயப் பக்தி நெறி யில் இவருடைய பக்தர்களே பெரும்பாலானவர்கள். இவரைத் தமிழர்கள் 'கண்ணன்' என்றும் வட இந்தியர் 'கண்ணையா' என்றும் அழைக்கின்றனர்.

கிருஷ்ணன் பிறந்தது ஒரு சிறைச்சாலையில். இந்தச் சிறைச்சாலையை நாங்கள் பார்க்கச் சென்றபோது இராணுவக் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன. பல சிப்பாய்கள் துவக்குகளைக் கையிலேந்தியபடி சூழவுள்ள இடங்களில் காணப்பட்டனர். சிறைச்சாலைக்குப் பக்கத்தில் ஒரு மசூதி இருக்கிறது. மதச் சண்டைகள் காரணமாக இந்தச் சிறைச்சாலையோ அல்லது மசூதியோ தாக்கப்பட்டுத் தகர்க்கப் படலாம் என்ற காரணத் தினாலேயே இங்கு இந்த இராணுவக் கெடுபிடிகள்!

கிருஷ்ணன் சிறைச்சாலையில் பிறந்ததற்கான காரணம் என்ன?

மதுரா நகரத்தில் 'கம்சன்' என்பவன் தனது தங்கையான தேவகிக்கு யதுகுலத்தவரான வாசுதேவரைத் திருமணம் செய்து வைத்தான். திருமணம் முடிந்தபின் மணமக்கள் இருவரையும் தேரில் வைத்து மதுரா நகரின் சாலைகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்றான். அப்போது திடீரென கம்சனின் செவிகளில் ஓர் அசரீரி கேட்டது. 'எந்தத் தங்கையை அரசன் ஊர்வலமாகக் கொண்டு செல்கிறானோ, அதே தங்கையின் வயிற்றில் பிறக்கக்கூடிய எட்டாவது குழந்தை ஓர் ஆண்மகவாகப் பிறக்கும். அந்தக் குழந்தை வளர்ந்து அரக்க சுபாவம் கொண்ட இந்த அரசனைக் கொல்லப் போகிறது'. இதைக் கேட்ட அரசன் தங்கை என்றும் பாராமல் உடனே தேவகியைக் கொல்ல முற்பட்டான். அவளது கணவன் வாசுதேவன் உடனே காலில் விழுந்து, 'என் மனைவியைக் கொன்றுவிடாதே. எமக்குப் பிறக்கும் குழந்தைகளை உனக்கே தந்துவிடுகிறேன்' என்று மன்றாடினான். அதற்கு மனமிளகிய மன்னன், தேவகியைக் கொல்லாது விட்டான். ஆனால் அதற்குப் பதிலாக தங்கையையும் அவளது கணவனையும் சிறையிலிட்டான். அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கப் பிறக்க அவற்றைக் கொல்லவும் செய்தான். எட்டாவது குழந்தை ஆண்மகவாகப் பிறந்தது.

வெளியே கடும் மழை பெய்ய, அருகில் இருந்த யமுனை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோட காரிருள் சூழ்ந்த சிறைக்குள் கருநெய்தல் பூப்போன்ற திருமேனியுடன் அந்தக் குழந்தை பிறந்தது. அந்த நாட்டு அரசனின் தங்கை மகன் என்ற உறவோடு தங்கத் தொட்டிலில் பிறந்திருக்க வேண்டிய அந்தக் குழந்தை வௌவால்கள் வாசம் செய்யக்கூடிய சில்லிட்ட சிறைச்சாலையின் சுவர்களின் நடுவே பிறந்தது. குழந்தை பிறந்த பேரின்பத்தில் திளைத்திருக்க வேண்டிய தாய், தந்தையர் குழந்தை பிறந்துவிட்டதே இப்போது என்ன செய்வது எனப் பதைபதைத்தனர். சிறைக்காவலர்கள் அறியாவண்ணம் இரவோடு இரவாக, குழந்தையின் தந்தையாகிய வாசுதேவர் அந்தக் குழந்தையை ஒரு கூடையில் வைத்து அதைத் தனது தலைமேல்

வைத்து சுமந்து வெள்ளக்காடாகத் தோற்றமளித்த யமுனை ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள 'பிருந்தாவனம்' என்ற இடத்துக்குச் சென்றார். அங்கு அந்த நாட்டின் அரசனுக்கு கப்பம் கட்டவந்த பலர் கூடியிருந்தனர். அவர்களில் தனது நண்பர் நந்தகோபர் என்பவரும் வந்திருப்பதை அவதானித்தார் வாசுதேவர். அந்த நண்பரின் மனைவி யசோதையும் அதே வேளையில் ஒரு பெண் குழ்ந்தையைப் பிரசவித்திருந்தாள். என்ன செய்வதென்று யோசித்த நண்பார்கள் இருவரும் தத்தம் குந்தைகளை மாற்றிக்கொண்டனர். ஆண் குழந்தை இருந்த இடத்தில் பெண் குழந்தையும் பெண் குழந்தை இருந்த இடத்தில் ஆண் குழந்தையுமாக நண்பர்கள் திரும்பிச் சென்றனர்.

எட்டாவது குழந்தை பெண் குழந்தையாக இருப்பது கண்டு அரசனான கம்சன் சஞ்சலமுற்று வாசுதேவரையும் அவரது மனைவியான தேவகியையும் அதற்குமேல் சிறையில் வைப்பதால் எவ்விதப் பயனுமில்லை என நினைத்து அவர்களை அப்போதே விடுதலை செய்தான்.

கம்சனுக்கு இடையில் சந்தேகம் ஏற்பட்டு தன்னை அழிக்கக்கூடிய குழந்தை எங்கோ வளர்ந்து வருகிறான் என்பதைப் புரிந்து கொண்டான். தனது காவலர்களை அழைத்து தனது நாட்டிலுள்ள விசேட பலமும் சாமர்த்தியமும் நிறைந்த ஆண் குழந்தைகள் அனைவரையும் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான். வாசுதேவர், நாட்டிலுள்ள குழந்தைகளைக் கொல்லும் கம்சனின் உத்தேசத்தை உணர்ந்து உடனடி யாக யமுனை ஆற்றைக் கடந்து தமது நண்பரிடம் சென்று அதற்குமேல் அவர் அங்கிருப்பது ஆபத்தானது எனவும் உடன டியாக 'கோகுலம்' என்னும் ஊருக்குச் சென்றுவிடுவது நன்மை எனவும் உபதேசித்தார்.

குழந்தையாக இருந்த கிருஷ்ணர் கோகுலத்தில் ஆயர்பாடியில் வளர்ந்தார். ஆயர்பாடிகளின் வாழ்க்கை முறைக்கு ஒப்ப கிருஷ்ணர் மாடுகள் மேய்த்திட அனுப்பப் பட்டார். கிருஷ்ணர் புல்லாங்குழல் கொண்டு காட்சி அளிப்பதும் இந்தக் காலத்திலேதான். குழல் ஊதி, மாடு

மேய்த்து, நண்பர்களுடன் விளையாடி, வெண்ணெய் திருடி, குறும்புத்தனங்கள் செய்து காலத்தைக் கழித்த கிருஷ்ணர் ஆயர்பாடியின் செல்லப்பிள்ளையானார்.

கிருஷ்ணர் பத்தாவது வயதில் தனது ஆயர்பாடியில் தோழனான பலராமனுடன் மதுரா சென்று அங்கு நடைபெற்ற மல்யுத்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றார். அத்தோடு அங்கு கம்சனையும் கொன்று அழித்தார் என்பது புராண வரலாறு.

கிருஷ்ணர் பிறந்த சிறைச்சாலையைத் தரிசிப்பது பெரும் புண்ணியம் எனக்கருதி மதுராவுக்கு யாத்திரிகளர்கள் வருகின்றார்கள். இங்கு சிறைச்சாலையில் கிருஷ்ணர் சிலை ஏதும் இல்லை. சிறை மிகச்சிறிய இடமாகவும் இருள் கவிந்தும் காணப்படுகிறது. உள்ளே கிருஷ்ணரது படத்தை வைத்துத் தீபம் ஏற்றியிருக்கிறார்கள். உள்ளே இருக்கும் சிறிய மேடையை கிருஷ்ணர் பிறந்த இடமாகக் கருதி பக்தர்கள் பயபக்தியடன் தொட்டு வணங்கி ஆன்மீக உணர்வைப் பெறுகிறார்கள்.

பெரிதாகத் தரிசனம் செய்வதற்கு அங்கு ஏதுமில்லை. வெளியே வந்து 15 கி.மீற்றர் தொலைவிலுள்ள ஊருக்குள் சென் றால், அன்றைய கோகுலம் இன்றளவும் அதே கோகுலமா கவே காட்சி தருகிறது. ஆலமரத்தின் விழுதுகளும் அதிலே ஊஞ்சல் கட்டி விளையாடும் சிறுவர், சிறுமியரின் நிறமும் அந்தக் கிருஷ்ணனின் நிறமாகத்தான் இருக்கின்றன. யமுனா நதியும் அதன் தீரத்தில் இருக்கும் சிறிய மண்டபங்களும் அந்த மண்டபச் சுவர்களில் முதுகை உரோஞ்சிச் செல்லும் பசுக்களும் சிறுவர்களால் மேய்க்கப்படும் பசுக்கன்றுகளும், அந்தக் கன்றுகளைக் கூப்பிடும் தாய்ப்பசுக்களின் குரல்களும் கண்டு, கேட்டு, அனுபவித்து மகிழக்கூடியவை. அந்தக் குழல் ஊதும் கிருஷ்ணன் ஓடியாடி விளையாடி குறும்புகள் செய்த இடத்தில் நாமும் நடக்கிறோம் என்ற எண்ணம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

கிருஷ்ணர்பிறந்துவளர்ந்துவிளையாடியபூமியின்எல்லா இடங்களையும் 12 வனங்கள், 24 பூங்காக்கள், கோவர்த்தன கிரி,

புனித யமுனை அதன் முக்கிய படித்துறைகள் ஆகியவற்றைச் சுற்றிச் செல்லும் புனித யாத்திரை ஆண்டுதோறும் நடைபெறு கிறது. லட்சக்கணக்கில் மக்கள் இந்த யாத்திரையில் பங்கு கொள்கின்றனர் எனவும் அறிய முடிகிறது. மதுரா ஏழு முத்தித் தலங்களுள் ஒன்றாகவும் கூறப்படுகிறது.

இங்கு பழையதும் புதியதுமாகப் பல கிருஷ்ணர் கோவில்கள் இருக்கின்றன. கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாய் பிடித்த இடம், காளிங்க நர்த்தனம் செய்த இடம், கோபியரின் சேலைகளோடு மரத்தின் மீது அமர்ந்த இடம், மண்ணைத் தின்று யசோதைக்கு விசுவரூபம் காட்டிய இடம் எனப் பல இடங்கள் உள்ளன என்றும், இந்த இடங்களெல்லாம் போதுமான பராமரிப்பு இன்றித் தூய்மை குறைந்து காணப்படுகின்றன எனவும், இவையெல்லாம் சரியான இடங்கள் தானா என நம்புவதற்குச் சிரமமாக இருப்பதாகவும் ஒரு யாத்திரிகர் கூறினார். எது எப்படியோ புராணங்களில் சித்திரிக்கப்பட்டிருக்கும் அதீத நிகழ்வுகள் சாதாரணமாக மனித வாழ்க்கையில் நடப்பவை அல்ல. அவை ஆன்மீக அழுத்தம் நிறைந்த பௌதீக நிகழ்வுகள். அவற்றைப் புரிந்து கொள்ள ஆன்மீகக் கண்கள் வேண்டும்!

எமது வட இந்தியப் பயணம் தொடங்கிய நாளிலிருந்து கிருஷ்ணன் பிறந்த இடமான 'மதுரா' வைப் பார்க்கும்வரை நாம் ஒரு குளிரூட்டி வசதியுள்ள வானில் பயணம் செய்தோம். எமது பயணம் சிறப்பாக அமைவதற்கு குறிப்பாக கேதார்நாத், பத்ரிநாத் திருத்தலங்களை நாம் தரிசிப்பதற்கு காரணமாக இருந்தவர் தோமஸ் என்ற வாகனச் சாரதி. அவர் ஒரு கிறிஸ்தவர். ஆனால் இந்து சமய புராணக்கதைகள், தலச்சிறப்புகள் போன்றவற்றை அவர் நன்கு அறிந்திருந்தார். அவராகவே முன்வந்து நாம் பார்க்க வேண்டிய இடங்களுக்கு அழைத்துச் சென்றார். எமது வசதிகளை நன்கு கவனித்தார். அவருக்கு நன்றி தெரிவித்ததோடு அவரை மகிழ்வித்து அவரிடமிருந்து விடைபெற்றோம். அங்கிருந்து அலகபாத் எனப்படும் இடத்திற்குப் புகையிரதத்தில் பயணமானோம்.

**மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம்.**

அலகபாத் புகையிரத நிலையத்திலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர் தூரத்தில் திரிவேணி சங்கமம் இருக்கிறது. இங்கு புனித நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்றும் சந்திக்கின்றன. இந்தச் சங்கமத்தின் மகத்துவத்தை அறிய வேண்டுமானால் இந்த நதிகளின் சிறப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியப் பண்பாட்டுச் சிறப்பியல்புகளில் கங்கை ஆற்றுக்கு மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது. வேதங்கள், புராணங்கள், இராமாயணம், மகாபாரதம் ஆகிய எல்லாவற்றிலும் இந்த ஆறு பெருமையாகப் பேசப்படுகிறது. எல்லாக் கடவுளரும் தேவதைகளும் தத்தம் பாவங்களிலிருந்து விடுதலை பெற கங்கையில் குளிப்பதை புராணங்களில் காணலாம்.

இக்கங்கையில் நீராடுவதை ஒரு முக்கிய குறிக்கோளாக இந்துக்கள் கருதுவர். பனி மூடிய இமயமலைச் சாரலில் தொடங்கும் கங்கையின் பயணம் இந்தியாவின் பல ஊர்கள், கிராமங்கள், சமவெளிகள், வயல் வரம்புகளிலெல்லாம் ஓடி வளம் சேர்க்கிறது. 'அது பாயும் இடமெல்லாம்' நீருக்குப் பஞ்சமில்லை. விளை நிலங்களில் செழுமையாகப் பயிர்கள் உற்பத்தியாகின்றன. கங்கை பாயும் வேகத்தைக் கொண்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு பல தொழிற்சாலைகள் இயங்குகின்றன. பலகோடி மக்களுக்கு ஜீவாதாரமாகக் கங்கை விளங்குகிறது. இதன் கரையில் உள்ள புனிதத் தலங்களில் முக்கியமானவையாக ஹரித்தவார், ரிஷிகேஷ், வாரணாசி, அலகபாத் ஆகியவை விளங்குகின்றன.

இனி யமுனா நதி பற்றி நோக்குவோமானால் அதுவும் இமயமலையின் சாரலிலேயே உற்பத்தியாகிறது. மகாபாரதத்தோடும் கிருஷ்ணனின் லீலைகளோடும் யமுனை ஆற்றுக்கு நிறையத் தொடர்பு உண்டு. வசுதேவர் குழந்தை கிருஷ்ணனை சிறையிலிருந்து தூக்கிச் சென்றபோது வெள்ளைக்காடாக இருந்த யமுனை விலகி வழிவிட்டதாம். அப்படியிருந்தும் கிருஷ்ணன் நீரில் தவறி விழுந்துவிடுகிறார்.

அவர் காலடி பட்டவுடன் யமுனை நதி புனிதமடைந்ததாம். மேலும் கிருஷ்ணன் தன் நண்பர்களோடும் கோபிகைகளோடும் செய்த குறும்பெல்லாம் இந்த யமுனை நதிக்கரையிலேயே நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ண பிரானின் துணைவி என்றும் யமுனை சொல்லப்படுகிறாள். கிருஷ்ணரின் தெய்வீக வாசஸ்தலமான 'கோகுலம்' யமுனையின் வீடு எனக் கூறப்படுகிறது. சூரியக் கடவுளின் மகன் யமன் என்றும், மகள் யமுனை என்றும் புராணக் கதைகள் கூறுகின்றன. அதனால் யமுனையில் குளித்தால் மரணபயம் இருக்காது என மக்கள் நம்புகின்றனர்.

கங்கையும் யமுனையும் கண்ணுக்குத் தெரிவதுபோல் சரஸ்வதி தெரிவதில்லை. அது நிலத்தின் அடியிலிருந்து உற்பத்தியாகி இந்த இரு நதிகளுடன் கலக்கும் இடமே திரிவேணி சங்கமம் எனப்படுகிறது. இந்த சரஸ்வதி ஆறு பற்றி பண்டைய இந்திய நூல்களிலும் வேத நூல்களிலும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சரஸ்வதி ஆறு மிகப் பழமையானது. ரிக்வேத காலத்து ஆறு. ரிக்வேதத்தின் 'நதிஸ்துதி' சுலோகத்தில் சரஸ்வதி ஆறு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆற்றின் உருவிலேதான் முதலில் இறைவி சரஸ்வதி உருவகப்படுத்தப்பட்டாள். பிற்காலத்தில் ஆறு என்பதாக இல்லாமல் சரஸ்வதி தனி அடையாளத்தையும் உருவத்தையும் பெற்று கல்விக்கு இறைவியாக வணங்கப்படுகிறாள்.

இந்த மூன்று புனித நதிகளும் சந்திக்கும் இடத்தில் நீராடுவதைப் பிறவிப் பெரும்பயனாக இந்துக்கள் கருதுகின்றனர். யமுனையின் வேகம் குறைவு. கங்கையின் வேகம் அதிகம். வெண்மை நிறங்கொண்ட கங்கை கருமை நிறங்கொண்ட யமுனையுடன் இரண்டறக் கலக்கிறது.

இந்த இடத்தில் பிரம்மன் பத்து யாகங்கள் செய்ததாகப் புராணம் கூறுகிறது. சிறந்த யாகங்கள் நடந்த இடமாதலால் இது 'பிரயாகை' எனப்படுகிறது. 'கும்பமேளா' என்னும் திருவிழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கு நடைபெறுகிறது. ரிஷிகள், முனிவர்கள், ஞானிகள், சித்தர்கள் ஆகி

யோர் நாடு முழுவதிலுமிருந்து இங்கு வந்து நீராடி பூஜித்து வழிபடுகின்றனர்.

இந்தச் சங்கமத்தில் நீராடி மக்கள் தன்கடன், தெய்வ கடன், முன்னோர்களுக்கான கடன் ஆகிய சிரார்த்தங்கள் செய்கிறார்கள். ஆண்கள் இத்தகைய ஆத்ம தர்ப்பணம் செய்யும்போது பெண்கள் 'வேணி தானம்' எனப்படும் கிரியை செய்கிறார்கள். இப்பிறவியில் கணவன், மனைவியாக இருப்பவர்கள் வேணிதானம் செய்தால் இனிவரும் பிறவி களிலும் கணவன் மனைவியாக இணைவார்களாம்.





# 15

# இந்து மதத்தின் தலைமைப்பீடம் – காசி

அகலபாத்திலிருந்து காசிவரை நாம் பயணம் செய்வதற்கும் அங்கு செய்ய வேண்டிய கிரியைகள் ஒழுங்காகச் செய்வதற்கும் எமக்கு உதவியாக இருந்தவர் பழுழு என்ற இளைஞர். இவர் காசியில் இருக்கும் புரோகிதர் கேதார் என்பவரின் உதவியாளர். கேதாரிடம் நாங்கள் ஏற்கனவே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அலகபாத்திலும் காசியிலும் செய்ய வேண்டிய கிரி யைகள் பற்றித் தெரிந்து கொண்டோம்.

பழுழு காசியில் இருந்து புறப்பட்டு அலகபாத் புகையிரத நிலையத்தில் எம்மை அழைத்துப்போக வந்திருந்தார்.

காசி யாத்திரையில் 'பிரயாகை' எனப்படும் அலகபாத்தும் திரிவேணி சங்கமச் சடங்குகளும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

பாவம் செய்தவர்கள் தமது பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதினால் அவர்கள் பிரயாகை செல்லவேண்டும் என்று 'கூர்மபுராணம்' கூறுகிறது. பிரயா கைக்குச் சென்ற பின்னரே காசிக்குச் செல்லவேண்டும் எனவும் அப்புராணம் கூறுகிறது. பிரயாகை இப்போது அலகபாத் என ஆங்கிலேயரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நமக்கு முன்பாக நமது பரம்பரையில் எவ்வளவோ பேர் இறந்து பரலோகம் சென்றிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் பிதிர்களென அழைக்கிறோம்.

பிதிர்கள் தேவர்களுக்குச் சமமானவர்கள். அவர்களை, அவர்களது சந்ததியினர் வழிபடவேண்டும் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. பிதிர்கள் இறந்த திதியன்றும் அமாவாசை தினங்களிலும் மாதப்பிறப்பு புண்ணிய காலம் போன்ற தினங்களிலும் பிதிர்களுக்கு சிராா்த்தம் (திவசம்) செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

பிதிர்கள் எல்லோரும் முக்கியமானவர்கள் எனினும், அவர்களில் தந்தை, பாட்டன், பாட்டனின் தந்தை ஆகியவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். அதேபோன்று தாய், தந்தை வழிப்பாட்டி, பாட்டனின் தந்தையின் மனைவி ஆகியோரும் முக்கியமானவர்கள். இவர்களுக்கு பிரயாகையிலும் காசியிலும் சிராா்த்தம் செய்வது சிறந்தது. “தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல்தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல்தலை” என்றார் திருவள்ளுவர். இதில் தென்புலத்தார் என்பது பிதிர்களைக் குறிக்கும்.

நாங்கள் திரிவேணி சங்கமத்தில் இருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள ஒரு சத்திரத்தில் தங்கி, அங்கு இருக்கும் புரோகிதர் ஒருவரின் உதவியுடன் பிதிர்தர்ப்பணம் செய்தோம். பிதிர் தர்ப்பணம் செய்வதற்கு ஏற்ற இடங்களும் இதனைச் செய்யப் பாண்டித்தியம் பெற்ற புரோகிதர்களும் இங்கு பலர் இருக்கிறார்கள். இவர்கள் சமஸ்கிருத பண்டிதர்கள்.

பிதிர் தர்ப்பணத்தின் பின் நாங்கள் ‘திரிவேணி சங்கமம்’ நோக்கிப் பயணித்தோம். போகும் வழியில் ஸ்ரீ ஆதிசங்கரர் விமான மண்டபத்தைத் தரிசித்தோம். காஞ்சி ஸ்ரீ சங்கர மடத்தால் நிறுவப்பட்ட மூன்றடுக்கு கொண்ட அழகிய ஆலயம் இது. முதலாவது தட்டில் காஞ்சி காமாட்சிக்கும் இரண்டாவது தட்டில் திருப்பதி பாலாஜிக்கும் மூன்றாவது தட்டில் சகஸ்ரலிங்கத்திற்கும் ஆலயங்கள் இருக்கின்றன.

நாங்கள் அங்கு சென்றவேளை சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம், பூஜை, ஆராதனைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ‘சகஸ்ரலிங்கம்’ என்றால் ஆயிரம் லிங்கம் என்று பொருள்படும். பிரமாண்டமான ஒரு சிவலிங்கத்தில் ஆயிரம் லிங்கங்களின்

உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

அர்ச்சகர் ஓர் உயரமான ஏணியை வைத்து அதிலேறி நின்று சகஸ்ரலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார். முதல் முறையாக வாழ்க்கையில் ஒரு சகஸ்ர லிங்கத்தைத் தரிசித்து அதற்குச் செய்யப்படும் அபிஷேக ஆராதனைகளைக் காணும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது பெரும் மனம் நிறைவைத் தந்தது.

அதன் பின்னர் திரிவேணி சங்கமத்திற்குச் சென்றோம். கங்கை ஆற்றின் கரையில் இருந்து சில மைல் தூரம் படகில் சென்றால் கங்கை யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிக்கும் திரிவேணி 'சங்கமத்தை' அடையலாம். படகில் செல்லும்போது கணவன் மனைவியாகச் செல்பவர்கள் 'வேணி பூஜை' செய்வார்கள். இந்த வேணி பூஜையைச் செய்வதற்கு ஆற்றங்கரையில் புரோகிதர்கள் இருக்கிறார்கள். இவர்களை 'பண்டா'க்கள் என அழைக்கிறார்கள்.

கணவன் மனைவியாக வருபவர்கள் படகில் ஏறியதும் பண்டா அவர்களது கையில் மலர் மாலைகளைக் கொடுத்து ஒருவர் கழுத்தில் ஒருவர் போடுமாறு செய்கிறார். பின்னர் மனைவியின் புடவைத் தலைப்பையும் கணவனின் வேட்டி நுனியையும் முடிந்து விடுகிறார். மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து அதற்குப் பூஜைகள் செய்தபின் மனைவியின் தலையை வாரிப் பின்னுமாறு கணவனிடம் கூறுகிறார். மனைவியின் கூந்தலில் மலர் சூடி நெற்றியில் குங்குமத் திலகம் இடுமாறு கூறுகிறார். மனைவியிடம் ஒரு கத்திரிக் கோலைக் கொடுத்து அதனை கணவனிடம் கொடுக்கும்படி கூறுகிறார். கணவன் அந்தக் கத்திரிக்கோலை வாங்கி மனைவியின் வாரிப் பின்னப்பட்ட கூந்தலின் நுனியை வெட்டி எடுக்க வேண்டும். பின்னார் கணவன் மனைவி இருவரும் அதற்கு அபிஷேகம் பூஜையெல்லாம் செய்து, மஞ்சள் பிள்ளையாருடன் அந்தக் கூந்தலின் வெட்டியெடுக்கப்பட்ட நுனியை இணைத்து இருவருமாகத் திரிவேணி சங்கமத்தில் போட்டு ஸ்நானம் செய்யவேண்டும். தலைமயிர் தண்ணீரில் மிதக்கக்கூடியது. ஆனால் இந்தக் கிரியையின் பின்னர் திரிவேணி சங்கமத்தில்

இடப்படும் தலைமயிர் மிதப்பதில்லை, தாாழ்ந்து போய் விடுகிறது. இந்த வேணி பூஜை செய்யும் கணவன், மனைவி இனி வரும் பிறவிகளிலும் கணவன் மனைவியாக இணைவர் என்று நம்பப்படுகிறது.

மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் ஆழமா னது. வேகம் மிக்கது. படகோட்டிகள் இரு படகுகளைப் பக்கம் பக்கமாக நிறுத்தி அவற்றின் நடுவே மரத்தினாலான ஒரு மேடையைக் கயிற்றில் கட்டி இறக்கி, அந்த மேடையில் நின்று ஸ்நானம் செய்வதற்கு வசதி செய்து தருகிறார்கள்.

கங்கை நதியில் ஸ்நானம் செய்தாலே நாம் செய்த பாவங்கள் நீங்கிவிடும் என்கிறார்கள். இப்போது மூன்று நதிகளின் சங்கமத்தில் ஸ்நானம் செய்கிறோமே என்ற எண்ணம் மனதில் மகிழ்வையும் சாந்தியையும் ஆன்மீக உணர்வையும் ஏற்படுத்தியது. ஸ்நானம் செய்து முடிந்தபின் கங்கையை வணங்கி நாங்கள் கொண்டு சென்ற 'பிளாஸ்டிக் கான்' களில் திரிவேணி சங்கமத் தீர்த்தம் எடுத்துக் கொண்டோம்.

**இந்து மதத்தின் தலைமைப்பீடம் காசி.**

இந்து மதத்தின் தலைமைப்பீடமாகக் கருதப் படுவது காசி. இது பழைமையானதும் யாவராலும் போற் றப்படுவதுமான நகரம். உலகின் எல்லா இடங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் ஆயிரக்கணக்கில் இங்கு கூடுகிறார்கள். இந்திய ஆறுகளில் மிகவும் புனிதமான கங்கையின் பிறைச்சந்திரன் போன்ற வடக்குக் கரையில் எழில்மிகும் நகரமான காசி அமைந்திருக்கிறது. இந்த ஆற்றுக்கும் இந்தப் புனிதத் தலத்திற்கும் இடையேயுள்ள சிறப்பான உறவுதான் இந்தக் காசி நகரத்தின் மகத்துவம். "கங்கைக்கு நிகரான நீரும் இல்லை காசிக்கு நிகரான ஊரும் இல்லை" என்ப முதுமொழி. காசி யில் தங்குவது என்பது உலகிற்குப் புறத்தே உள்ள ஓர் இனிய அனுபவம். அழிவற்ற நிலையை அடைவதற்கான நிகழ்காலம், இறந்தகாலம் ஆகியவற்றினூடே செல்லும் ஓர் இனிமையான பயணம். இந்நகரின் வடக்கே 'வருணா' என்னும் ஆறும் தெற்கில் 'அசி' என்னும் ஆறும் பாய்வதால் இதனை

‘வாரணாசி’ என்றும் கூறுவர், வாம புராணம், புத்தமத நூல்கள், மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றில் வாரணாசி பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

காசியின் வாழ்க்கையும் அதன் செயற்பாடுகளும் கங்கை ஆற்றை மையப்படுத்தியே நடைபெறுகின்றன. சூரியன் உதிக்குமுன்பு விடியலிலே கங்கைக் கரையில் ஒவ்வொரு நாளின் செயற்பாடும் தொடங்குகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆண், பெண் குழந்தைகள் கும்பலாகவும் தனியா கவும் பாவத்தையும் துயரங்களையும் போக்கிக்கொள்ள இந்தப் புனித நதியில் நீராடும் தருணத்திற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். சூரியன் உதயமானவுடன் ஆற்றின் படித்துறைகளில் மனித இயக்கம் சுறுசுறுப்பாகத் தொடங்குகிறது. பண்டாக்கள் என்றழைக்கப்படும் அந்தணர் கள் வேத பாராயணம் செய்கிறார்கள். பிரசாதமாக விபூதி வழங்கப்படுகிறது. படகுக்காரர்கள், பூ விற்போர், தின் பண்டங்கள் விற்போர் என மக்கள் கூட்டம் அதிகமாகிறது. ஒரு புறத்தில் எருதுகளும் பசுக்களும் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன. இவையெல்லாம் ஆண்டாண்டு காலமாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

காசி யாத்திரை செய்பவர்கள் ஐந்து முக்கியமான கட்டளைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**1) யாத்திரை முழுவதும் பக்தி உணர்வே மேலோங்க வேண்டும்.**

**2) கணவன் மனைவி இருவரும் சேர்ந்துதான் யாத்திரை செய்ய வேண்டும். தனியாகச் சென்றால் பலன் கிடைக்காது.**

**3) யாத்திரையின் போது கணவனும் மனைவியும் சேர்ந்து எல்லாச் சடங்குகளையும் வழிபாடுகளையும் செய்ய வேண்டும்.**

**4) யாத்திரையின் போது புலனடக்கம் மிக மிக அவசியம்.**

**5) காசி யாத்திரையின் பிரதான நோக்கம் பிதிர் வழிபாடு.**

காசித் திருத்தலத்தில் செய்ய வேண்டிய வைதீகக் காரியங்கள் தரிசனம் செய்து பூஜிக்க வேண்டிய தேவதை கள் சம்பந்தமாக ஓர் ஒழுங்கு, கிரமம் உண்டு. இவற்றை முறைப்படியும் சாஸ்திரங்களுக்கு இசைவாகவும் செய்வதற்கு

இங்கு புரோகிதர்கள் இருக்கிறார்கள்.

காசியில் உள்ள சிவன் ஆலயம் ஒன்றில் கேதார் என்பவர் புரோகிதராக இருக்கிறார். நாம் பிதிர் வழிபாடு செய்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

நாங்கள் முறைப்படி சிரார்த்தங்கள் செய்தோம். அந்தணர்களுக்கு அன்னதானம், வஸ்திரதானம், சுவர்ணதானம், கோதானம் போன்றவற்றைச் செய்தோம்.

கங்கை நதிக்கரையில் 10 கிலோமீற்றர் அளவிற்குள் 64 புண்ணிய படித்துறைகள் இருக்கின்றன. இவற்றில் ஐந்து படித்துறைகள் முக்கியமானவை. இந்த ஐந்து படித்துறைகளுக்கும் படகில் சென்று நீராடி பிண்டம் போட்டு எள்ளும் தண்ணீரும் இறைத்து பிதிர் சிரார்த்தம் செய்தோம்.

எரிந்து கொண்டிருக்கும் மனித உடல்களை ‘மணிகர்ணிகா’ என்னும் படித்துறையிலும் ‘அரிச்சந்திரா’ என்னும் படித்துறையிலும் காணலாம். ‘அரிச்சந்திரா’ படித்துறையிலேதான் அரிச்சந்திரன் சுடலை காப்போனாகப் பணியாற்றியதாகக் கூறுகிறார்கள். பாதி எரிந்த நிலையில் பிணங்களைக் கங்கையில் இழுத்து விடுகிறார்கள். அவை கங்கையில் மிதந்து செல்வதை நாம் கண்ணுற்றோம். அப்படி மிதந்து செல்லும் பிணங்களில் காகங்கள் உட்கார்ந்திருந்து அவற்றைக் கொத்தித் தின்றபடி பயணிக்கும் காட்சி இங்கு சர்வசாதாரணமானது.

காசியிலும் அயலூர்களிலும் இறப்பவர்களை தகனம் செய்ய கங்கைப் படித்துறைக்குக் கொண்டுவருகிறார்கள். இதனால் காசித் தெருக்களில் பயணம் செய்யும்போது எதிரே பிணம் காவிவரும் காட்சியை அடிக்கடி காணலாம்.

தாயார் அல்லது தகப்பனார் இறந்துவிட்டால் அவர்களது அஸ்தியை (எரிந்து மீதப்பட்ட எலும்புகள்) பத்திரமாக எடுத்துச் சென்று காசித் திருத்தலத்தில் கங்கையில் போடவேண்டும் என்று ‘பிரம்மபுராணம்’ தெரிவிக்கின்றது.

இறந்தவரது அஸ்தியை ஆட்டுத்தோல் அல்லது கம்பளம், பட்டுத்துணி இவைகளில் வைத்துக் கட்டி அதன்மேல் தர்ப்பையால் கற்றவேண்டும். நீர், பால் விட்டு விதிமுறைப்படி அதற்கு அபிஷேகம் செய்து பின்னர் அந்த அஸ்தியை கங்கையில் போட வேண்டும். ஒருவரது அஸ்தி எவ்வளவு ஆண்டுகள் கங்கையில் இருக்கிறதோ அவ்வளவு ஆண்டுகள் அவர் புண்ணிய உலகில் வாழ்வார் என்றும் இந்தப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

கங்கை நீர் புனிதமானது. கிருமிகள் அற்றது. கங்கை நீரைப் பரிசோதனை செய்த மேனாட்டார் அது கிருமிகள் அற்ற தூய்மையான நீர் என்பதைக் கண்டு அதிசயித்திருக்கிறார்கள். இமயமலையில் உள்ள மூலிகைகளைத் தழுவி வருவதால் கங்கை நீருக்குக் கிருமிகளை அழிக்கும் சக்தி கிடைக்கிறது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**காசி விசுவநாதர்.**

காசியில் பிதிர் வழிபாடு, சிரார்த்தம் ஆகியவற்றை முடித்தபின்பு நாங்கள் காசி விசுவநாதரைத் தரிசிக்கச் சென்றோம். முத்தித் தலங்கள் ஏழினுள் காசி முக்கியமானதாக இருப்பதுபோல பன்னிரெண்டு ஜோதி லிங்கங்களில் காசி யில் உள்ள விஸ்வேஸ்வரர் லிங்கமும் முக்கியமானது. இந்த லிங்கத்தின் தலையில் அருச்சுனன் வில்லால் அடித்த தழும்பு காணப்படுகிறது. இந்த ஆலயத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவெனில், பக்தர்கள் அனைவரும் மூலஸ்தானத்திற்குள் நுழைந்து கங்கையிலிருந்து கொண்டுவந்த நீரினால் லிங்கத் திற்கு அபிஷேகித்து மலர்களால் பூஜித்து கைகளால் தொட்டுத் தழுவி வழிபடலாம்.

ஆலயத்தின் பிரதான வாயில் தெற்குப் பக்கமாக அமைந்திருக்கிறது. கருவறையில் இரண்டு அடி சம வெள்ளித் தகடு வேய்ந்த தொட்டியினுள் இரண்டு அடி உயரமுள்ள லிங்கம் காட்சி தருகிறது.

விசுவநாதர் கோயிலின் பின்புறத்தில் ஆதி விசுவநாதர் சந்நிதி முன்னர் இருந்துள்ளது. அது இப்பொழுது

பள்ளிவாசலாக உள்ளது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் முகம்மதியர் படையெடுப்பின்போது அவுரங்கசீப் மன்னன் இக்கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டான். ஆதிவிசுவநாதரை அங்குள்ள கிணற்றினுள் பக்தர்கள் பதுக்கி வைத்திருந்ததாகவும் பின்னர் நாராயண பட்டர் என்ற பக்தரின் கனவில் இறைவன் தம் இருப்பிடத்தைக் கூற அவர் அதனை எடுத்துக் கோயில் கட்டி வழிபட்டதாகவும் கூறுவர். இந்தூர் இராணி அகல்யாபாய் 1776 இல் இக்கோயிலைப் புதுப்பித்துக் கட்டினார். 19ஆம் நூற்றாண்டில் பஞ்சாப் மகாராஜா ரஞ்சித்சிங் இக்கோயிலின் மேற்கூரையைத் தங்கத்தினால் வேய்ந்தார். காசிக்கு வந்து கங்கையில் நீராடி விசுவநாதரை தரிசிப்பவருக்கு மறுபிறவி இல்லை என்று கூறப்படுகிறது.

அடுத்து அன்னபூரணி கோயிலுக்குச் சென்றோம். இவ்வாலயம் காசி விசுவநாதர் கோயில் அமைந்திருக்கும் அதே வீதியில் நூறு அடி தூரத்தில் உள்ளது. மராட்டிய மன்னர்கள் இந்த ஆலயத்தைக் கட்டியதாகக் கூறுகிறார்கள். அன்னபூரணி உலக மக்கள் அனைவருக்கும் உணவளித்து வாழ்வளிப்பவள். காசியில் ஈசனுக்கே அன்னம் அளிப்பவள் இவள் என்பது ஐதீகம். கர்ப்பகிரகத்துக்கு நேர் எதிரில் உள்ள எண்கோண மண்டபத்தில் இருந்துதான் அன்னையைத் தரிசிக்க முடியும். பன்னிரண்டு தூண்கள் தாங்கி நிற்கும் அழகிய சபா மண்டபம் இது. அன்னபூரணி நின்ற நிலையில் இடது கையில் அன்னப் பாத்திரத்தையும் வலது கையில் கரண்டியையும் தாங்கியபடி காட்சி தருகிறாள். தலையில் மணிமகுடம். மார்பிலும் திருக்கரத்திலும் மணிமாலைகள், கழுத்தைச் சுற்றி நவரத்தின மணிமாலைகள் என அன்னை காட்சி தருகிறாள். அன்னபூரணியைத் தரிசித்தால்தான் காசி யாத்திரையே முழுமைபெறுகிறது. அன்னையைத் தரிசிக்கச் சென்ற வேளையில் அங்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அன்னையை வழிபட்டு குங்குமம் பிரசாதம் பெற்றுக்கொண்டோம்.


மதவெறி பிடித்த வேற்று அரசர்களின் அரசாட்சிக்

காலத்தில் வடநாட்டிலிருந்த இந்துக் கோயில்களுக்கு அடிக்கடி ஆபத்துகள் ஏற்பட்டன. பொதுவாகக் காசி யில் உள்ள ஆலயங்களுக்குத் தீங்குகள் வரக்கூடும் என்ற அச்சத்தினால் இங்குள்ள கோயில்கள் விசாலமான பெரிய வீதிகளில் அமைந்திருக்கவில்லை. அனைத்து ஆலயங்களும் காசிமாநகரின் வளைந்து செல்லும் சந்து பொந்துகளிலேதான் உள்ளன.

அடுத்து நாங்கள் காலபைரவர் கோயிலுக்குச் சென்றோம். கால பைரவர் காசிக்கு காவலர். இவர் காசி விசுவநாதரின் அமைச்சர் என்றும் சொல்லப்படுகிறது. காசிக் கயிறு என்று சொல்லப்படும் கறுப்புக் கயிறு இங்கு தயாரித்து விற்கப்படுகிறது. காசிக்குச் செல்பவர்கள் கால பைரவர் முன் வைக்கப்பட்ட காசிக் கயிற்றை வாங்கிப் போய் எல்லோருக்கும் பிரசாதமாக வழங்குகிறார்கள்.

அதேபோன்று காசிக்குச் செல்பவர்கள் சிறிய அன்னபூரணி உருவங்களை வாங்கிச் சென்று எல்லோருக்கும் வழங்குவது மரபாக உள்ளது.

காசி யாத்திரையுடன் எங்களது வட இந்திய பயணம் நிறைவு பெற்றது. இந்தப் பயணத்தில் நாங்கள் இமயமலைச் சாரலில் உள்ள கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய தலங்களைத் தரி சித்ததும், திரிவேணி சங்கமம், காசி ஆகிய தலங்களில் நீராடி பிதிர் சிரார்த்தம் செய்ததும் எமது வாழ்வின் பெரும்பேறாக அமைந்தன; பிறவிப் பயனைப் பெற்ற மனநிறைவைத் தந்தன.



திரு. தி.ஞானசேரகன் அவர்கள் இந்நூலில் இரு விதமான நோக்கில் நம்மையெல்லாம் தம்முடன் அழைத்துச் செல்கிறார். ஒன்று அவருடன் உள்நின்று இயக்கும் ஆத்ம ஞானம். அந்தவழி அவர் பக்திப் பரவசத்துடன் தாம் தரிசித்த தலங்கள் எல்லாவற்றிற்கும் நம்மையும் அழைத்துச் செல்கின்றார். கங்கா ஸ்நானம், திரிவேணி சங்கம ஸ்நானம், கேதார்நாத், பத்ரிநாத், காசி விசுவநாதர் தரிசனம் ஆகியவை பற்றி அவர் விபரிக்கின்ற போது நாமும் ஸ்நானம் செய்து, தரிசனம் காணும் பேறு பெறும் வகையில் அவர் விபரித்துச் செல்கின்றார். மற்றையது ஒரு யாத்திரிகன் என்ற தளத்தைத் தாண்டி ஒரு படைப்பாளியின் மனோபாவத்துடன் அவர் படைத்துள்ளார். அதனால்தான் அது சுவாரசியமாக இருக்கின்றது. அத்துடன் புராண இதிகாச சம்பவங்களையும் பொருத்தமுற விபரித்துச் செல்லும் அவர், செல்லும் மார்க்கம், தூரம், பிரயாண ஊடகம், தங்குமிட வசதி, வழியருமை முதலான விடயங் களையும் பயனுள்ள வகையில் ஆங்காங்கே விபரித்துச் செல்கிறார்.

நூலாசிரியரது பயண அனுபவம் இன்னோர் வகையில் டில்லியையும் அதனைச் சூழவுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் சுற்றிச் சுழல்கின்றது. காதல் சின்னம் - தாஜ்மகால், வாஸ்து சம்பிரதாய - ஜெய்பூர், அக்பரின் முன்னோர்களின் - ஆக்ரா கோட்டை, கிருஷ்ணரின் ஜனன பூமி - மதுரா, ஆகிய இடங்களுக்கும் சென்று, கண்டு கேட்டு, உய்த்து, உணர்ந்து விடயங்கள் யாவற்றையும் மிக நேர்த்தியுடன் விபரித்துள்ளார்.

- பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்

ஞானம் பதிப்பகம்



ISBN: 978-955-8354-33-9
9 789558 354339